15-1-50

சுதேசமித்திரன்

THE SWADESAMITRAN WEEKLY Price 4 A

12593
1-50

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 FEB 1950
MADRAS

2211, N30S
N50.21.50.
198555

சுதேசமித்திரன் புத்தகசாலை,

விக்டரி ஹவுஸ், :: மவுண்ட்ரோட், சென்னை

அடியில்கண்ட ரயில்வே பிளாட்பாரங்களில் எமது புத்தகசாலைகள் இருக்கின்றன.

ரயில்வே ஸ்டால்கள்

1.	விழுப்புரம்.	15.	ஈரோடு ஜங்ஷன்.
2	கூடலூர் N.T.	16.	திருப்பூர்.
3	கும்பகோணம்.	17.	மாயவரம் ஜங்ஷன்.
4.	விருதுநகர்:	18.	விருத்தாசலம்.
5.	கோயம்பத்தூர்	19.	பொள்ளாச்சி.
6.	திருவாரூர்.	20.	ஸ்ரீவைகுண்டம்.
7.	திண்டுக்கல்.	21.	திருத்துறைப் பூண்டி.
8.	திருச்சிகோட்டை.	22.	பழனி.
9.	திருச்சி ஜங்ஷன்.	23.	பரமக்குடி.
10.	கரூர்.	24.	தாம்பரம்.
11	மானாமதுரை	25.	மதராஸ் பீச்
12	தென்காசி.	26.	திருநெல்வேலி.
13.	சேலம் மார்கெட்.	27	ஒலவக்கோடு
14.	மதுரை ஜங்ஷன்.	28.	செங்கற்பட்டு
		29.	தூத்துக்குடி

பிராஞ்சு: திருப்பதி.

மேற்படி இடங்களில் எல்லா விதமான இங்கிலீஷ், தமிழ்ப் புத்தகங்களும், தினசரி, வார பத்திரிகைகளும், அமெரிக்கா, இங்கிலாந்து முதலியவிடங்களில் பிரசுரமாகும் வாரப் பத்திரிகைகளும், மாதப் பத்திரிகைகளும் கிடைக்கும்.

மானேஜர்,

சுதேசமித்திரன் புத்தகசாலை,

விக்டரி ஹவுஸ் மவுண்டுரோடு சென்னை



198556

சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு
பொருளடக்கம்

பக்கம்.

அன்றும் இன்றும்	ஸ்ரீமதி கோமதிஸ்வாமிநாதன்	5
தேர்த்தட்டு வார்த்தை	வாரன்	9
கலா மண்டபம்		11
பழங்கள்	நாராயணய்யா	15
மின்னலே !	நெற்குப்பை-ராமசுப்ரமண்யன்	17
உங்கள் கால பலன்	பி வி. ராவ்	18
வாழ்க்கைச் சுழல் (தொடர் கதை)	இந்து	23
காவிரியின் கரைகளில்	ப ரா.	30
விஷப் பரீட்சை	குருநாத்	35
குடும்ப வைத்தியம்	குச்சாமாமா	39
விசாகை கடற்படைப் பயிற்சி ஸ்தாபனம்		42
காட்டில் செய்யுள் பாடம் (சிறுவர் கதை)	மணி	46

"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் முற்றிலும் கற்பனையே, அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol XXI] விரோதிஞு தைமீ 2உ ★ 1950-ஞு ஜனவரிமீ 15உ No 50

புதிய ஆசியா ஒரு சோதனை

கம்யூனிஸ்ட் சீனாவுக்கு பிரிட்டிஷ் சர்க்காரின் அங்கீகாரம் இம்மாதம் முதல் வாரத்தில் கிடைத்துவிட்டது. ஏற்கெனவே பெரும்பாலான ஆசிய நாடுகளின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ள புதிய சீன சர்க்காரை இனி எந்த நாடும் உதாசீனம் செய்வதற்கில்லை. புதிய சீன அரசாங்கத்தை அங்கீகரிப்பதால், அதன் தத்வங்களையோ, கொள்கைகளையோ ஆதரிப்பதாகாது. ஆனால் தங்களுக்கு இஷ்டமானதொரு அரசாங்கத்தை நிறுவிக் கொள்ள அந்நாட்டு மக்களுக்குள்ள அடிப்படை உரிமையை அங்கீகரிப்பதைத்தவிர வேறு வழியில்லை. சீன மக்களின் நன்மையிலும் அந்நாட்டின் பிராந்திய சுதந்திரத்திலும் அக்கரைகொண்டுள்ள எந்த நாடும் அந்நாட்டின் புதிய நிர்வாகத்துடன் ராஜிய உறவு ஏற்படுத்திக்கொள்வதை இனி தாமதிக்காது என்பது திண்ணம். அம்முடிவு எவ்வளவு நாள் ஒத்திப்போடப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சீன மக்களுக்கும் பாதகம்; அதன்விளைவாக உலக நல் வாழ்வுக்கும் ஹானி என்பது மிகையாகாது.

கம்யூனிஸ்ட் சீனாவை அங்கீகரிப்பதால், அப்பிரதேசத்தில் கம்யூனிஸ்டு செல்வாக்கு பரவுவதற்கு ஆக்கம் ஏற்படுமென்று சிலர் அஞ்சுகின்றனர். அமெரிக்காவில் செல்வாக்குள்ள ஒரு சாராரிடையே இத்தகைய அச்சம் இருந்துவருகிறது. இது உண்மையில் வீண் பீதி, உள்ள நிலைமையை அறியாததன் விளைவு. பெரும்பாலான மக்களின் சம்மதத்தின் பேரில் அமைந்த ஒரு சர்க்காரை அங்கீகரித்து, அம்மக்களுடன் நல்லுறவு கொள்வதால் கம்யூனிஸ்ட் அபாயத்தை குறைத்ததாகுமே யொழிய பெருக்கியதாகாது. இதற்கு மாறாகச் செய்வதால் துவேஷமும் கொந்தளிப்புமேதான் ஏற்படும். தவிர, மேற்கத்திய வல்லரசுகளின் நல்லெண்ணங்களை சீன மக்கள் சந்தேகிக்கும்படி நேரிடும்.

புதிய சீனா அங்கீகாரத்தை எவ்வாறு அலட்சியம் செய்யமுடியாதோ அதே போலவே, ஆசிய கீழ்க்கோடி பிரதேசத்தில் புது நிலைமைக்கேற்ப கொள்கையை உருவாக்கிக்கொள்ளவேண்டியதன் அவசியத்தையும் மேற்கத்திய வல்லரசுகள் புறக்கணிக்கமுடியாது. ஆசியாவில் தேசீய விழிப்பு ஏற்பட்டு பல நாடுகள் சுதந்திரம் பெற்றெழுந்துவிட்டன நெடுநாளாக அந்நிய ஆதிக்கத்தின் கீழ் இருந்த ஆசிய நாடுகள், வளர்ச்சி தடுக்கப்பட்டு மிகவும் பிற்பட்ட நிலையில் இருக்கின்றன. அந்நாட்டு மக்களின் சுகவாழ்வுக்கு வகை செய்ய வேண்டும். இங்ஙனம் பலவீன நிலையிலிருக்கும் மக்களுக்கு கம்யூனிஸம் வாய்ப்பந்தல்களைப் போடுகிறது. இது ஒரு பெரிய அபாயம். இன்னொருபுறத்தில் காலனி முறையின் கோரத்தாண்டவத்தைக் காண்கிறோம். பிரெஞ்சு போர்த்துகீய ஏகாதிபத்தியங்களுக்கு உண்மை நிலைமை இன்னம் விளங்கவில்லைபோலும்! இந்தோ-சீனாவில் விடுதலைக்காகப் போராடும் மக்கள் மீது பிரஞ்சு சர்க்கார் அடாயுத்தம் நடத்திவருகிறது. இவை ஆபத்தை யுண்டாக்கக்கூடிய விஷயங்கள்.

மேற்கத்திய வல்லரசுகளின் ஜனநாயக முறைக்கும் நன்னோக்கங்களுக்கும் புதிய ஆசியா ஒரு சோதனையாக இருக்கிறது. ஜனநாயகத்தைப்பற்றி வாயளவில் அலங்காரம் செய்துவிட்டால்போதாது. மக்கள் உரிமையை இன்றே அங்கீகரித்தாகவேண்டும். சமாதானத்துக்கான ஸ்திரமான அஸ்திவாரத்தைப் போடவேண்டும் மக்கள் இஷ்டபூர்வமாக அமைத்துக்கொண்ட சர்க்கார்களை அங்கீகரியாமல் பொம்மை சர்க்கார்களை வைத்துக்கொண்டு மக்களின் உண்மை இயக்கங்களை ஒடுக்குவதும், காலாவதியாகிவிட்ட ஏகாதிபத்யங்களுக்கு பக்கபலம் கட்டுவதும், சமாதானத்துக்கு மணல் அஸ்திவாரம் போடுவதைப் போலத்தான் புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகள் கம்யூனிஸ்டுகளின் வெற்று வாக்குறுதிகளைக் கண்டு ஏமாறுதவாறு செய்வது அவர்களுடைய நல்வாழ்வுக்கு செய்யப்படும் முயற்சியைப் பொறுத்தே இருக்கும். கம்யூனிஸ்ட் அபாயத்தைத் தடுத்து நிறுத்த இதுதான் சிறந்த மார்க்கம்; கம்யூனிஸ்ட் சர்க்காரை அங்கீகரிக்க மறுப்பதும் கம்யூனிஸ்டுகளை ஒடுக்குவதும் அல்ல. உலகில் சமாதானத்தைப் பாதுகாப்பதில் மேற்குத் திசையில் கூட்டாக வேலை செய்துவரும் பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ஹாலந்து போன்ற வல்லரசுகள், தங்களுள் எந்த நாடு ஆசி

நேருவுக்கு சென்னை அளித்த வரவேற்பு



சென்ற வாரம் இலங்கைக்குப் போகும் வழியில் பண்டித நேரு சிறிது நேரம் சென்னையில் தங்கினர். இப்படம் மீனம்பாக்கம் விமான நிலயத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது எடுத்தபடம்.

யாவில் ஏகாதிபத்யத்தை நீடிக்க முயன்றாலும் அதைத் தடுத்து நிறுத்தவேண்டும். ஆசியாவில் எஞ்சியுள்ள பாகங்களும் சுய நிர்ணய உரிமை பெறுவதை இனி தாமதிக்கக்கூடாது. புதிதாக சுதந்திரம் பெறும் நாடுகள் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாறிவிடுமோ என்ற அச்சம் வேண்டியதில்லை. சமீபத்தில் சுதந்திரம் பெற்ற இந்தியா, இலங்கை, இந்தோனேசியா போன்ற நாடுகள் இதற்கு சிறந்த உதாரணமாக விளங்குகின்றன. விடுதலை பெற்ற நாடுகள் தங்கள்மீது சமீப காலம்வரை ஆதிக்கப் செலுத்தி வந்த நாட்டுடன் நேச உறவுகொண்டிருப்பதை மேற்கத்திய வல்லரசுகள் உணரவேண்டும். அத்தகைய நேச உறவு உண்மையில் அவற்றுக்கு (வல்லரசுகளுக்கு) எவ்வளவு பெரிய பலமானது என்பதை நாம் சுட்டிக்காட்ட வேண்டியதில்லை. வேறுவிதமாக நடந்து கொள்வதால், மேல் நாடுகள் ஜனநாயகம் சமாதானம்பற்றிப் பேசுவதெல்லாம் வெற்று வேட்டுகள் என்று கீழ்க்கோடி மக்கள் எண்ணுவதைத் தடுக்க முடியாது.

இந்த சந்தர்ப்பத்தில் அமெரிக்காவின் கொள்கை பற்றி வெளியான ஒரு செய்தியை குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. இந்தோ சீனாவில் பிரான்ஸுக்கு ஆதரவளிக்க அமெரிக்கா ஆயுதங்களையும் யுத்த சாதனங்களையும் அனுப்பும் என்று சமீபத்தில் பிரபல அமெரிக்கக் கட்டுரையாளரான மிஸ்டர் ட்ரூபியர்ஸன் வெளியிட்டார் இது எவ்வளவு தூரம் உண்மை என்பது தெரியாது எனினும், அமெரிக்காவின் கடமையை வற்புறுத்த வேண்டியது அவசியமாகிறது. உளுத்துப்போன ஏகாதிபத்தியங்களுக்குச் சப்பைக் கட்டு கட்டுவதால் கீழக்கோடியில் அமெரிக்காவின் செல்வாக்கு வெகுவாக குறையும். கம்யூனிஸ்ட் அபாயம் அந்த அளவுக்கு அதிகரிக்கும். சமாதானம் குலைவதற்கு வழி ஏற்படும். சுதந்திரம் ஜனநாயகத்தைப்பற்றி அமெரிக்கா பேசிவந்ததெல்லாம் வெறும் வாய்ப்பந்தல் என்ற அபிப்பிராயம் ஏற்பட நேரிடும். மேலும், இத்தகைய பிற்போக்கு நடவடிக்கைகளால்தான் சென்ற இரு உலக யுத்தங்களும் பற்றிக்கொண்டன என்பது அமெரிக்காவுக்கு ஞாபகமிருக்க வேண்டும். அமெரிக்கா நேர்வழி காணும் என்று எதிர்பார்ப்போம். இந்தோ-சீனாவை பிரான்ஸ் ஜப்பானுக்கு பறிகொடுத்த போது அமெரிக்காவின் சிறந்த ராஜதந்திரியும் ஜனநாயகத்தின் உயர்ந்த பிரதிநிதியுமான பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டு, பிரான்ஸ் மீண்டும் தனது காலனி ஆட்சியை ஏற்படுத்திக்கொள்ளக்கூடாது என்று வற்புறுத்தினர். அவ்வழியும் அவருடைய நோக்கமும்தான் சிறந்தது என்பதை அமெரிக்க சர்க்கார் உணருமா?

அன்றும் இன்றும்!

ஸ்ரீமதி கோமதி ஸ்வாமிநாதன்

1

[ராமநாதன் வீடு காலை சுமார் எட்டு மணி ராமநாதன் ஹாலில் உட்கார்ந்து பேப்பர் படித்துக்கொண்டிருக்கிறார். தயங்கித்தயங்கி அவருக்கு ஏற்கனவே சற்று பரிச்சயமுள்ள பாலுசாமி வருகிறார்]

ராமநாதன்:—பாலுசாமியா! வாரும். ஏது அபூர்வமாயிருக்கிறதே!

பாலுசாமி:—விசேஷம் ஒன்றுமில்லை. சும்மா பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தேன். சௌக்யம்தானே?

ராமநாதன்:— ஆஹா! சௌக்யத்திற்கென்ன குறைவு? அவ்விடத்தில் எல்லாம் சுகம்தானே?

பாலுசாமி:—ஆமாம்! ஆமாம்! பத்திரிகையில் என்ன விசேஷம்?

ராமநாதன்:—ஒரு விசேஷமுமில்லை. விளம்பரங்களும் விபத்து விவரங்களையும்போட்டு ரொப்பியிருக்கிறார்கள்!

பாலுசாமி:—அதைத்தவிர எங்கெங்க நாடுகளெல்லாம் பொருளாதார நெருக்கடியால் அயல் நாடுகளில் கடன் வாங்குகின்றன என்றும் போட்டிருப்பான்!

ராமநாதன்:— இந்த யுத்த முடிவுதான் அந்த நிர்ப்பந்தத்தை உண்டாக்கிவிட்டதே! சாதாரண அன்றாடக் கூலிக்காரன் முதல் ஐக்கியநாடு ஸ்தாபனம்வரை எங்கேயாவது கடன் வாங்கித்தான் காலக்ஷேபம் செய்ய வேண்டுமென்ற கதி ஏற்பட்டுவிட்டதே!

பாலுசாமி:—நீங்கள் சொல்வது ரொம்ப சரி! நான்கூட ஒரு சின்ன கைமாற்று விஷயமாகத்தான் உங்ககிட்டே வந்தேன்.

ராமநாதன்:—(திடுக்கிட்டு) கைமாற்றா?

பாலுசாமி:—ஆமாம்! ஒரு நூறு ரூபாய் ரொம்ப அவசரமாய் வேண்டியிருக்கிறது. மரியாதை தெரியாத ஒரு நபரிடம்புரட்டிவிட்டு திண்டாடுகிறேன். அவன் சமயம் தெரியாமல் இப்போது என்னை நெருக்கும்போது அவஸ்தைப்படுகிறேன். வேறு வழியேயில்லை. நீங்கள்தான் கொடுத்து உதவவேண்டும்

ராமநாதன்:—மிஸ்டர் பாலுசாமி. மன்னிக்கணும். இப்போது கையிலே காலணுக்கூட இல்லாத சமயம். தயவுசெய்து வேறு யாரிடமாவது பார்த்துக் கொள்ளுங்கள்.

பாலுசாமி:—உங்களிடம் இல்லையென்றால் அப்புறம் யாரிடம் இருக்கப்போகிறது. என் சார்! குபேரனே உங்களிடம் 'லோன் அப்ளிகேஷன்' போடலாமே! அப்படியிருக்க, நீங்க இந்தமாதிரி கையை விரிக்கக் கூடாது. இந்த ஆபத்து சமயத்தில் அபயம் அளிக்க உங்களைத்தவிர வேறு யார் இருக்கிறார்கள்? நீங்கள் செய்யப்போகும் உதவியை இன்னும் எத்தனையோ ஜன்மங்களுக்கு மறக்கமாட்டேன்

ராமநாதன்:—உமக்கு உதவி செய்ய 'ஆசையிருக்கு. ஆனால் காசைத்தான் காணோம்.

பாலுசாமி :—அப்படிச் சொல்லக்கூடாது இந்த வேளையில் நீங்கள்தான் ஆபத்பாந்தவன். என் மானத்தைக் காப்பாற்றும் பொறுப்பே உங்களிடம்தான் இருக்கிறது.

ராமநாதன் :—நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை. நாளைக்கு வாரும் பார்ப்போம்.

பாலுசாமி :—அடுத்த மாதம் சம்பளம் வாங்கியதும் நேராக இங்கு வந்து கொடுத்துவிட்டுத்தான் வீட்டிற்குப் போவேன். இந்த உதவிக்கு உங்களை கோவிலில் வைத்துத்தான் கும்பிடவேண்டும்.

ராமநாதன் :—நாளை வாருங்களேன். (பாலுசாமி போகிறார்.)

2

[மறுநாட் காலை பாலுசாமி கையில் ஓர் கூடையுடன் ராமநாதன் வீட்டிற்கு வருகிறார்]

பாலுசாமி :—நமஸ்காரம். [கூடையை கீழே வைக்கிறார்.]

ராமநாதன்:—வாங்கோ! இதென்ன கூடை?

பாலுசாமி :—ஒண்ணுமில்லை. நாக்பூர் ஆரஞ்சு. குழந்தைகளுக்கு இருக்கட்டுமே என்று கொண்டு வந்தேன்.

ராமநாதன்: அடடா! இதெல்லாம் எதற்கு? பணத்தை வேஸ்ட் பண்ணியிருக்கிறீகளே!

பாலுசாமி:—இல்லை! இல்லை! கடையில் இவ்வளவு நல்ல சரக்கு ஏது? என் மச்சினன் நாக்பூர்லே இருக்கான். ஒரு பெரிய கூடை அனுப்பி வைத்தான். அதிலே கொஞ்சம்!..........அவ்வளவுதான்.

ராமநாதன் :—சரிதான்! இந்த பனி காலத்திலே குழந்தைகள் ஜாஸ்தி தின்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பிஸ்கோத்தாக இருந்தாலும் போனால் போகிறது என்றிருக்கலாம்.

பாலுசாமி:—நான் நேற்று சொன்னது நினைவிருக்குமென்று நினைக்கிறேன்.

ராமநாதன் :—ஆஹா! பேஷாய் நினைவிருக்கிறது. ஆனால், நீங்கள் கேட்கும் அளவு இருக்குமா என்றுதான் சந்தேகம்! உங்களுக்கு ஐம்பது ரூபாய் போதாதா?

பாலுசாமி:— ஐயையோ! நாளைக்கு முழுசாக நூறு ரூபாய் வைக்காதபோனல் என் மானம் கப்பலேறி விடும். இன்னும் ஐம்பது ரூபாயையும் நீங்கள்தான் எப்படியாவது பார்த்துக் கொடுத்தாக வேண்டும் இதற்கு மேலே விவரித்துச் சொல்ல எனக்கு வார்த்தைகள் அகப்படவில்லை. இந்த க்ஷணத்திலே நீங்கள்தான் எனக்கு பகவான் அந்தக் காலத்திலே துச்சாசனன் முன் துரோபதையின் மானத்தைக் காப்பாற்றிய பரந்தாமனைவிட நூறு மடங்கு அதிகமாகவே உங்களை மதிக்கிறேன்

ராமநாதன்:—சரி! நாளைக்கு காலையிலே வாருங்கோ. என் சிநேகிதன் ஒருவனிடம் வாங்கித் தருகிறேன். நீங்கள் அவசியம் முதல் தேதியன்று திருப்பிக் கொடுத்து என் சிநேகிதன் என்னைப்பற்றி வைத்திருக்கும் மதிப்பைக் காப்பாற்றவேண்டும்.

பாலுசாமி:—முதல் தேதியன்று உங்களுக்குப் பணம் திருப்பிக் கொடுக்கும்வரை எனக்கு தூக்கமே வராது சார்! (போகிறா)

3

[மறுநாட் காலை. கையில் இரண்டு பிஸ்கோத்து டப்பாக்களுடன் பாலுசாமி வருகிறா]

ராமநாதன்:—வாருங்கள்! இதென்னடப்பா! வீட்டு உபயோகத்திற்கு ஏதாவது காலி டப்பாக்கள் வாங்கிப் போகிறீர்களோ?

பாலுசாமி:—இல்லை! இல்லை! உடைக்காத முழு பிஸ்கோத்துப் பெட்டிகள். குழந்தைகளுக்கு இருக்கட்டுமே என்று கொண்டு வந்தேன்.

ராமநாதன்:— மிஸ்டர் பாலுசாமி! நீங்கள் தயவு பண்ணி இவைகளை உங்கள் வீட்டுக் குழந்தைகளுக்கே கொண்டு போங்கள். அனுவசியமாகப் பணத்தைக் கொட்டி அயலார் வீட்டுக் குழந்தைகளுக்குக் கொடுப்பதை நான் கண்டிக்கிறேன்

பாலுசாமி:—நானே உங்களிடம் ரூபாய்க்குத் தவம் செய்துகொண்டிருக்கும்போது இவைகளை எல்லாம் வாங்க என்னிடம் காசு ஏது? என் நண்பன் ஒருவன் கஸ்டம்ஸ் ஆபீசிலே இருக்கான். அவன் எனக்குக் கொடுத்ததிலே உங்களுக்குக் கொஞ்சம் கொண்டு வந்தேன் உங்கள் வீட்டுக்கு குழந்தைகள் எனக்கு அயலார் வீட்டுக் குழந்தைகளாகப் போய்விடுமா சார்? என்னை அப்படி வித்தியாசமாக நினைத்துவிடாதீர்கள்.

ராமநாதன்:—(டப்பாவைத்திறந்து ஒரு பிஸ்கோத்தை வாயில்போட்டுக்கொண்டே) ரொம்ப உயர்ந்த ரக பிஸ்கோத்தாகத்தானிருக்கும்போலிருக்கிறது!

பாலுசாமி:— ஆமாம்!...காலையிலே அந்த ஆசாமி வீட்டில் வந்து உட்கார்ந்திருக்கிறன் அவனை இருக்கச் சொல்லிவிட்டு இங்கு ஓடி வந்தேன்...அந்த ரூபாயை...

ராமநாதன்:—ராத்திரிதான் நானும் வாங்கி வந்தேன் முதல் தேதி திருப்பித் தரவேண்டுமென்பது மாத்திரம் நினைவிருக்கட்டும் (எழுந்து போய் அலமாரியைத் திறந்து ரூபாயை எடுத்து வந்து பாலுசாமியிடம் கொடுக்கிறர்.)

பாலுசாமி:—சரியாய் நூறு ரூபாய் இருக்கு. இந்த உதவிக்கு உங்களைக் கோவிலில் வைத்துத்தான் கும்பிட வேண்டும். தாமப்பிரபு என்றால் நீங்கள் தான்...அவசியம் இதை முதல் தேதி கொண்டு வந்து தருகிறேன்.

ராமநாதன்;—சரி! அது மாத்திரம் நினைவிருந்தால் போதும். (போகிறர்கள்)

4

(சிறிது நேரத்திற்குப் பிறகு. பாலுசாமியின் வீடு. பாலுசாமியின் மனைவி பார்வதி வீட்டுக்காரியத்தில் ஈடுபட்டிருக்கிறள். பாலுசாமி குஷியாக ஒரு பாட்டை முணுமுணுத்துக்கொண்டே வருகிறர்.)

பார்வதி:—ஆனந்தம் தாங்க முடியாமல் அப்படி என்ன சமாசாரம்?

பாலுசாமி:—அந்த ராமநாதனைக் குல்லாய்போட்டு நூறு ரூபாய் வாங்கிவந்தேன். அதுக்குத்தான் எத்தனை பொய் சொல்ல வேண்டியிருந்தது. ஆனாலும் சுத்த தரித்திரம் பிடித்த பயல்! முதல்தேதி திருப்பிக்கொடுக்க வேண்டுமென்று மூன்னூறு தடவை சொல்லிவிட்டான்!

பார்வதி:— இந்தரூபாயைவாங்கறத்திற்குத்தான், ஐந்து ரூபாய்க்கு ஆரஞ்சுப்பழமும் பத்து ரூபாய்க்கு பிஸ்கோத்தும் வாங்கித் தொலைத்தீர்களே! அதையெல்லாம் வாங்கித் தின்று விட்டுமா அப்படி கண்டிப்பாகப் பேசினுன்?

பாலுசாமி:—அதையெல்லாம் வாங்கிக்கொண்டு போகாமலிருந்தால் இந்தக் கடனே வாங்கியிருக்க முடியாது. மச்சினன் அனுப்பினுன் மருமான் கொடுத்தான் என்று சொல்லி அவனைக் காக்காய் பிடித்ததால் தான் அவனுக்கு மனசு வந்தது. மேலும் வட்டியில்லாக் கடன் பாரு!

பார்வதி:—அது சரி! முதல் தேதி சம்பளம் வாங்கினதும் கொடுத்துத் தொலைக்கவேண்டுமாக்கும். அப்புறம் நான் கேட்ட ஒத்தைக்கல் பேசரியை எப்போது வாங்கப்போகிறீர்களாம்?

பாலுசாமி:—அந்தக் கவலை உனக்கெதற்கு? உனக்கு வேண்டியதை வாங்கிக் கொடுத்துவிட்டு அப்புறம் ராமநாதனுக்கு பணம் திருப்பிக் கொடுப்பதைப் பற்றி யோசிக்கலாம்.

பார்வதி:—செலவிற்கு பணம் எப்படிக் கிடைக்கப் போகிறதென்று பட்ட கவலையே இன்னும் பத்து வருஷ காலம் நம்உடம்பை பாதிக்கும். அப்புறமல்லவா அதைத் திருப்புவதைப்பற்றிக் கவலைப்பட வேண்டும்?

(போகிறர்கள்)

5

[அடுத்தமாதம் ஐந்தாம் தேதி காலை. பாலுசாமியின் வீடு ராமநாதனின் பையன் மணி வருகிறன்]

பாலுசாமி:—மணியா? வா அப்பா!

மணி:—அப்பா உங்களைப் பார்த்துட்டு வரச் சொன்னர் முதல் தேதியே உங்களை எதிர் பார்த்தாராம்!

பாலுசாமி:—என்ன விஷயம்?

மணி:—நீங்க போன மாதம் ஏதோ கைமாற்று வாங்கிக் கொண்டு போனீர்களாம்!

பாலுசாமி:— ஓஹோ! அதுவா? மறந்தே போயிட்டேன் அடடா! இன்னும் பத்து நாளிலே அனுப்பிச்சுடறேன்னு சொல்லு

[மணி போகிறன் உள்ளிருந்து பார்வதி வருகிறள்]

பார்வதி:—உங்க சிநேகிதர் பிள்ளையா? எப்படித்தான் இந்த நாலு நாளும் பொறுத்திருந்தாரோ?

பாலுசாமி:— கிடக்கிறன் மரியாதை தெரியாத பயல்! பிரமாத ரூபாயைக் கொடுத்துட்டு அதற்குள்ளே ஆளை வேறு அனுப்பிச்சுட்டான் இவ்வளவு பிசுநாரிப் பயல் என்று தெரிந்திருந்தால் இவன் கிட்டே போய் கையை நீட்டி கடன் வாங்கியே இருக்க மாட்டேன்

பார்வதி:— சரி சரி! இன்றைக்காவது சாயங்காலம் அந்த பேசரி வாங்கற வழியை பாருங்கோ.(போகிறள்)

6

[பதினைந்து நாட்களுக்குப் பிறகு, பாலுசாமியின் வீடு. ராமநாதன் வருகிறா. அவா வருவதைக் கவனியாததுபோல் பத்திரிகையைப் பார்த்துக்கொண்டிருக்கிறர்.]

ராமநாதன்:—(தொண்டையைக் கனைத்துக்கொண்டு) மிஸ்டர் பாலுசாமி! சௌக்யமா?

பாலுசாமி:—(அஸ்வாரஸ்யமாக) நீங்களா! வாருங்கள்!

ராமநாதன்:—உங்களைத்தான் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்

பாலுசாமி:—பேஷாய்ப் பாருங்களேன்! இந்தப் பக்கம் வேண்டுமானுலும் திரும்பிக்கொள்கிறேன்.

ராமநாதன்:—உங்கள் ஹாஸ்யம் இருக்கட்டும் மிஸ்டர் பாலுசாமி! பத்து நாளிலே பணம் கொடுத்து அனுப்புவதாக பையனிடம சொன்னீர்களாம். பதினைந்து நாட்களாயும் ஒன்றும் வரக்காணுேமே என்று நானே நேரில் வந்தேன்.

பாலுசாமி:—என்ன சார்! இந்த அற்பக் காசுக்கு இவ்வளவு தூரம் மனதை அலட்டிக்கொள்கிறீர்களே! நினைத்தால் விட்டெறிஞ்சுடமாட்டேனு? இந்த மாசம் கொஞ்சம் செலவு ஜாஸ்தியாகப் போயிடுத்து.

ராமநாதன்:—என்ன ஐயா! இந்த மாதம் முதல்தேதி கொடுத்துவிடுவதாகவும் அதுவரை தூக்கமே வராதென்றும் கதை அளந்தீரே? அப்போ அவசியமாக இருந்த ரூபாய், இப்போ அற்பக் காசாய் போயிடுத்தா? நான் உம் வார்த்தையை நம்பி இன்னொருவனிடம் வாங்கிக் கொடுத்தேன்!

பாலுசாமி:—உலகத்திலே எல்லோருமே ஹரிச்சந்திரனாக இருந்துட்டா அப்புறம் ஹரிச்சந்திரனுக்கு என்ன ஸ்பெஷல் மதிப்பு இருக்கும்? இந்த மாசம் ஒண்ணும் தேதியில்லென்னு அடுத்த மாதம் ஒண்ணும் தேதி! இதற்குப் போய் பிரமாதப்படுத்துகிறீர்களே. நிச்சயமாய் பணத்தை திருப்பிக்கொடுத்து விடுவேன். நீங்களாவது கவலையில்லாமல் தூங்குங்கள் போயிட்டுவரீர்களா? எனக்கு கொஞ்சம் அவசர வேலையிருக்கு

ராமநாதன்:—மாதா மாதம்தான் ஒண்ணும்தேதி வருகிறது! இந்தத்வனி அன்றைக்கு பணம் கேட்கவந்த போது இல்லையே!

[ராமநாதன் போகிறர். பார்வதி உள்ளிருந்து வருகிறள்.

பார்வதி:-ரொம்ப விரட்டிப்பிட்டிகளே! இருந்தாலும் சமயத்தில் உபகாரம் பண்ணின சிநேகிதர் இல்லையா?

பாலுசாமி:—அதை யார் மறுக்கிறர்கள்? அதற்காக இந்த சமயத்திலே வழ வழன்னு பேசினுல் அவன் நம் மேலே குதிரை ஏற ஆரம்பித்துவிடுவான் அதற்காகத் தான் ஓங்கியடித்துப் பேசினேன். அப்புறமா சந்திக்கிற போது 'அன்றைக்கு ஏதோ கோபத்தில் சொல்லிவிட்டேன்போலிருக்கிறது என்று சமாளித்துக்கொள்வேன்.

பார்வதி:—உங்கள்பாடு! உங்கள் நண்பர்பாடு!

பாலுசாமி:—அவன் இன்னமே மறுபடியும் இங்கு வந்து கேட்கமாட்டான். நாமாகத்தான் சாவகாசமாகக் கொடுக்கவேண்டும். (போகிறாகள்)

7

[மறுமாதம் இரண்டாம்தேதி காலை பாலுசாமியின் வீடு ராமநாதன் வருகிறர்.]

பாலுசாமி:—ஏய்! பார்வதி! எந்த மடப் பசங்களாவது, மளிகைக் கடைப் பாக்கி மண்ணுங்கட்டி பாக்கி என்று நேற்றே வந்து கழுத்தை யறுத்தாங்களோ?

பார்வதி:—(உள்ளிருந்து) எல்லாச் சனியன்களுக்கும் இன்றைக்கு மூக்கிலே வியாத்துவிடும். கம்பமாய் வந்து நின்று கழுத்தை அறுத்துத் தொலைப்பான்கள்.

பாலுசாமி:—(அப்போதுதான் ராமநாதனைப் பார்ப்பதுபோல்) ஓஹோ! ராமநாதனு? வாருங்கள்! வாருங்கள்! கையிலே என்ன பை?

பார்வதி:—மார்க்கட்டிலிருந்து காய்கறி வாங்கிப் போகிறேன் உங்களுக்குத்தான் ஏதும் பழம் பிஸ்கோத்து வாங்கி வந்திருக்கிறேன் என்று நினைத்துவிட்டீர்களோ?

பாலுசாமி:—நீங்க காலே வேளையிலே தூங்கரதை விட்டுவிட்டீர்களோ?

ராமநாதன்:—கொடுத்த கடனை திருப்பி வாங்கும் வரை ராத்தூக்கம்கூட வராது சார்!

பாலுசாமி:—ஓஹோ! உங்க அற்ப தொகைக்காக அவசரப்பட்டு வந்தீர்களோ? ஏதோ வேறு பிரமாத விஷயமாக்கும் என்று நினைத்தேன்...இருந்தாலும் மிஸ்டர் ராமநாதன் உங்களுக்கு நாசூக்கே போதாது! மனிதன் நேற்றுத்தானே சம்பளம் வாங்கியிருக்கிறேன்! இன்று அனுப்பிவிட மாட்டேனு? எங்கேயாவது சன்யாசம் வாங்கிக்கொண்டு ஓடிவிடுவேனு? அதற்குள் வாசற்படி ஏறி வருவானேன்!

ராமநாதன்:—போனமாதம் வந்தாப்போல வரும் எனக்கு நாசூக்கு வேண்டாம் கொடுத்த பணம்நான் வேண்டும்.

பாலுசாமி:—(கோபத்துடன்) என்ன ஐயா! பணம் பணம் என்று பிராணனை விடுகிறீரே! லக்ஷ ரூபாயைத் தூக்கிக்கொடுத்து விட்டீரா?

ராமநாதன்:—இந்த அற்ப நூறு ரூபாய்க்குநான் படும்பாடு போதாதா? லக்ஷரூபாய் வேறு கொடுத்து விட்டு விழிக்கவேண்டுமா? இந்த அற்பக் காசுக்குத்தானே ஐயா நீர ஐந்து தடவை என்னிடம் பஞ்சாப் பறந்து வந்து கெஞ்சினீர். நினைவில்லையோ?

பாலுசாமி:—மிஸ்டர ராமநாதன்! கொஞ்சம் நாக்கை அடக்கிப்பேசுங்கள் உம்ம பணத்தை ஒருத்தரும் இல்லேன்னு சொல்லிடலே. ஆனல் சௌகரியப்படறபோது தான் கொடுக்க முடியும், போயிட்டு வாங்கோ.

ராமநாதன்:—பேஷ்! இல்லேன்னுதான் சொல்லிவிடுமே! நீர் கொண்டு வந்து காணிக்கை செலுத்திய ஆரஞ்சுப் பழத்தின் தோலும் பிஸ்கோத்து இருந்த டப்பாவும் என் வீட்டுக் குப்பையிலே இன்னும் கிடக்கு தயவு பண்ணி பணத்தைக் கொடுத்து என்னை அனுப்பியும். உம்முடன் வாக்குவாதம் செய்ய நான் வரவில்லை. நீர் என்னைக் கெஞ்சிக் காத்துக்கிடந்ததைவிட பத்து மடங்கு அதிகமாகவே என் பணத்திற்காக உம்மிடம் கெஞ்சுகிறேன் ரூபாயைக் கொடும்.

பாலுசாமி:—என்னிடம் இப்போது பைசாக்கூடக் கிடையாது.

ராமநாதன்:—அன்றைக்கு என் காலில் வந்து விழுந்து அழாத வண்ணம் கெஞ்சினீரே! அது இன்று மறந்து போய் விட்டதோ!

பாலுசாமி:—சுத்தப் பிச்சைக் காசு! நான்தான் கெஞ்சினேன்! கர்ணப் பிரபுவாகிய நீங்கள் ஏன் கொடுத்தீர்கள்! இல்லையென்று சொல்லியிருந்தால் இந்தத் தொந்திரவெல்லாம் வராது பாரும்!

ராமநாதன்:—அந்தப் பாடத்தை இப்போது உங்களிடம் கற்றுக்கொண்டு விட்டேன் உமது பசப்பு வார்த்தைகளில் ஏமாந்தேன். கலங்கிய கண்களுக்கு கருணைகாட்டினேன்.

பாலுசாமி:—நாடகபாணியிலே பேசறீகளே! பேஷ்! உம்மை யாரு ஐயா ஏமாறச்சொன்னு? நீர பணம் கொடுக்காமலிருந்தால் நான் இப்பொ கடன்காரனுக இருக்கமாட்டேன் பாரும்! சரி சரி! நீங்க புறப்படுங்கோ என் பந்துக்கள் சிலபேர் வரப்போரு! இந்த சமயத்திலே திருப்புங்கூர் நந்திமாதிரி உட்கார்ந்திருக்காதேயும். சீக்கிரமே உம் பணத்தை அனுப்பித்து விடுவேன்.

ராமநாதன்:—காரியம் ஆகும்வரை காலைப்பிடிக்கிறது.

பாலுசாமி:—ஆமாம்! இப்போ நீர் சீக்கிரம் கிளம்பாவிடில் கழுத்தைப்பிடித்துத்தான் தள்ள நேரிடும்.

ராமநாதன்:—எனக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும். பழகியவராயிற்றே என்று ஏதும் ஆதாரமில்லாமலும், உம்மிடம் எழுதி வாங்காமலும் ரூபாய் கடன் கொடுத்ததிற்கு நல்ல மரியாதை! அன்று நீர் இருந்ததற்கும் இன்று பேசுவதற்கும் எத்தனை வித்யாசம்.

பாலுசாமி:—அதுதான் பெரியவாள் எல்லாம் கடன் கொடுக்காதே கடன் கொடுக்காதே என்று சொல்லியிருக்கா.

ராமநாதன்:—அவர்கள் எல்லோரும் மொத்தமாய் உம்மைப் பார்த்து கடன் வாங்கும் என்று சொல்லியிருக்கிருர்களாக்கும்! அந்த கம்பர்கூட, கொஞ்சம் மாற்றி 'கடன் கொடுத்தார் நெஞ்சம்போல கலங்கினுன் இலங்கை வேந்தன்' என்று பாடியிருக்கலாம்.

(போகிறுர்.)



60

தோழனும் பகைவனும் ஒன்றே

★

கருமம், யோகம், ப்ரவ்ருத்தி மார்க்கம் அல்லது ப்ரவ்ருத்தி தாமம் இவைகளை ஒரே பொருளைக் குறிக்கும் பல வார்த்தைகள் என்று தெரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறே ஞானம், ஸந்நியாஸம், நிவ்ருத்தி மார்க்கம் அல்லது நிவ்ருத்தி தாமம முதலியவைகளும் ஒன்றையே குறிக்கும் பலவார்த்தைகள் யோகம், ஸந்யாஸம் ஆகிய இரண்டில் ஏதாவது ஒன்றில் பயின்று ஸித்தியடைந்தவன் யோகியும் ஸந்யாஸியும் ஆகிருன் ஸந்யாஸம் வேறு போல் தோன்றினுலும் அதுவும் யோகத்திலே அடங்கியிருக்கிறது யோகமும் ஸந்யாஸமும் லக்ஷியத்தின் (ஸாத்யத்தின்) வேருன அம்சங்களைப்பெறச் சாதனங்களாகின்றன என்று முன்னே சொன்னதற்கேற்ப வரும் சுலோகத்தால் யோகம் சித்தித்தவன் அல்லது யோகாருடனின் தன்மைகளைத் தொடுத்துக் கண்ணன் சொல்லுகிருர்

கோலும் புலன் பொருளில்

கூட்டும் கருமத்தில்

ஏனு நசையறுத்தான்

எப்பொழுது—மேலுயர்ந்தே

எப்பொருளின் சங்கற்பம்

விட்டேறும் யோகியெனு

அப்பொழுதே

பேருடையன் ஆம்

(இ-ள்) எப்பொழுது—எந்நேரத்தில். புலன் பொருளில்—இந்திரிய விஷயங்களிலும். கூட்டும்கருமத்தில்—தேகேந்திரியங்களால் செய்யப்படும் கருமங்களிலும், ஏனு நசை அறுத்தான்—பொருந்திவரும் இச்சையை விட்டவனுய், மேல் உயர்ந்தே—மிகவும் உயர்ந்து (மேம்பட்டு), எப்பொருளின் சங்கற்பம் விட்டேறும்—எல்லாப் பொருள்கள் விஷயமாகவும் வரும் (பெறவேண்டும் பெறவேண்டாம் என்ற) கோரிக்கைகளைத் துறப்பானே, அப்பொழுதே—,யோகி என பேருடையன் ஆம் யோகசித்தி அடைந்தவன் அல்லது யோகாருடன் என்று பேர் பெறுகிருன்.

2 3 2
யதாஹி சேந்த்ரியார்தேஷு
நகர்மஸ்வநுஷஜ்யதே
ஸர்வஸங்கல்ப ஸந்ந்யாஸீ
3 4 3
யோகாரூட ஸ்ததோச்யதே.

(இ-ள்) யதா (ய:)—எப்பொழுது (எவன்), இந்த்ரிய அர்த்தேஷு—இந்திரிய விஷயங்களிலும். கர்மஸு—கர்மங்களிலும். ந அநுஷஜ்யதே—(மனம்) பற்றவில்லையோ ஸர்வ ஸங்கல்ப ஸந்யாஸீ—எல்லாவித ஸங்கல்பங்களையும் துறந்த. ததா ஹி—அப்பொழுதுதான், ஸர்வஸங்கல்ப ஸந்யாஸீ—எல்லாவித ஸங்கல்பங்களையும் துறந்த, யோக ஆரூட:—யோக ஸித்தி அடைந்தவன் என்று, உச்யதே—சொல்லப்படுகிருன்

'கருமங்களைச் செய்யாமல் விட்டவன் யோகியும் அல்ல; சந்நியாசியும் அல்ல' என்று இவ்வத்தியாய ஆரம்ப சுலோகத்தில் தெரிவித்தார். கருமங்களில் பற்றை அடியோடு விட்டிருப்பதை யோகியின் தன்மைகளில் ஒன்ருக இச் சுலோகாரம்பத்தில் சொல்லியிருப்பது முந்தியதோடு முரண்படுவதுபோல் தோன்றும் அதற்குச் சமாதானம் இச் சுலோகத்தின் பிற்பகுதியில் 'ஸர்வ ஸங்கல்ப ஸந்யாஸீ' (எப்பொருளின் சங்கற்பம் விட்டேறும்) என்ற தொடரில் சொல்லப்படுகிறது

கருமப் பற்றினின்று விடுபட்டவன் (பற்றை விட்டவன்) செய்யும் கருமங்களைத்தானே சுதந்திரமாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டதாக அகங்காரம் கொள்வதில்லை கடமை அல்லது ஈச்வர ஆக்ஞை என்றும் தேகேந்திரியங்கள் (கருவிகளாக) அவற்ருல் கருமங்கள் நடைபெறுகின்றன என்று எண்ணுகிருன். மனதில் உண்டாகும் எண்ணம், பற்று, கோரிக்கை எல்லாம் பகவானது அதீனமாய் நிகழ்கின்றன அல்லது பிரகிருதியால் நிகழ்கின்றன என்ற ஞானத்தால் விஷயங்களினின்றும் கருமங்களினின்றும். பிரயத்தனம் (முயற்சி) எடுத்துக் கொள்ளாமலே சம்பந்தமும் பற்றுமில்லாமல் விடுபட்டிருப்பது யோக ஸித்தியடைந்தவனின் இயல்பு என்பது இதனுல் சொல்லப்பட்டது யோகாரம்பத்தில் இருப்பவனுக்கு விஷயம் கருமம் முதலியவற்றினின்று விடுபட்டிருக்க முயற்சி வேண்டும். யோக முடிவில் இருப்பவனிடத்தில் அவ்வித முயற்சியிராது இயல்பாகவே (சுபாவமாகவே) விடுபட்டிருப்பது அவனுக்கு லக்ஷணமாகும். அவனே யோகருடன் எனப்படுகிருன். (யோகாருடன்—சம்பூர்ணமான யோகத்தையுடையவன்.)

பற்றை விட்டுக் கடமை என்று கர்மத்தைச் செய்வதால் தியானத்திற்குத் தகுதி உண்டாகிறது என்று முன்னே கண்ணன் சொன்னுரல்லவா? இப்பொழுது அத்தியானத்

த்தைச் சிதருத பெரு முயற்சியுடன் பயில வேண்டுமென்கிருர்.

தன்னைத் தன்நெஞ்சாலே
தானெடுப்பான் தன்நெஞ்சால்
தன்னைத் தளர்விக்கத்
தானியலான்—என்னவெனில்
தன்னுடைய நெஞ்சு
தனக்குறவு தன் நெஞ்சே
தன்னுடைய
வான்பகையாம்தான்.

(இ-ள்) தன்னை—(ஒருவன்) தன்னை, தன் நெஞ்சாலே-தன்னுடைய மனதைக் கொண்டு, தான் எடுப்பான்—தானே கரையேற்றிக் கொள்ள வேண்டும்; தன் நெஞ்சால்-தன் மனதினுல். தன்னைத் தளர்விக்க தான் இயலான்—தன்னை வீழ்த்திக் கொள்ளலாகாது; என்ன எனில்—என்ன காரணம் என்ருல் தனக்கு—ஜீவனுக்கு, தன்னுடைய நெஞ்சு உறவு- தன்னுடைய மனம் துணையாகும்; தன் நெஞ்சே—தனது மனமே, தன்னுடைய வான் பகையாம்—தனக்குப் பெரிய பகையாகவும் ஆகிறது.

3 4
உத்தரேத் ஆத்மநாத்மாநம்
3
நாத்மாநமவஸாதயேத்
3 3
ஆத்மைவ ஹ்யாத்மநோ பந்து:
ஆத்மைவ ரிபுராத்மந:

(இ-ள்) ஆத்மநா—மனதினுல், ஆத்மாநம்—தன்னை (ஆத்மாவைக்) உத்தரேத் — கரையேற்றவேண்டும், ஆத்மாநம்—தன்னை, ந அவஸாதயேத்—தாழச் செய்யலாகாது, ஹி—ஏனெனில், ஆத்மந:—தனக்கு, ஆத்மா ஏவ—மனதே, பந்து:—உறவாகிறது, ஆத்மந:—(ஆத்மாவுக்கு) தனக்கு, ஆத்மா ஏவ—மனதே, ரிபு:—பகையுமாகிறது.

மனமே ஒருவனுக்கு உதவும் தோழனும் கெடுக்கும் பகையும் ஆகிறது. ஆகையால் ஒருவன் அதைக்கொண்டே உய்ந்தாக வேண்டும் —ன்று சொன்னுர். அடுத்தபடியாக எந்த நிலையிலிருக்கும் மனம் துணையாகிறது? எந்த வித மனம் பகையாகிறது என்பதை விளக்குகிருர்.

எவன் தன்னுல் தன்நெஞ்சம்
வென்று வெலப் பட்டது
அவன்தனக்குஅந் நெஞ்சம்
உறவாகும்—எவன்தன்னுல்
வென்ற நெஞ்சு இல்லாதவனுக்
காங்கது மாறேயியலும்
என்ற பகைவன்போல் இங்கு

(இ-ள்.) எவன் தன்னுல்—எவன் ஒருவனுல், தன் நெஞ்சம் வென்று வெலப்பட்டது—தனது மனம் ஜயிக்கப்பட முடிந்ததோ, அவன் தனக்கு அ நெஞ்சம் உறவாகும்—அவனுக்கு அம்மனது தோழமை பூண்டிருக்கும், எவன் தன்னுல் வென்ற நெஞ்சு இல்லாதவனுக்கு—எவனுல் மனம் வெல்லப்படாமலிருக்கிறதோ அவனுக்கு அது—அம்மனமானது, இங்கு என்ற பகைவன் போல்—இவ்வுலகில் பொருந்திய மற்றப் பகைவர்களைப் போலவே, மாறே இயலும்—மாறுபட்டுக் கேடு செய்துகொண்டே இருக்கும்.

3 4
பந்து ராத்மாத்மநஸ்தஸ்ய
யேநாத்மைவாத்ம நாஜித:
அநாத்ம நஸ்து சத்ருத்வே
வர்தேதாத்மைவ சத்ருவத்

(இ-ள்) யேந-எவனுல், ஆத்மநா ஏவ-தன்னுலேயே, ஆத்மா ஜித:-மனம் ஜயிக்கப்பட்டதோ, தஸ்ய ஆத்மந:-அவன் ஆத்மாவுக்கு ஆத்மா பந்து:—மனமே பந்துவாகும், அநாத்மந: து-மனத்தை ஜயிக்காதவனுக்கோ, ஆத்மா ஏவ-மனமே, சத்ருவத்-பகைவனைப் போல, சத்ருத்வே—பகையின் தன்மை வாய்ந்தே, வர்(த்)தேத-இருக்கும்.

மேலே வந்த இரண்டு சுலோகங்களிலும் 'ஆத்ம பதம் மனம் என்ற பொருளிலும் தான் அல்லது ஒருவன் என்ற பொருளிலும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது அதல்லாமல் ஜீவன் அல்லது ஆத்மா என்றும் சித்தாந்தங்களுக்கேற்பப் பொருள் கொள்ளப்படுகிறது.

ஒருவன் மேன்மையடைத் தியானம் அவசியம் வேண்டும் வேறு வழியில் ஒருவனை இழுக்காமல் பரமாத்மாவை இடைவிடாமல் நினைப்பதற்கு மனம் சாதகமாயிருப்பதே தோழமையாகும். அவ்வாறில்லாமல் தடையாக விருப்பது பகைமையாகும் இதனுல் ஒருவன் தியானயோகம் பயில ஆரம்பிக்குமுன் மனதைப் பூரணமாய்த் தன் ஆதீனத்தில் கொண்டுவர வேண்டும் என்பது சொல்லப்பட்டது.

இவ்விரண்டு சுலோகங்களுக்கும் வேறுவகையில் அடியில் கண்ட வாறு பொருள்செய்துகொள்ளும் சித்தாந்திகளும் உண்டு. அது:—

(சு 5) பகவானின் அனுக்கிரகத்தால் ஒருவன் தன் ஜீவாத்மாவை மேன்மைப்படுத்திக்கொள்ள வேண்டும்; தாழ்த்திக் கொள்ளக்கூடாது, பகவான் ஒருவனே ஜீவாத்மாவின் தோழன்; அவரே ஜீவாத்மாவின் பகைவன்

(சு 6) எவன் ஒருவனுல் பக்தியைக்கொண்டு பரமாத்மா வெல்லப்படுகிருரோ அவனுக்கே பரமாத்மா (பகவான்) உறவாகிருர் பக்தியைக் கொண்டு வெல்லப்படாதவனுக்குப் பகவான் விரோதியைப்போலவே அத்தன்மை வாய்ந்தவராக விருக்கிருர்.

அவர்கள் ஆத்மன் என்பதற்கு 'பரமாத்மா', என்றும் 'ஆத்மநா' என்பதற்கு 'விவேகம்' என்றும் பொருள்கொண்டதே இவ்வாறு உரை செய்ததற்குக் காரணமாகும்.

கலா மண்டபம்

நார்கிஸ் ஆர்ட் கன்ஸர்ன்ஸ் தயாரிப்பான 'பியார்—கி—பாகே' என்ற படத்கில் நார்கிஸே பிரதான பாகத்தை நடிக்கிருர்.

பம்பாய் 'ஆகாஷ் சித்ரா'வின் தயாரிப்பான 'ஹன்ஸ்தே' யில் மதுபாலா கன்னத்தில் கை வைத்துக்கொள்ளும் ஒரு அழகிய காட்சி.

சினிமாத் தொழிலில் ஒரு புரட்சி

படங்களை பிற பாஷைகளில் 'டப்' செய்ய நூதன முறை.

✶

இந்திய சினிமாத் தொழிலில் பெரும் புரட்சியை உண்டாக்கக் கூடிய ஸ்தாபனங்கள் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் உடனே அமைக்கப்படும் என்று லண்டனில் சமீபத்தில் அறிவிக்கப்பட்டது.

என்ன புரட்சி ?

ஒரு பாஷையில் எடுக்கப்படும் படத்திற்கு இதர பிராந்திய பாஷைகளை அமைக்க ('டப்' செய்ய) மேற்படி மூன்று நகரங்களிலும் ஸ்தாபனங்கள் அமைக்கப் படும். இந்த ஸ்தாபனங்கள் கையாளும் புதிய முறையால் வெகு துரிதமாகப் படங்களை வேறு பாஷைகளில் 'டப்' செய்யமுடியும் பேசும் படம் வந்தது சினிமாவில் எத்தகைய புரட்சியோ அத்தகைய புரட்சியை இந்த நூதன 'டப்' செய்யும்முறையும்விளைவிக்கும்

கண்டு பிடித்தது யார் ?

இப்பொழுது வகுக்கப்பட்டிருக்கும் திட்டம் நிறைவேறினுல் சென்னை, பம்பாய் கல்கத்தா நகரங்களில் அமைக்கப்படும் ஸ்தாபனங்கள் ஒரு ஆசிய தலைமை ஸ்தாபனத்தின் கீழ் வேலை செய்யும்.

பிலிமுக்குப் பிற பாஷையைத் துரிதமாக அமைக்கும் இந்தப் புது முறையைக் கண்டு பிடித்தவர் டிலேன்லீ என்ற பிரிட்டிஷ் கர்னல் பிரிட்டனிலுள்ள தமது கம்பெனியின் தலைமை ஸ்தாபனத்தில், ஆராய்ச்சிகளை நடத்திய கர்னல் டிலேன்லீயை விசாரித்ததில், தமது கம்பெனியின்

கிருஷ்ணன் பிறக்கும் இடம் சுத்தமாயிருக்க வேண்டுமென்பதற்காக ஜெயிலைப் பெருக்க ஜூபிடர் பிக்சர்ஸார் ஆள்போட்டிருப்பதாகத் தெரிகிறது 'கிருஷ்ண விஜயத்'தில் எம். எஸ். சிவபாக்கியம்.

லேயை இலங்கையில் அமைப்ப தாகவும் பேச்சிருந்தது உண்மைதா னென்றும், ஆனல் அதுபற்றி முடிவு ஏதும் ஏற்படவில்லையென்றும் தெரி வித்தார்.

மிஸ்டர் மாய்லான் உறுதிமொழி

மேற்படி பிரிட்டிஷ் கம்பெனியின் இந்தியப் பிரதிநிதியும், ஜெமினி ஸ்டுடியோவிலும் இன்னும் பல இந்தி யக் கம்பெனிகளிலும் வேலை செய்து அனுபவம் பெற்றவரு மான மாய்லானை குளோப் நிருபர் பேட்டி கண்டபோது அவர் கூறிய தாவது:—

"பிரிட்டிஷ் அமெரிக்க பிலிம் களை இந்திய பாஷைகளில் 'டப்' செய்து இந்தியாவின் மேல் சுமத்துவதில் எங்களுக்கு சிரத்தை யில்லை. இந்தியப் படங்களை இந்தி யாவின் பல பாஷைகளில் 'டப்' செய்வதே நோக்கம்."

டஜன் படங்கள் தயாராகும்

முதல் வருஷத்தில் 7. பிலிம்களைத் தமிழிலும் ஒரு டஜன் படங்களை வேறு பாஷைகளிலும் டப் செய்ய திட்டம் போட்டிருக்கிறார்கள் ஆசி யாவில் ஏற்படப்போகும் தலைமை ஸ்தாபனம் பிரதி வருடம் 2½ கோடி அடி நீளப் பிலிமை இந்திய பாஷை களல்லாத இதர பாஷைகளில் டப் செய்ய உபயோகப்படுத்தும் என்று கூறப்படுகிறது.

புது முறையால் உள்ள அனுகூலம்

புது முறையால் உள்ள அனுகூலம் இதுதான். இதுவரை ஒரு பாஷைப் படத்தை இன்னொரு பாஷையில் அமைக்க மாதக் கணக்கில் பிடிக்கும் இந்தப் புது முறையால் சில நாட் களிலேயே 'டப்' செய்துவிடலாம். பிசகாமலும் 'டப்' செய்ய முடியும்.

இந்தியாவில் மற்றொரு ஆங்கிலப் படம் தயாரிக்க ஏற்பாடு

இந்திய நடிகர்களும் நடிப்பர்

கல்கத்தாவில் 'ஈஸ்ட் வாட் இன் ஈடன்' என்ற ஆங்கிலப் படத்தை இந்திய அமெரிக்கக் கூட்டுறவில் தயாரிக்க ஏற்பாடு செய்யப்பட் டிருப்பதாகத் தெரிய வருகிறது. பிரிட்டிஷ் நடிகர் எஸ்மெண்ட் நைட் டும் அவருடைய நடிகை மனைவி நோராஸ்வின் பானும் இதில் நடிக்க இந்தியாவுக்குச் செல்கின்றனர்.

இவர்களைத்தவிர சிலஇந்திய நடிக, நடிகைகளும் இப்படத்தில் நடிப் பார்களாம். —குளோப்.

நமது பம்பாய்க் கடிதம்

★

★ **நானு நல்ல ஆங்கிலப் படங்கள்: பிரகாஷ் பிக்சர்ஸாரின் 'ராக்கி': பிலிம்ஸ்தானின் 'ஷபான்' வெள்ளி விழா நடத்துகிறது. எம் அண்டு டி. ஸ்டுடியோவின் 'நம் இந்தியா':** ★

சென்ற கிறிஸ்த்மஸ், புதுவருஷ விடு முறை நாட்களின்போது, பம்பாயில், சினிமா உலகம் உச்ச ஸ்திதியில் இருந்தது படமுதலாளி களும், தியேட்டர்க்காரர்களும் ஜனங்களும், மிகவும் நல்ல படங் களைக்காட்ட முன் வந்தனர். ஆங்கி லத்தில், நான்கு சிறந்த படங்கள் காட்டப்பட்டன அவைகள் என்ன வென்றல் 'த்ரீ மஸ்கடீர்ஸ்', பிரின்ஸ் ஆப் பாக்ஸஸ்', 'இன்ஸ்பெக்டர் ஜெனரல்' ஜோன் ஆப் ஆர்க் நான்குபுதிய ஹிந்தி' படங்களும் காட்டப்பட்டன. அவைகளாவன: 'ராமராஜ்யா' முதலிய படங்களைத் தயாரித்த ப்ரகாஷ் பிக்சர்ஸாரின் 'ராக்கி அகிலஇந்திய பிக்சர்ஸாரின் 'பாரஸ்', வருண பிலிம்ஸாரின் 'ருமால்', முரலி மூவிடோனின் 'போலி'

ப்ரகாஷ் பிக்சர்ஸாரின் 'ராக்கி என்னும்படம் மிகவும் அழகான படம். இப்படத்தை, அம்ரிட்ஸர், முதலிய வடக்கு பட்டினங்களில்முத லில் காட்டினபோது அதற்கு அதிக வசூல் வந்ததாக இங்கு செய்தி வந் திருக்கிறது மிகவும்உருக்கமான கதை நடிகை நடிகர்களின் திறமையான நடிப்பு, ஒய்யாரமான சம்பாஷணை. இனிமையான பாட்டு. இவைகளே இப்படத்தின் மதிப்புக்கும் வெற்றிக் கும் காரணம். தன்னுடைய தங் கைக்காக, தமையன் தன் உயிரையும் கொடுக்க தயாராயிருக்கிருன், இவ் வளவுதான் இப்படத்தின்கருத்து இந்த சாதாரண விஷயத்தை ஒரு அழகிய கதையின்மூலம், இப்படத் தில், விளக்கியிருக்கிறார்கள். இதில் நடிக்கும், காமினிகௌஷல், உல் ஹாஸ், கரன்திவான், எஷோதரா கட்ஜு, கோப் முதலியோர்கள் மிகவும் நன்றாக நடித்திருக்கிறார்கள் ஷாந்திகுமார் என்பவர் சாதுர்யமாக டைரக்ட் செய்திருக்கிறார்.

அகிலஇந்திய பிக்சர்ஸாரின் 'பாரஸ்' என்பதும் ஒரு நல்லபடம் தான் சென்றவருஷம், இப்பட முத லாளிகள் தயாரித்த 'பகிரி' என்னும் படம் ஓரே ஹாஸ்யப்படம் இப் பொழுது அவர்கள் வெளியிட்டிருக் கும் 'பாரஸ்' என்னும்படம், குதாட் டத்தின்கேடுகளைப்பற்றியும் பணத் திமிறினால், செல்வந்தர்கள் செய்யும் அட்டூழியங்களையும், உண்மைக் காதலின் மகிமையும், எடுத்து மிக வும் தத்ரூபமாக காண்பிக்கிறது. காமினி கௌஷல் என்பவள் இப் படத்திலும் கதாநாயகியாக அதிக திறமையுடன் நடித்திருக் கிருள், இவளுடைய காதலனாக நடிக்கும் ரெஹ்மான் அவ்வளவு திற மையாக நடிக்கவில்லை மதுபாலா, சப்ரு, சுலோசனா சேட்டர்ஜி, கோப், பிரதிமா தேவி முதலியவர் முக்கிய பாத்திரங்களுக்கு நல்ல உதவி கொடுக்கிறார்கள் அனந்ததாகூர என்பவர் டைரக்ட் செய்திருக்கிறார்.

பிலிம்ஸ்தான் கடைசியாக வெளி யிட்டிருக்கும் "ஷபனம்" என்னும் படம் பம்பாயில் 25 வாரங்களும், பம்பாயைச்சுற்றியிருக்கும் ஊர்களில் 50 வாரங்களும் ஓடிவிட்டது இப் படத்தின் வெள்ளி விழா, தங்கவிழா வைக் கொண்டாடுவதற்காக பிலிம்ஸ் தான்காரர்கள் டாஜ்மஹால் ஓட்ட லில், ஜனவரி 3-ம்தேதி சாயங்காலம் ஒரு பெரிய காக்டெயில் பார்ட்டியை நடத்தினார்கள். இக்கட்டத்திற்கு. பம்பாய் ஸினிமா நிருபர்கள், பட முதலாளிகள், டைரக்டர்கள், ஸினிமா நக்ஷத்திரங்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். "ஷபனம்" என் னும் படத்தில் கதாநாயகியாக நடித்த காமினிகௌஷல். தற்சமயம் டெல்லியில் இருப்பதால், அவள் இப் பார்ட்டிக்கு வரவில்லை பிலிம்ஸ்தான் இதுவரையில் 15 படங்கள் தயாரித் ததில் எட்டு படங்கள் வெள்ளி விழா கொண்டாடி விட்டது. அவைகளா வது, 'ஸவார்' 'ஸிந்தூர்' 'ஷெஹ்னாய்' 'ஸாஜன் 'தோபாய்' 'ஷஹீத்' ஆக்ட் ரஸ்' 'ஷபனம்.'

எம் அண்டு டி ஸ்டுடியோவில், ஒரு பெரிய படம் தயாராகி வருகிறது. அது என்னவென்றல், பால் ஸில்ஸு என்பவர் டயி என்னும் கம்பெனியின் சார்பாக தயாரிக்கும், 'நம் இந்தியா' என்னும் படம் தான் பால் ஸில்ஸு இப்படத்தை ஆங்கி லத்திலும், ஹிந்தியிலும் ஓரே சம யத்தில் தயாரிக்கிறார், இப்படம் மினுமஸானி எழுதிய புத்தகத்தைத் தழுவியிருக்கிறது. இப்படத்தை

மூன்று பாகங்களாக எடுக்கிறார்கள். இந்தியாவில், புராண காலத்தில் நடந்த சில முக்கியமான கட்டங் களை, முதல் பாகத்தில் எடுத்திருக் கிறார்கள். இரண்டாவது பாகத்தில், இந்தியாவின் சரித்திரத்தை எடுத்து காண்பித்திருக்கிறார்கள் மூன்றாவது பாகத்தில் தற்கால வாழ்க்கையைச் சித்தரிக்கிறார்கள். இம்மூன்று பாகங் களையும், ஒரு ஸ்வாரஸ்யமான கதையின் மூலம் அழகான படமாக தயாரிக்கிறார்கள் இப்படத்தில், இந்தியாவின் பெயர்பெற்ற நக்ஷத்திரங்கள், மிகவும் குறைந்த சம்பளத்தில் நடிக்கிறார்கள். பிரித்வி ராஜ், அசோக ராஜாவாகவும், அக்ப ராகவும், ஜெய்ராஜ் அர்ஜுனனாக வும், அபுல் பஸலாகவும் தேல் ஆனந்து கிருஷ்ணனாகவும், ஒரு தேசத் தொண்டனாகவும், கே என் ஸிங்கு, களிங்க தேசத்து ராஜாவாக வும். ஒரு குடியானவனாகவும், வஸ்தி, ஒரு பணக்காரனாகவும், பிரேம்நாத். ஒரு புத்த பிக்ஷுவாகவும், ஒரு தொழிலாளியாகவும் நளினி ஜய லந்து, தொழிலாளியின் காதலியாக வும், இன்னும் ஷம்பு மித்திரா, டிருபதி மித்ரா, துர்கா கோட்டே முதலியவர்கள் குடியானவர்களாக வும் நடிக்கிறார்கள்.

சென்ற வாரம், நான் எம் அண்டு டி ஸ்டியோவுக்கு சென்றபோது, பால்ஸில்ஸு பம்பாயில், தற்கால வாழ்க்கையைப் பற்றி ஒரு பகுதியை டைரக்ட் செய்துகொண்டிருந்தார். "இப்படம் இந்தியாவின் உயர்ந்த நிலைமையையும், மகிமையையும், நன் றாக எடுத்துக்காட்டும்" என்று என் னிடம் அவர் சொன்னர். படம் பிடிக்கும் இடத்தில், ஸுரேந்திரா, பிரேம்நாத், தேல்ஆனந்து, முதலிய வர்களைப் பார்த்தேன். ஒவ்வொரு நடிக, நடிகைகளும் இப்படத்தில் மிகவும் ஊக்கமாக நடிக்கிறார்கள் இப்படத்தை ஆங்கிலத்திலும் எடுப் பதினால், அவர்கள் ஆங்கிலத்தில் சம்பாஷிக்கும்போது வெகு அழகா யிருக்கிறது இப்படத்தை வருகிற மார்ச்சுமாதம் முடிவதற்குள், தயா ரித்துவிடுவார்கள் என்று தோன்று கிறது இந்தியாவிலும், இங்கிலாந்தி லும், அமெரிக்காவிலும் ஒரே நாளில் இப்படம் வெளி வரும். இந்தியாவில் தயாரிக்கும் படங்களில் இப்படம் தான் முதன் முதலில், மேற்கு நாடு களில். மிகவும் பிரபலமாக வெளி வரும் என்று கருதப்படுகிறது

—தி. மா. ராமச்சந்திரன்.



நமது தமிழ்ப் படங்களுக்கு வாரிசாக ஹிந்திப் பட முதலாளிகள் கிளம்பிவிட்டார்களென்பதற்கு இந்த நாட்டியம் ஒரு அத்தாட்சி. இந்த கிராமிய நாட்டியம் நடக்கும் படம் பம்பாய் டாக்கீஸ் 'மஹால்'

டைரக்ஷன் (1)

"டைரக்டர் க. வேம்பு"

டைரக்டர்: திரைப்படங்கள் ஆரம்பகாலமுதல், இந்தப் பொறுப்புள்ள வேலைக்கு ஒரு தனி கௌரவம் இருந்துவந்தது படத்தை எடுக்க அவசியமான காமிராமான், ஸவுண்டு என்ஜினீயர், நடிக நடிகை கள், கலை டைரக்டர், சங்கீத டைரக் டர், இன்னும் பல உபபாத்திரங்கள் ஆகிய ஏராளமான நபர்கள்கொண்ட பெரும் சைன்னியத்திற்கு இந்த டை ரக்டர்தான் அதிபதி இவர் சொல் படிதான் எல்லோரும் நடக்கவேண் டும் சினிமா சேனதிபதியான இந்த டைரக்டரின் பொறுப்பு மிகவும் அதிகமானது. நேர்மையான முறை யில் படம் எடுக்கும் எல்லா படங் களுக்கும் முதல் ஸ்தானமான பொறுப்பு டைரக்டருக்குத்தான் உண்டு.

இவ்வளவு பிரமாதமான பொறுப் புள்ளவர் செய்யும் வேலை என்ன? டைரக்டராய் வருபவர்களுக்கு தெரிந்துகொள்ளவேண்டியதுஎன்ன? எங்கேயாவது படிக்கவேண்டுமா? படித்து பின் பாஸ் செய்யவேண் டுமா? இந்த வேலைக்கு பள்ளிக்கூடம் —உலகம், பட்டம்—உலக அனுப வம்: இதைத் தவிர படப் பிடிப்பின் பல துறைகளிலும் பழகுவது.....இவ் வளவுதான்! வாழ்க்கையின் ரகசியங் களை நன்குணர்ந்து, கதையை பிற ருக்கு எளிதில் புரியும்படி சொல் லும் சக்தி வாய்ந்தவர்கள்தான் இந்த உத்தியோகத்துக்கு மிகவும் தகுதி வாய்ந்தவர்கள்

டைரக்டர் தன் கல்பனை சித்தி ரத்தை சிருஷ்டிக்க, கதாசிரியர், கவி ஞன். சங்கீத டைரக்டர், ஆர்ட் டைரக்டர், ஒளி, ஒலிப்பதிவாளர்கள் மேக்-அப் நிபுணர், உடையலங்கார நிபுணர், நடிகர்கள் முதலியபலதிறப் பட்ட கற்பனைக்காரர்களை ஒருமுகப் படுத்தி தன் பாதையில் வர, மார்க் கம் காட்டுவதால் இவரை மார்க்க தரிசி (DIRECTOR) எனச் சொல்ல லாம்.

முதலாளியும்—டைரக்டரும்

படத்தொழிலில் பட முதலாளிக் கும், டைரக்டருக்கும் மனப்பூர்வ மான நம்பிக்கையும், அன்பும், நேச மும் அத்தியாவசியம், பட முதலாளி யையும், டைரக்டரையும், புருஷன் மனைவியாக ஒப்பிடலாம். புருஷ னுக்கும் மனைவிக்கும் உள்ள பிணைப் பைவிட இது பொறுப்பு வாய்ந்தது. பட முதலாளி தன் பாக்கியத்தை பணயம் வைப்பதுபோல் டைரக் டரை நம்பி, தனது மூல தனத்தைப்



பிரிட்டிஷ் டெலிவிஷன் ஸ்டுடியோ ஸவுண்டு எஞ்ஜினீயர், டைரக்டர் எல்லோரும் அலுவல் புரிவதற்கு அனுகூலமாகக் கண்ணாடியினால் கட்டப்பட்டிருக்கிறது.

போடுகிறார். டைரக்டர் தன் எதிர் காலத்தை முதலாளியின் மூலதனத்துடன் பணயம் வைக்கிறார். இருவருக்கும் பொறுப்பு உண்டு. படம் நல்ல முறையில் எடுக்கப்பட்டால், முதலாளிக்கு ஏராளமான பணம் வரும்; டைரக்டருக்கும் படத்திற்கு மேல் படம் வரும். ஆதலால் இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் துணை கொள்கின்றனர். இருவருடைய வாழ்க்கையும் லாப நஷ்டத்தில் பாதிக்கும் தன்மைகொண்டது. படம் நன்றாய் ஓடினால் இருவரிடையே வருத்தங்கள் இருந்தாலும் மறந்து, மறுபடியும் அதே டைரக்டரையே ஒவ்வொரு முதலாளியும் கூப்பிடுவாகள். படம் நன்றாய் இல்லாவிட்டால் பழய முதலாளியும் கூப்பிடமாட்டார்; மற்றைய புது முதலாளிகளும்கூப்பிடபயப்படுவார்கள்.

நல்ல முறையில் படம் எடுக்க விரும்பும் முதலாளி, டைரக்டரை பொருக்கி எடுத்து, தான் எடுக்க விரும்பும் படத்திற்குரிய செலவுக்கு ஒதுக்கும் தொகைக்குள் படத்தை முடித்துக் கொடுக்க வேண்டிய பொறுப்புக்கு தகுந்த மாதிரி கதையை பல பொறுக்கிச் சொல்லி, அவற்றில் முதலாளி எதை விரும்புகிறார் என்பதை முடிவு செய்துகொண்டு, அவரது திட்ட தொகைக்குள் அந்தக் கதையை முடித்துக் கொடுக்க வேண்டிய பொறுப்புகளையும் ஒப்படைக்கப்பட்டவராகிறார்

கதையும்—டைரக்டரும்

நல்ல கதாசிரியர் ஒருவரை பொறுக்கி, டைரக்டர் குறிப்பிட்ட கதையை திரைக்கு அமைத்துக் கொடுக்கும்படி செய்கிறார். அந்தக் கதையை தானும் நன்றாக ஆராய்ச்சி செய்து, அது உண்மை சம்பவமாய், போதிய ஆதாரங்களுடன், சரித்திர பிரசித்தி பெற்றிருந்தால், அதில் வேறு எந்தவிதமான மாறுதலும் செய்யாமல் உண்மையான பண்புகளை அப்படியே படரூபமாகத வேண்டிய முயற்சிகளை செய்கிறார். வெறும் கற்பனை கதையாய் இருந்துவிட்டால் டைரக்டர் படும் அவதிகளுக்கு அளவு இல்லை அதில் வரும் சம்பவங்கள் எல்லாம் தத்ருபமாய் நடந்தவைபோல் சிருஷ்டிக்க, கதாசிரியருடன் வாதித்து கரடு முரடான பாதையில்லாமல் ஜனங்களுக்கு எளிதில் புரிந்துகொள்ளும் படியும். உணர்ச்சியை தட்டி எழுப்பும் வேகத்தையும் பொருந்த வைக்கும் பொறுப்பும் டைரக்டரைச் சார்கிறது. இந்த கட்டத்தில் கதாசிரியருடன் வாதிக்க வேண்டி வந்தால், தன் கற்பனை நியாயமானதுதான் என்பதற்கு ஆதாரம்காட்டி, கதாசிரியரை திருப்திபடுத்தியும், கதை நன்கு அமைவதற்குண்டான எல்லா சிறப்புகளையும் அணிவகுத்தும் கொடுக்கிறார். தன் வாதத்தில் தவறுகள் இருந்தால் திருத்திக்கொள்ளவும், கதாசிரியர் கொடுப்பனவற்றில் நல்ல கருத்துகள் இருந்தால், ஏற்றுக் கொள்ளவும், ரசிக தன்மையுடன் கூடிய தாராள மனப்பான்மை டைரக்டருக்கு வேண்டும். மானிட வாழ்வில் படித்தவர்கள் முதல் படிக்காதவர்கள் வரை ரசிக்கும்படி செய்வற்கு. டைரக்டருக்கு நல்ல கல்வி அறிவும், உலக அநுபவமும் உணர்ச்சி வசப்படும் தன்மையும் அவசியம் வேண்டும். கதா பாத்திரங்களின் உணர்ச்சியை நிர்ணயிக்கவும், வசனங்களின் பாவங்கள், நடைநொடியின் உத்வேகம், இவைகள் மனதை கவரும்படி எல்லையிடும் திறமையும், டைரக்டருக்கு வேண்டும்.

2

பழ ஆகாரத்தின் முக்கியத்துவம்

★

மனித சரீர வளர்ச்சி, ஆரோக்கியத்திற்கு அத்தியாவசியமானது என்று போஷண நிபுணர்கள் அறை கூவுகிற கனிவர்க்கங்களும் அவை கிடைக்கிற அளவும் சென்னை ராஜதானியில் தற்காலம் மிகவும் குறைந்ததாகவே இருக்கின்றன. மா, வாழை, பலா முதலியவையே இம் மாகாணத்தின் பல பகுதிகளிலும் இருப்பவை. இவையும் போதுமான அளவில் கிடைப்பதுமில்லை, தின்னப்படவுமில்லை சாமான்னிய குடும்பத்துச் சாப்பாட்டுத் திட்டத்தில் இவை கிடைப்பதே இல்லை இந்தக் குறையைத் தீர்த்துச் சரிக்கட்டும் வகையில் தீவிர முயற்சியாதும் செய்யப்படவில்லை. ஏதோ ஒன்றிருவா ஆங்காங்கே சிறுசிறு பழத்தோட்டங்களை உண்டாக்கிக்கொண்டிருப்பது உண்மை. குளிர் பிரதேசமாகிற நீலகிரி, கொடைக்கானல் மலைகளில் சர்க்கார் தோட்டங்களிலும் இதர நிலச்சுவான்தார்கள் சிலராலும் மேல்நாட்டுக் கனிவர்க்கங்கள் சில நன்கு பயிர் செய்யப்படுகின்றன ஏர்க்காடு மலைச்சரிவுகள், குடகு வயநாடு மலைப்பிரதேசம் வட சர்க்கார் ஏஜன்ஸிமலைகள், பங்களூர், சேலம் சித்தூர் ஜில்லா பாகங்கள். கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்களின் பகுதிகளில் ஒருவாறு பழவர்க்க சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது சமவெளிப் பிரதேசத்தில் அமோகமான அளவில் பழக்கிருஷி செய்கை செய்யப்படவில்லை பெரிய நிலப்பர்ப்புடையவர்கள் இவ்வகையில் அவ்வளவாகச் சிரத்தை எடுத்துக் கொள்ளாததே இதற்கு முக்கிய காரணம். அன்றியும், ஜன சமூகம் இன்னம்.

பழ உணவின் அவசியத்தை நன்கறிந்து தங்களுடைய தின சரி உணவு திட்டத்தில் ஒரு சிறு பாகம் பழ உணவாக இருக்கவேண்டுமென்றதையும்பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாததும் விசனிக்கத்தக்கது.

ஏராளமான தக்க நிலமும் பழச் செய்கைக்கு லாயக்காகக் கிடக்கிறது பலவிதக்கனி தரும் மரங்கள் நன்கு விருத்தியடையவும் கூடும். பணம் படைத்தவர்கள் இவ்வகையில் பிரவர்த்தித்துப் பழ ஆகாரத்திற்கு முக்கியத்துவம் உண்டாக்கிப் பழத் தோட்டங்களை ஏற்படுத்தி ஏராளமான நல்லுணவை நாட்டு மக்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டிய நல்லியக்கம் இப்பொழுது தேவை

சமூகத்தின் உடல் நலனைப் பேணிப் பாதுகாக்கும் வைத்திய சாஸ்திரப் பயிற்சியாளர் சாமான்னிய ஜனங்களுக்கு இந்த மேன்மையான உணவின் முக்கியத்தை எடுத்துக்கூறவேண்டும்; மென்மேலும் பழக்கி ருஷியை அதிகப்படுத்த விவசாயிகளுக்கு ஊக்கமளித்து அவர்களை உற்சாகப்படுத்தி வேண்டிய வசதி உதவிகள் தந்து முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாகப் பழ விருக்ஷங்களை வைத்துப் பராமரித்து மேன்மை அடையச் செய்ய முன் வருவார்களா?

குடியானவர்கள் தங்கள் பண்ணைகளில் இவற்றை வைத்து வளாக்க அதிகச் செலவு ஒன்றும் செய்யவும் அவசியமில்லை அவர்களுடைய வரும்படியும் குறையாது அதிகமாகவே தான் கிடைக்கும்.

உணவு தான்யப் பயிர் விஸ்தீர்ணமும் கம்மியாய்விடும் என்ற அச்சமும் தேவையில்லை மூலை முடங்குகள் தரிசுகள், கிணற்றுமேடு, கால் வாயோரங்கள். வாசஸ்தல முகப்பு. புழக்கடை ஒதுக்கம் முதலிய இடங்களில் நிலம், வளம், பருவம், வசதி, கிராக்கி, முதலியவற்றை அனுசரித்து ஏற்ற பழச்செடிகளை உண்டாக்கித் தாமும் உண்டு மீதமான வற்றை விற்பனை செய்து லாபம் அடையலாமே

ஒவ்வொரு ஜில்லா தாலூகா, பிர்க்காவிலும் பழ விருக்ஷங்களை வளர்க்கும் இயக்கம் ஏற்படவேண்டும். ஒன்றிரண்டு பிரமுகர்கள் வழிகாட்டிகளாக இருந்து விதைகள், நாற்றுகள் கொடுத்து உதவி, விஷயஞானம் தந்து குடியானவர்களைத் தட்டி எழுப்பி உழல்வார்களானால் சில வருஷங்களில் நாடு முழுதும் பழங்கள்பெருகி ஜனங்கள் உண்டு திருப்தி அடைந்து சரீர மேம்பாடடைவார்கள் என்பதில் சற்றும் ஐயமில்லை

மற்றும், பழச் செய்கை பல தொழிலாளர்களுக்கு வெவ்வேறு காலங்களில் விதவிதமான வேலை கொடுத்தும், தான்ய விளைச்சல், தைலவித்துப் பயிர் உண்டாக்குதல், ஆடைகளுக்காகச் செய்யும் பருத்திக் கிருஷி முதலியவும் பிறவும் கொடுக்கிறதைவிட அதிகமான லாபமும் கொடுப்பது.

விவசாயத் தொழிலில் எல்லா உழைப்பாளிகளுக்கும் வருஷம் பூரா வேலை இருக்காது அக்காலங்களில் தோட்டங்களை வைத்து சுவல்ப காலப்பழச்செடிகள் நீண்டகாலப் பழவிருக்ஷங்கள் முதலியவற்றைத் தனித்தனி பராமரித்துவரும் விதமாக வேலையில்லாக்குறையைத் தீர்த்துக்கொள்ளக்கூடும்

இதன்றி பெருவாரியாகக் கனிவர்க்கக் கிருஷிச் செய்கையால் பழங்கள் நல்ல உணவு ஆவதன்றி உபரி பொருள்களாக வியாபாரச் சரக்காக்கப்பட்டு உபயோகப்படுத்தவும் கூடும் போஷண முறையிலும் பழங்களையொத்த சிலாக்கியமான வஸ்துக்கள் வேறே இல்லவும் இல்லை

தென் இந்தியாவில் ஏராளமாகக் கிடைக்கிறதும் உயர்தர போஷணை செய்வதுமான பழம்.

வாழைப் பழம்

'மூஸா ஸேபியண்டம்'
,, காவெண்டிஷை.
,, பாரடிஸியாகா.

இவ்வுலகின்கண் உண்டாகிற தாவர வஸ்துக்கள் எல்லாவற்றிலும் அதிக அழகுள்ளதும், மிகப் பயன்படுவதும், வெகு சீக்கிரத்தில் உபயோகத்திற்கு வருவதுமான பழ விருட்சம் வாழை—விசித்திரவினோத

மானது இவ்விராஜதானியிலாகிற வாழைப்பழம், காய் உள்ளூர்ச் சந்தைகள், கடைகளிலேயே அநேகமாகச் செலவாகிறது. பெரிய பட்டணங்கள் நகரங்களுக்கு ரயில் மார்க்கம் அனுப்பப்படுவது வருஷத்தில் 10 லட்சம் ரயில் மணங்குகளாகின்றன. சென்னைப்பட்டணம் மாத்திரம் இதில் பாதிக்கு ஜவாப்தாரி.

வாழைப்பழச்செய்கை, வியாபாரம் சம்பந்தப்பட்டமட்டில் ஒருவிதமாகத் திருப்தியாகவே நிலைமை இருக்கிறது. ஆனால் இதர பழங்கள் விஷயத்தில் அவ்விதம் இல்லை.

வாழை: இதன் தண்டு நேர்த்தியானது. ஒன்றன்மேல் ஒன்றாக நன்கு அடுக்கிஅமைக்கப்பட்ட இலைக்காம்புகளாலானது. நடுவிலிருந்து பற்றி எல்லாப் பக்கங்களிலும் வீசிப் பரவுகிற சற்றுப் பசுமையான நீண்டகன்ற இலைகள் பார்க்க மனோரம்மியமானவை. உச்சியில் இவ்விலைகளின் நடுவிலிருந்து காய்க்குலை அழகாகக் கீழ்நோக்கித் தொங்குவதைப்பார்க்க ஆனந்தமாயிருக்கும். உஷ்ணப் பிரதேச சாக பதார்த்தங்களின் சிகரம் வாழை எனக்கூறுவது மிகையாகாது.

வாழையின்காய், பழம், பூ, தண்டு இலை காம்பு, வேர் முதலிய பல பொருள்கள் கோடானுகோடி மக்களுக்கு உணவளிக்கின்றன. உஷ்ண தேசத்திற்கு வாழையே வடசமசீதோஷ்ண நாடுகளுக்கு ரொட்டியும் உருளைக்கிழங்கும். எவ்வித முக்கிய ஆகாரப்பொருள்களோ அதே விதம் உபயோகப்படுகிறது.

மனித சரீர போஷணைக்கு அவசியமான ஜீவசத்துக்கள் ஏராளமாக இதிலிருக்கின்றன. மூன்று ராத்தல் மாமிசத்தில் கிடைக்கிற போஷாக்கு ஒரு ராத்தல் வாழைப்பழத்தில் இருக்கிறதென்றும், ஆகாரவகையில் உத்கிருஷ்டமான கோதுமை ரொட்டியைவிட சிலாக்கியமானதென்றும் அறிஞர் கூறுகிறார்கள்.

மேற்சொன்னவிதம் சத்துக்கள் நிரம்பியுள்ள உணவு பொருளே யல்லாமல் இதுவரை தெரிந்த உணவு செடிகள் எல்லாவற்றிலும் அதிகமான மாகூலும் அதிக சுவல்ப காலத்திலும், கொடுக்கக்கூடியதாகவும் இருக்கிறது.

33 ராத்தல் கோதுமை. அல்லது 98 ராத்தல் உருளைக்கிழங்கு உண்டாகப் போதுமான அளவு நிலத்திலிருந்து 4,000 ராத்தல் வாழைப்பழம் கிடைக்கக்கூடும் என்று பிரசித்தி வாய்ந்த ஜெர்மன் வித்தியார்த்தி ஹம்போல்டு பெரியார் கணக்கிட்டிருக்கிறார்.

வாழையில் 'காய் தினுசுகள்' 'பழ தினுசுகள்' என்று இரண்டு ரகங்கள் தனித்தனியாக இருக்கின்றன என்று சிலர் நினைக்கிறார்கள். இந்த வாழைப் பயிர் இவ்வுலகின் இரண்டு கோளார்த்தங்களிலும் உஷ்ணப் பிரதேசப் பயிராக நன்கு வளர்கிறது.

இந்தியாவில் பச்சைக்காயைக் கறி சமைத்துச் சாப்பிடும் தினுசுக்கு (பிளாண்டன்) என்று பெயர்.

பழ தினுசுகளை (பனானா) என்கிறார்கள். முந்தினது பிற நாடுகளுக்கு வியாபாரச் சரக்காக ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. 'பனானா' என்ற பழ தினுசுகளே மேற்கிந்திய தீவுகள், மத்திய அமெரிக்கா, காஸ்டாரீகா, முதலியவும் பிறவும் அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஐரோப்பிய தேசங்களுக்கு ஏராளமாக அனுப்புகின்றன.

ஜமெய்காவே இவ் வியாபாரத்திற்கு முக்கிய மத்தியஸ்தானம்.

இந்தியாவில் வெகுகாலமாகப் பயிராக்கப்பட்டுவருகிற பழச் செடி வாழை. பழங்காலச் சுவடிகளில் இதைப்பற்றி வெகுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அநேக ரிஷிகளும் சந்நியாசிகளும் இதையே புசித்து ஜீவித்தார்கள் என்றும் அறியக்கிடக்கிறது. இச் செடியின் ஜன்ம பூமி ஆசியாவின் உஷ்ணப் பிராந்திய வனாந்தரம் என்று கூறுகிறார்கள். சிலர் இந்தியாவே இதன் தாயகம் என்கிறார்கள். கிரேக்கர் லத்தின் நாட்டார், அரபியாகள் அவரவர்களுடைய புராதன விருத்தாந்தங்களில் வாழைப்பழம் அதிக சிரேஷ்டமான இந்தியப் பழம் என்று கூறியிருப்பதாக டிகண்டல் கூறுகிறார்.

தினுசுகள்

பலவேறான பூமிகள் மாறுபட்ட சீதோஷ்ணப்பிரதேசங்கள். வெவ்வேறு செய்நேர்த்தி வயணங்கள் இப்பரந்த பூமியின் உஷ்ணப் பிரதேசத்தின் முழுதிலும் பயிராக்கப்படுகிற இவ்வாழையில் நூற்றுக் கணக்கான தினுசுகள் காணப்படுவது சகஜமே. (அனுபந்தம் 1)

இந்தியாவில் செய்கை

வடக்கே வங்காளத்தில் நதிகளின் மருங்குகளில் பயிராகிறது. பம்பாயில் தோட்டப் பயிராகச் செய்கிறார்கள். அஸ்ஸாமிலும், பர்மாவிலும் எல்லா பாகங்களிலும் காணப்படுகிறது.

மதராஸில் எல்லா ஜில்லாக்களிலும் சிறுகவோ பெருகவோ வாழைப் பயிர் செய்கிறார்கள். சற்றேறக் குறைய 1½-லக்ஷம் ஏகரில் இப்பயிர் செய்யப்படுகிறதாக சர்க்கார் வருஷாந்தரப் பயிர் புள்ளிக்கணக்கிலிருந்து தெரியவருகிறது.

(அனுபந்தம் II)

சென்னை மாகாண விளைச்சல்

குறைந்தபக்ஷ சராசரியாக ஏகர் ஒன்றில் 700 வாழைகளாக வைத்துக்கொண்டு மொத்த மாசூல் 6¼டன் என்று மதித்துக்கொள்ளலாம். ஒரு குலைப் பழம் 20 ராத்தலாக வைத்துக்கொண்டால் ஏகரில் 14 000 ராத்தல் பழம் கிடைக்கும். மலைப்பழம் செங்கதலி, சக்கரக்கேளி முதலிய உயர்தரப் பழங்கள் தற்காலம் 100-க்கு ரூ 2முதல் ரூ 3வரை ஆகின்றன. மட்டரகப் பழங்களாகிற பூவன். கதலி போன்றவை ரூ 1 1½ ஆகலாம்.

நிலம்

வாழைப் பயிர் சமுத்திரமட்டத்திலிருந்து 5500 அடி உயரம்வரை. கருமண், செம்மண். களிமணல் ஆகிற எவ்வித பூமியானாலும் ஏராளமான நீர் வசதியும் நேர்மையான வடிகாலும் இருந்தால் மேன்மையாக வளர்ந்து பலம் கொடுக்கும். ஏராளமான நீர் இப்பயிருக்குத் தேவையென்றாலும், சதசதப்பான ஈரங் கோர்த்துக் கிடப்பது கூடவே கூடாது.

முன்செய் நேர்த்தி

முந்தின பயிர் அறுவடையானவுடனே நிலம் 3 4 தடவை நன்றாக உழப்படவேண்டும். இரண்டாம் உழவு ஆனவுடன் 20. 30 வண்டி மக்கின மாட்டெரு போட்டுப் பிறகு மற்ற இரு உழவுகள் செய்யப்பட வேண்டும். உழவுக்கும் மறு உழவுக்கும் இடையில் ஒருவார காலமாவதுவிட்டு நிலத்தை உலரப் போட்டுச் சூரிய வெப்பம் நன்கு படும்படி செய்யவேண்டும்.

செடி நடவுகாலம்

சாமான்னியமாக இப்பயிருக்கு இந்தப் பருவம் இந்தப் பட்டம்தான் நடப்படவேண்டுமென்ற நிபந்தனைகள் இல்லை என்றாலும் குளிர்காலமாகிற நவம்பர் மத்தியிலிருந்து பிப்ரவரி மத்திவரை நடப்படாது.

நடவு—குழிகள்

8 அடிக்கு ஒன்றாக வரிசைகள் போட்டு ஒவ்வொரு வரிசையிலும் 7 அடி தூரத்திற்கு ஒன்றாக 1½ அடி நீளம் அகலம் ஆழத்தில் குழிகள் தோண்டி வெட்டின மண்ணைப் பக்கத்தில்போட்டு இரண்டு வாரங்கள் காற்றடவிட வேண்டும். கன்றுகளை நடுவதற்கு முன்பு ஒவ்வொரு குழிக்கும் ½ பட்டணம் படி சாம்பல் முன் வெட்டிப்போட்ட மேல்மண்ணுடன் கலந்து குழியில் நிரப்பவேண்டும் (எந்தக் காரணத்தைக்கொண்டும் அடி மண் கண்டத்து மண்ணையிட்டுக் குழியை நிரப்பவேண்டாம்)

(தொடரும்)

1

வெட்டிவெட்டி மின்னுகின்றாய் கம்பி மின்னலே!
விழிகள்கூச மின்னுகின்றாய் கம்பி மின்னலே!
எட்டியுன்னைப் பிடிப்பதற்கோ கம்பி மின்னலே!
எங்களாலே முடியவில்லை கம்பி மின்னலே!

2

எங்குபோய்நீ ஒளிகின்றாயோ கம்பி மின்னலே!
எங்களுக்குச் சொல்லிடாயோ கம்பி மின்னலே!
பொங்குமொளி காட்டுகின்றாய் கம்பிமின்னலே!
பொல்லாஇருள் போக்குகின்றாய் கம்பி மின்னலே!

3

கலைசிறம்பி ஆடும்பெண்போல் கம்பி மின்னலே!
காட்டுகின்றாய் நன்னடனம் கம்பி மின்னலே!
விலைமதியா உன்னடனம் கம்பி மின்னலே,
விரும்புதற்கு நல்விருந்தாம் கம்பி மின்னலே!

4

யாரிடத்தில் கற்றகல்வி கம்பி மின்னலே?
அமைந்தவிதம் கூறிடாயோ கம்பி மின்னலே?
நாரியர்கள் பயிலுதற்குக் கம்பி மின்னலே!
நற்குருவாய் உதவிடுவாய் கம்பி மினனலே!

5

அருகிருந்து சற்றுநேரம் கம்பி மின்னலே,
ஆடிக்களிப் பூட்டிடாயோ கம்பி மின்னலே?
விரும்பியதைத் தந்திடுவேன் கம்பி மின்னலே!
விரைந்துநீயும் வந்திடாயோ கம்பி மின்னலே!

6

மாநிலத்தின் வாழ்க்கையெனக் கம்பி மின்னலே,
மறைந்துமறைந் தோடுகின்றாய் கம்பி மின்னலே!
வானகத்தில் ஒளிவிடுவாய் கம்பி மின்னலே!
வாழ்த்தியுனைப் போற்றுகின்றேன் கம்பி மின்னலே!



மேஷ ராசி

(அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)

மேஷ ராசிக்காரர்களுக்கு இம்மாதத்திலுள்ள கிரக நிலைமை சாதகமானதாயிருக்கிறது. இதனால் அதிகமான திருப்தியும், பணம் உத்தியோகம் இரண்டிலும் அனுகூலங்களும் ஏற்படுமென்பதை இந்நிலைமை குறிப்பிடுவதாகும் வேலை அதிகமாயிருக்கும் அதற்கேற்ப ஆதாயமிராது சென்ற மாதத்தைவிடக் குடும்பவாழ்வு சந்தோஷகரமாக விளங்கும். வருமானம் தரமாயிருக்குமென்றாலும் முடையும் அதிகமாகி கைமாற்றாகக் கடன் வாங்குவதைத் தவிர்க்கமுடியாமற்போகும் செலவினங்கள் திடீர் திடீரென்று ஏற்படும். வயிற்றுக்கோளாறினால் ஆரோக்கிய நிலைமை திருப்திதராது வயோதிகர்களானால் அஜீரணத்தால் வயிற்று வலி ஏற்படும். வாலிபதசையிலிருப்பவர்களானால் பலதரப்பட்ட ருசிகரமான பதார்த்தங்களில் அவை அதிகரிக்கும் குருவும், சூரியனும் 10-வது இடத்திலிருப்பதால் குமாரரைப்பற்றி கவலைப்படும்படியிருக்கும் அல்லது குழந்தைகளைப்பற்றிப் பொதுவாக கிலேசப்படும்படியிருக்கும். குடும்பத்தில் சுபகரமான நிகழ்ச்சிகள் வர இடமுண்டு. உத்தியோகத்தில் மாற்றமோ அல்லது செய்யும் அலுவல்களில் மாற்றமோ நேரும் வேலை வரவர அதிகமாகும் மேலதிகாரியிடமிருந்து செய்யும் சேவைக்குப் பாராட்டிருக்கும் இதனால் ஆதரவுகள் ஏற்படும். வேறு மேலதிகாரி ஏற்படலாம் வியாபாரிகளுக்கும் இம்மாதம் உற்சாகம் தருவதுதான் புதிய வியாபார இனங்களில் சிரத்தை பிறக்கும். வழக்கத்தைப்போலில்லாமல் இம்மாதம்பாங்காகளின் ஆதரவு கிடைக்கும் பண விஷயத்தில் தடங்கலும் ஏற்படலாம். இது விரைவில் விலகிவிடும். குதிரைப்பந்தயக்காரர்களுக்கும் இம்மாதம் உற்சாகம் தருவதாகும்

ஜனவரி 18, 19, 27 28, 29, 30 31 பிப்ரவரி 1, 2 6, 7 11, 12 தேதிகள் இவர்களுக்கு அதிர்ஷ்டகரமானவை.

விருஷப ராசி

(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)

சென்ற மாதத்தைக் காட்டிலும் அதிகமான நம்பிக்கையைக் கொடுக்கக்கூடிய மாதமிது. எதிர்கால வாழ்வைப்பற்றிய சகல விஷயங்கள் குறித்தும் தீவிரமாகக் கவனம் செலுத்தும்படியிருக்கும். செலவு கடுமையாகவிருக்குமென்றாலும் பண வசதிகளும் அபிவிருத்திகரமாகத்தானிருக்கும். சனி, செவ்வாய் இவர்களது கெடுதலான பார்வை காரணமாகப் பூர்ணமான மனத் திருப்தி இராது குடும்பத்தில் சௌகர்யம் ஏற்பட இன்னும் கொஞ்சகாலமாகும். செவ்வாய், கேது, நெப்டியூன் இவர்கள் 5-வது இடத்திலிருப்பதால் மனப்பாரமும், நிம்மதியின்மையும் ஏற்படும். குழந்தைகளைப்பற்றிக் கவலைப்படும்படியாயிருக்கும் வயிற்றுக் கோளாறால் தேகாரோக்யம் திருப்திகரமாயிராது. இன்னும் சிறிது காலத்துக்கு மனைவியின் தேக ஆரோக்கியம் கேவலமடைந்தே வரும். தூர இடத்துப் பிரயாணத்தை மேற்கொள்ளலாம். வைதிக, சுக காரியங்கள் குடும்பத்தில் நிகழ இடமுண்டு நவலைகளுண்டு கல்யாண ஏற்பாடுகளையொட்டி ஏதேனும் ஏமாற்றங்களேற்படலாம். பொறுமையோடிருந்தால் இதிலும் வெற்றி காணலாம். பண சகாயம் வேண்டுபவர்கள் அடமானத்தைக் கொண்டுதான் சமாளிக்க முடியும் நண்பர்கள் செய்த உறுதிகளை நம்பியிருக்கலாகாது இது ஏமாற்றத்துக்குத்தான் இடம் கொடுக்கும் எதிர்கால அபிவிருத்திக்கு உத்தியோகத்துறை நம்பிக்கையூட்டும் மேலதிகாரியின் ஆதரவோ அல்லது செய்யும் வேலைகளுக்குப் பாராட்டோ கிடைக்கும் வேலைகள் பல தினுசாகவிருக்கும் சகபாடிகளுடன் தகராறின்றி பார்த்துக்கொள்க முதலாளிகள் இம்மாதம் ரொம்ப கண்டிப்பாகவும் கெடுபிடியோடுமிருப்பர் வியாபாரிகளுக்கு நல்ல நடப்பு புதிய திட்டங்கள்பற்றியெல்லாம் சிந்தனை செய்ய நேரும் வியாபாரத்தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளும் உத்தேசத்துடன் தூர இடத்துக்குப் பிரயாணம் செய்வதாயிருந்தால் அது நன்மை பயக்கும் அயல் நாட்டு வியாபாரம் செய்பவர்களுக்கு அனுகூலம் உண்டு இத்துறையில் செய்யும் கடிதப் போக்குவரத்து வியாபாரத்தை உறுதிப்படுத்தும்.

ஜனவரி 17, 20, 28 31, பிப்ரவரி 1, 2, 5, 6, 11, 12. தேதிகள் இவர்களுக்கு உதவிகரம்.

மிதுன ராசி

(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்வஸு 3-ம் பாதம் முடிய.)

இந்த மாதம் இந்த ராசிக்காரர்களுக்கு ஓய்வு ஒழிவில்லாமல் ஒரே தீவிரமாகவிருக்கும்படியிருக்கும் காம

ப்புத்துணர்ச்சியாலும், மனவேதனைகளாலும் உடம்பு சுகம் கெட்டுப்போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். முக்கியமான அலுவலையொட்டித் திடீரென்று ஒரு தூரமான இடத்துக்குப் பயணம் போக நேரும். இந்த ராசிக்காரருக்கு 8-வது வீடாகவுள்ள மகரத்தில் ஏற்பட்டிருக்கும் கிரக சேர்க்கை காரணமாயும், 4-வதுவீட்டிலுள்ள செவ்வாயினாலும், குடும்பத்தில் யாருக்காவது சுகவீனமேற்பட்டு சந்தோஷ நிலைமை பாதிக்கப்படும். பணமுடை தொடர்ந்திருக்கும் என்றாலும் திடீரென்று சகாயமேற்பட்டு இதில் வசதி உண்டாகும் கர்மாதிபனான குரு லக்ன அம்சத்தையடைவதால் மரியாதைக்கும், கௌரவத்துக்கும் பாத்திரமாக விளங்கலாம். உத்யோக இலாகாவில் ஆதரவுண்டு கல்விமான்களையும், வியாபாரப் பிரமுகர்களையும் சந்திக்கும் வாய்ப்பு கிட்டி இதனால் காலப்போக்கில் அனுகூலம் ஏற்படும். பெயா வெகு தூரம் வியாபகமடைந்து புகழ்கிடைக்கும். திடீரென்று உத்தியோக இலாகாவில் உயர்வை நாடுபவர்களுக்கு இம்மாதம் அதிருஷ்டகரம் வேலை முன்னேக்காட்டிலும்அதிகம் சிலருக்கு உத்தியோகமாற்றமோ அல்லது செய்யும் வேலைகளில் மாறுதலோ ஏற்படும். தசாதிபர்கள் நன்றாக விருந்தால் உத்தியோகத்தில் தொடர்ச்சியாகவும், சாதாரணமாகவும் அபிவிருத்திகள் இருந்து வரும் பண விஷயத்துக்கு இரண்டாம் பகுதிஏற்றது கார சொந்தக்காரர்களானால் தங்கள் வண்டிகளில் தகராறு காண்பார்கள். வியாபாரிகளுக்கு இம்மாதம் நல்லது. இவர்களது வருமானம் சீராக அபிவிருத்தியடையும் புதிய வியாபாரத்திட்டம் முன்னேற்றமடையும் அயல் நாட்டு வியாபாரம் லாபகரம் எண்ணெய், இயந்திர வியாபாரங்கள் லாபத்தைக்கொடுக்கும் புதிய வருமான துறையை லாபகரமாக நிர்ணயித்துக்கொள்ளலாம். வருமான இனம் அபிவிருத்தியென்றாலும் இவையெல்லாம் கையிருப்பைவிட ஏட்டில்தான் அதிகமாக இருக்கும் முன்பின்பாராத வியாபாரங்கள் செய்வதை விலக்கவேண்டும் மாறுபட்ட நிபந்தனைகளோடு கூட்டு வியாபாரத்தைச் செய்யக்கூடும்.

ஜனவரி 18 20, 23, 25, 31 பிப்ரவரி 1, 2, 5, 7, 12, 14 தேதிகள் இவர்களுக்கு நலமானவை,

கடக ராசி

(புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய)

உத்தியோகம், பொது வாழ்வு இரண்டிலும் முக்கியத்வம் நிறைந்ததாக விளங்கக்கூடிய மாதமிது ஏதாவது ஒரு விஷயத்தில் வெகு தீவிரமாக ஈடுபட்டு நிற்க வேண்டிய மாதமாகவுமிருக்கும் அனுகூலம் தரத்தக்கவர்களிடம் தொடர்பு கொள்ள நேரும் பண விஷயத்தில் அபிவிருத்தி உண்டு. இதோடு திடீரென்று பணம் சம்பாதிக்கும் சந்தர்ப்பமும் ஏற்படும். வாழ்வில் முன்னணிக்கு வரக்கூடிய தருணமும் இதுவே. தனக்காகவல்லாமல் பிறருக்காக அதிகமாக சேவைசெய்ய நேரும் கடன் கொடுப்பது, வாங்குவது போன்ற விவகாரங்களை விலக்குவது நல்லது. சமூகப் பழக்க வழக்கங்களால் சந்தோஷமேற்பட்டு முன்வந்து நிற்கக்கூடிய சந்தாப்பம் இது வெளியிடங்களில் அபிப்ராய பேதமும். விவாதங்களும் ஏற்படுமெனலாம் கல்யாணம் ஒன்று நிகழலாம். இதில் முக்கிய பாகமேற்கக்கூடும் உத்தியோகத்தில் இது ரொம்ப முக்கியமானதாகும் சிலா உத்தியோகத்துறையில் எதிரிடையாகவிருந்தபோதிலும் அவர்களையெல்லாம் அனுதாபத்தோடு முன்னணிக்குக் கொண்டுவரும் பெருந்தன்மை இருந்து வரும் வேலை கடுமையாயிருக்கும். சேவை பாராட்டப்படும். இதனால் பக்கத்திலிருப்பவாகளிடையே மதிப்போடிருக்கலாம் 3-ல் செவ்வாயிருப்பதால், உத்தியோகத்தில் மகிழ்ச்சிகரமான மாறுதலேற்படுவதுடன் வைதிகமாயும், பக்தியோடும் இருக்கும் மனப் பக்குவமும் ஏற்படும் இரண்டு பேருக்கு மேற்பட்டதாகவுள்ள கூட்டு வியாபாரங்களால் மனஸ்தாபங்கள் ஏற்படும் ரேஸ் கவர்ச்சியைக் கொடுப்பதுடன் லாபத்தையும் தரும்.

ஜனவரி 18 20, 25, 31, பிப்ரவரி 1, 2, 6, 11, 14 தேதிகள் இவர்களுக்குச் சௌகர்யமானவை.

ஸிம்ம ராசி

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய.)

இந்த மாதத்தில் இந்த ராசிக்காரர்களுக்கு அதிருஷ்டமோ துரதிருஷ்டமோ இரண்டும் அளவுடனில்லாமல் அதீதமாக இருக்கும். சென்ற சில மாதங்களாகத் திருப்திகரமான நிலைமையிலிருந்து வந்தவாகளானால் இம்மாதத்தில் அவாகளுக்கெல்லாம் ரொம்ப அனுகூலமுண்டு இதில்லாதவாகளானால் இம்மாதம் நிலைமை அவர்களுக்கு வெகு மோசமாகவேயிருக்கும் முக்கியமாக தேகாரோக்கியம், பணம் இவற்றிலெல்லாம் அதிகமான கஷ்டங்களேற்படும். கிரகங்களின் பரிவர்த்தனை உறவினர்களுடன் கொண்டுள்ள தொடர்பை பாதிக்கும் நிச்சயமாக உறவினர்களுடன் அபிப்ராய பேதம் ஏற்பட்டே தீரும் அவசரத்துக்காகப் பணம் தேவையாயிருப்பவர்களுக்குச்சுலபமாக பணம் கடனாகக் கிடைக்கும் மொத்ததில் பணத்தைப்பற்றிய கவலைகளே அதிகமாயிருக்கும். பணக்காரர்களானால்,

1950-ம்ஞூ ஜனவரி மாதம் 14உ முதல் 1950-ம்ஞூ பிப்ரவரி மாதம் 13உ வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ராசியைத் தெரிந்துகொள்ள உதவியாக நட்சத்திரங்களும் பாதங்களும் கூடவே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

1950-ம் வருஷம் ஜனவரீ 14-ந்தேதி காலையில் உள்ள கிரக நிலை.

ராகு			உரானஸ்
	ராசி		
குரு சுக்கிரன் புதன் சூரியன்			வ. சனி
	சந்திரன்		நெப்டியூன் செவ்வாய் கேது

கடன் கொடுத்த இடங்களிலிருந்து சுலபமாக வசூல் செய்துகொள்வது சாத்தியம் வசூலிருப்பினும் பணமுடை மிகக் கடுமையாகத்தானிருக்கும். குடும்பத்தில்நிலைமை நிம்மதியாகவும் சௌஜன்யமாயுமிராது. ஜனவரி இரண்டாம் பகுதியில் பண விஷயத்தில் ஏதாவது சங்கடங்களேற்படும். அடிக்கடி வேலைக்காரர்களின் தொந்தரவிருக்கும். 6-வது இடத்திலுள்ள கிரகங்களின் காரணமாக வயிற்றில் வாயு சேர்ந்து உபத்திரவங்கள் ஏற்படும். உத்தியோகத்தில் ஒன்று தூர இடத்துக்கு மாறிப்போக நேரும் அல்லது செய்யும் வேலைகளிலாவது மாறுதலேற்படும் சேவை செய்வது சந்தோஷகரமாயிராது. இருப்பினும் இதில் சிரத்தை என்னவோ அளவு கடந்துதான். இருக்கும். செவ்வாயினால் கண் கோளாறு ஏற்படும். குழந்தைகளால் திருப்தியிராது மனைவி அல்லது புருஷனின் தேகசுகம் கெடும். வியாபாரிகளுக்குச் சுறுசுறுப்பான காலம். ஆனால், வியாபார நடப்பு ரொம்ப சொற்பம். இதற்காகப் பண உதவி கோரினால் உடனே கிட்டும். கூட்டு வியாபாரத்தை இப்போது நிறுவக்கூடாது. நடப்பிலுள்ள கூட்டும் திருப்திகரமாகவிராது. ரேஸ் பிரியர்களுக்கு நல்ல காலமில்லை

ஜனவரி 18, 20, 25, 31, பிப்ரவரி 1, 2, 5, 6, 7, 11, 14 தேதிகள் இவர்களுக்கு விசேஷம்.

கன்யா ராசி

(உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய.)

5-வது இடத்திலுள்ள கிரகங்கள். 5-வது வீட்டுக்குடைய கிரகம் 12-ல், 3-வது வீட்டுக்குடைய கிரகம் 1-ல் இருப்பதெல்லாம் மன வியாகூலமே இம்மாதம் இந்த ராசிக்காரர்களுக்கு அதிகம் என்பதைக் குறிப்பதாகும். அநேகவிதமான இனங்களினால் மனம் பாரமுற்றிருக்கும். இவற்றைச் சமாளிக்கவும் முடியாது. சீக்கிரம் கோபம் வரும். முக்கியமாக வயதானவர்களுக்கு தேகசுகம் சரியாயிராது குடும்பத்தில் நிதானமிராது. சனி. செவ்வாய், ராகு இவர்களுடைய இட விசேஷத்தால் மனைவி அல்லது புருஷனின் தேகசுகம் சரியாயிராது பிறரோடு சண்டை பூசல்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். உறவினர்களால் உபத்திரவ[illegible]ற்பட்டு, இதனால் கிலேசமுற நேரும். 4-வது இடத்து[illegible]க்குச் செவ்வாயின் பார்வையிருப்பது கவலைகளின்றிக் கார் ஓட்டுவதற்குச்சாதகமானதாகஇல்லை இது வாஹனவிஷயமான சந்தோஷத்துக்கும் இடம்தராது இன்னும் சில மாதங்கள் வரையில் அடிக்கடி கார சரிவர ஓடுவதைப் பற்றி ஏதாவது தொடர்ந்து கவலைகளிருந்துகொண்டேயிருக்கும் உத்தியோகத் துறையிலுள்ள வாழ்க்கை முறை வித விதமாக விருக்கும் வேலை கடுமை ஊழியம் புரியும் இலாகாவில் செய்யும் வேலைக்குப் பாராட்டைப் பெறலாம். காரியாலயத்தில் எல்லா வேலைகளும் அடியோடு சரி பார்த்துச் செப்பனிட நேரும் பண விஷயத்தில் சற்று அனுகூலம் உண்டு வேறிடத்துக்கு மாற்றிப்போக நேர்ந்தால், அது சொந்த ஊருக்கு அருகிலிருக்கும் அல்லது அவ்விடம் நகரமாகவேனுமிருக்கும் வியாபாரிகளானால் ஹேஷ்ய விஷயத்தில் அதி தீவிரமான ஈடுபாடிருக்கும். இத்துறையில் வெற்றிகரமாகப் புதிய முயற்சிகளில் இறங்கலாம் வியாபார லாபங்கள் திருப்திகரம் கண்மூடித்தனமாகச். செய்யும் ஹேஷ்யங்கள் அனாவசியப் பொறுப்புகளில்தான் கொண்டு இறக்கும். ரேஸுக்குப் போகும் பழக்கமுள்ளவர்கள் ரொம்ப உஷாராயிருக்கவேண்டும்.

ஜனவரி 18, 19, 25, 31, பிப்ரவரி 1, 2, 5, 6, 7, 11, 14 தேதிகள் இவர்களுக்கு உதவிகரம்.

துலா ராசி

(சித்திரை, 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய.)

இந்த ராசிக்காரர்களுக்குச் சாதகமான கிரக நிலைமை இம்மாதத்தில் நிலவுகிறது. இரண்டாவது வீட்டுக்குடைய கிரகம் 12-ல் இருப்பது ஒன்றுதான் பண வசதிகளுக்குச் சுகமாயில்லை. பொதுவாகச் செலவு அதிகமாகும். திகைக்கும்படி எதிர்பாராத செலவினங்களும் எதிர்ப்படும் பணம் கொடுக்கல் வாங்கல்களில் கவலைகளுண்டு. உறவினர்கள், நண்பர்கள் முதலியவர்களால் சற்று நஷ்டம்கூட ஏற்படுமென்று சொல்லலாம் கடன் கொடுப்பது, வாங்குவது இரண்டும் நல்லபடியாக முடியாது. பணம் அல்லது வெளியிடப் பழக்கங்களால் மிக முக்கியமான நிகழ்ச்சியொன்று ஏற்படவிருக்கிறது. இது 1950-ம் வருஷம் ஜூலை 14-ந் தேதி வாக்கில் கைகூடக்கூடிய விஷயம். மனைவியின் தேக சுகம் பாதிக்கப்படும். ஆனால், இதை எந்த டாக்டரும் சரியாக நிதானித்து வைத்தியம் செய்ய முடியாமலிருக்கும் கணக்கு சம்பந்தமான வேலைகளில் இருப்பவரானால், அபாண்டங்களைச் சுமக்க நேரலாம் ஆயினும் விரோதமாகக் குற்றச்சாட்டுகள் எதற்கும் ஆளாக நேராது குடும்பத்தில் நிர்ப்பந்தம் காரணமாக தீவிரமாகச் சிரத்தை கொள்ளும்படியிருக்கும். அனுகூலம் தரத்தக்க முறையில் இடத்திலோ அல்லது குடும்ப வட்டாரத்திலோ மாறுதல் ஏற்படும். கார் வைத்துக்கொள்ள ஆசைப்பட்டு வந்தவர்களுக்கு இது யுக்தமான காலம் அவர்களுக்கு இம்மாதம் வாஹனப் பிராப்திக்கு இடமிருக்கிறது சகோதர சகோதரிகள் விஷயமாக மனநிம்மதியில்லாமல் போகும் இது கொஞ்ச காலம்வரையில், 7-வது வீட்டுக்குடைய கிரகம் 7-வது வீட்டைப் பார்ப்பதால். முதலில் சற்று எதிர்ப்பிருப்பினும் கல்யாண வைபவம் நிகழும். வியாபாரிகளுக்கு நல்ல நடப்புதான் என்றாலும் இவர்களுடைய முதலீடு இன்னும் கொஞ்சகாலத்துக்கு முட்டுக்கட்டை போட்டாற்போலத் தடையாயிருக்கும். ரொக்க வியாபாரம்தான் நல்லது. கூட்டு வியாபாரம் உற்சாகம் தருவதாயிராது. ரொம்ப ஜாக்கிரதையாக இருந்தாலன்றி ரேஸ் பிரியர்களுக்கு நல்லதல்ல.

ஜனவரி 18, 20, 25, 31, பிப்ரவரி 1, 2, 5, 6, 12, 14-ந் தேதிகள் இவர்களுக்கு சிரேஷ்டம்.

விருச்சிக ராசி

(விசாகம் 4-ம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய)

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இம்மாதம் வேலைப்பளு அதிகம். ஏழைகளிடத்திலும். கீழ்த்தரச் சிப்பந்திகளிடமும் அனுதாபத்தோடு நடந்துகொள்ள நேரும், இவர்களில் சிலருக்கு உதவி செய்யும் மனோபாவமும் இருக்கும். படித்தல், எழுதுவதுபோன்றவற்றில் ருசியுள்ளவர்களுக்கு அப்பழக்கம் மேற்கொண்டு அபிவிருத்தியடையும். அபூர்வமாக உள்ள உறவினர்கள் வியாபாரப் பிரமுகர்கள் இவர்களைச் சந்திக்கக்கூடும் பண விஷயத்தில் அபிவிருத்திகரமான நிலைமை உண்டு ஜனவரி 20-ந் தேதி வாக்கில் பணத்தைப்பற்றிகணக்குகளை சரிக்கட்டும் வேலைகள் சுலபமாயும் வசதியாயும் நடக்கும் சிலருக்கு உத்தியோக நிமித்தம் ஒரு பிரயாணம் நேரும் உத்தியோகத்தில் வேலையில் மாறுதலுடன் ஒரு பொறுப்பு ஒப்படைக்கப்படும். உத்தியோகத்தில் வேலையின் அதிகத்தால் கவலைகளேற்பட்டு உற்சாகமாயிராது வேலை செய்வதற்குத் தொடர்ந்து சந்தர்ப்பமுண்டு; ஆனால். பாராட்டிராது இது இம்மாதத்தின் விசேஷம். இதற்காக அந்தரங்க சுத்தியோடு வேலை செய்யும் பழக்கப் கெடாது தளர்ச்சியும், சுணக்கமும் இதில் குறுக்கிடாது மேலதிகாரியின் ஆதரவு எதிர்பார்த்ததுபோலிருக்காது வெளி மார்க்கெட்டுகளுடன் கடிதப் போக்குவரத்து நடத்தி அடுத்த மாதத்தில் புதிய வியாபாரத்தைச் செய்ய இப்போதே அதிகமாகக் கவனம் செலுத்தினால் வியாபாரிகளுக்கு அனுகூலமுண்டு. இரும்பு, இயந்திரம், புத்தகம், பேப்பர் போன்றவற்றில் வியாபாரம் செய்யப் புகுந்தால், லாபம் கிடைக்கும். வாத்தகப் போக்கு திருப்திகரம் ஆனால் பணம் கைக்குக் கிட்டுவது அடுத்த மாதமே இம்மாத இரண்டாம் பகுதியில் வியாபார நிமித்தம் மேற்கொண்டு பணம் பெற வேண்டியிருக்கும். ரேஸ் பிரியர்களுக்கு இம்மாதம் அதிருஷ்டகரம் சென்ற மாதம் அடைந்த நஷ்டத்தை இம்மாதம் இவர்கள் சரிக்கட்டிக் கொள்ள வழி உண்டு. ஜனவரி கடைசி வாரம் முக்கியமாக அதிருஷ்டகரமானது சங்கம் அல்லது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளுடன் தகராறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்

ஜனவரி 18, 20, 25, 31, பிப்ரவரி 1, 2, 5, 7, 11, 14 தேதிகள் இவர்களுக்கு யோக தினங்கள்.

தனுர் ராசி

(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய.)

இந்த மாதத்தில் தனுர் ராசிக்காரர்களுக்கு மிக முக்கியமாக விளங்தக்கூடிய இனங்கள் பணம் உத்தியோகம், குழந்தைகள் இவற்றைப்பற்றியதாகும் பண விஷயத்தில் நல்ல அபிவிருத்தி உண்டு ஊதிய உயர்வும், அபிவிருத்திகரமான வருமான மார்க்கமும் ஏற்படும் குடும்ப சொத்துப் பிரிவினைபற்றிய பிரச்னை இம்மாதம் பிரஸ்தாபத்துக்கு வரும் சிலர் இதற்காக வியாஜ்யம் தொடரும்படி நேரலாம் பணத்தை வசூலிப்பதற்காகப் போடும் எந்த வியாஜ்யமும் சாதகமாக முடிவடையும். கண் பார்வையில் கோளாறு உள்ளவர்களுக்கு இம்மாதம் அந்த நிலைமை இன்னும் மோசமடையலாம் இம்மாதத்திலேயே சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்துகொள்வது சாத்தியம். ஜாதகத்தின்படி தசா, புக்தி பொருத்தமாயிருக்குமானால், செவ்வாய் 10-ல் இருப்பதால், சிலர் கர்ப்பந்தரிக்க இடமுண்டு. செலவு உச்சம் தொழிலைப்பற்றி மன நிம்மதியிராது சில இனங்களில் சிக்கனத்துக்காக சிலர் வேலையைவிட்டு நீக்கப்பட்டும் போவார். வேலையிலுள்ள புத்திரர்கள் அபிவிருத்திகரமான மாறுதலைப் பெறுவர். அவர்கள் வேலையில்லாமல் சுயேச்சையாக உள்ளவர்களானால் உத்தியோகத்தில் புக முயல்வது நலம் குடும்பத்தில் மன நிம்மதியிராது வீட்டு விஷயமாக ஏதாவது சண்டை ஏற்படும் இதில் கோர்ட்டுக்குப் போவது நல்லதல்ல. சமரஸமாகத் தீர்த்துக் கொள்வதே உசிதமாகும் வியாபாரிகளுக்கு நிலைமை சுமார் ஹேஷ்யங்கள் லாபகரமாயிருக்கும் புதிய வியாபாரத் திட்டம் ஏற்படும் புதிய வியாபார அம்சங்களை அமுல் நடத்தும் சந்தர்ப்பமும் வாய்க்கும் ரேஸில் நஷ்டமிராது 9-வது எண் இருந்தால் சாதகமுண்டு

ஜனவரி 18 19, 25, 27, 28 31, பிப்ரவரி 1, 2, 5, 7, 11, 14 தேதிகள் இவர்களுக்குச் சிலாக்கியம்.

மகர ராசி

(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய.)

இந்த மாதம் மகர ராசிக்காரர்களுக்கு மிகவும் தீவிரமாக இயங்கக்கூடியதாகும். இவர்கள் ஏற்கவேண்டிய அலுவல்கள் பல வாழ்க்கை மிகவும் ஸரளமாகவும், குடும்பம்; வெளியிடம் இரண்டிலும் அதிகமாகப்பொறுப்புகளை ஏற்கக் கூடியதாகவும் அமைந்திருக்கும். பணத்திற்கு முடை யிருக்குமாயினும். இதில் வசதிகளற்றுப் போய்விடாது ஏழைகளாயிருப்பவர்களானால், தற்காலிகமாகக் கடன்பட்டிருக்க நேரும் தூர இடத்துக்குப் போகும்படியான ஒருபிரயாணம் வாய்க்கலாம் ஆரோக்கிய விஷயம் பூரணமான திருப்தியைத் தராது. வயோதிகர்களானால். இம்மாதம் தேக சுகவீனத்தால் அதிகமாகக் கஷ்டப்படுவார்கள் செய்யும் வேலையில் நிச்சயமாக மாறுதலிருக்கும். சிலருக்கு வேறிடத்துக்கு மாற்றலாவதற்கும் ஹேதுவுண்டு மேலதிகாரிகளிடம் கீழ்த்தரச் சிப்பந்திகள் அவதிப்படுவார்கள். ஊழியர்களைக்கொண்டு முதலாளிகள் அனுகூலமடைவார்கள். வியாபாரத்தில் ஹேஷ்யங்களைச் செய்பவர்களுக்கு கஷ்டமானகாலமிது வியாபாரம் முன்னேற்றமின்றி தேக்கமாக விருக்குமாதலால் சாதாரணமான வியாபாரிகள் மார்க்கெட்டுக்களிலிருந்து சற்று விடுபட்டிருப்பது விவேகம். இப்படியிருப்பினும் நஷ்டங்களேற்பட்டு விடாது வயிற்று வலி, கண் கோளாறு, கீல்வாயு உபாதி முதலிய நெடுநாள் ரோகமுள்ள மனைவி அல்லது புருஷர்கள் தேக சுகம் கெட்டு கஷ்டப்படுவார்கள் இலக்கியம், பிரசுரம்போன்ற காரியங்களுக்கெல்லாம் சாதகமான காலம் கடிதப் போக்குவரத்து நற்பயனைத் தரும் வேதாந்த விஷயமான பயிற்சிகளில் ஓரளவு வெற்றி கிட்டும் லக்னத்திலுள்ள கிரகங்களினாலும், 4-வது இடத்தைச் செவ்வாய் பார்ப்பதாலும் குடும்பத்தில் மாறுதலேற்படும்படியான நிர்ப்பந்தமேற்படும். இப்போது அங்ஙனமேற்படாவிட்டால் சித்திரை மாதத்தில் இது நிகழும். ரேஸுக்கு இம்மாதம் திருப்திகரமானதில்லை. அடுத்த மாதமே இதில் அதிருஷ்டமேற்படும்.

ஜனவரி 18, 25 31. பிப்ரவரி 1, 3 6, 7, 11, 12, 14, தேதிகள் இவர்களுக்கு உயர்வானவை.

கும்ப ராசி

(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய)

கும்பராசிக்காரர்களுக்கு 8, 9, '12–வது இடங்களிலுள்ள கிரகங்களின் அமைப்பு சாதகமாக இல்லையென்று சொல்ல இடமுண்டு ஆயினும். இம்மாதம் வேலை அதிகமாயிருப்பதுடன் பிறருக்காகத் தியாகம் செய்யும் மனோபாவம் அதிகமாயிருக்கும். தனக்கென்றில்லாமல் பிறருக்காகவே வாழ்வதாக எண்ணும்படியிருக்கும் செலவு வழக்கம்போல கடுமை. எடுத்துக்கொண்ட காரியங்களைப் பற்றி கவலை அதிகமாயிருக்கும். இருப்பினும் சீக்கிரம் இது சரிபட்டுவிடும். சில முக்கியமான காரியங்கள் நல்லபடியாக முடிவடையும். செலவு அதிகம் உண்டுபண்ணத்தக்க ஒரு பிரயாணம் நேரும். உறவினர்களும், நண்பர்களும் சில்லரைக் குற்றங் கண்டுபிடித்துத் தூஷிப்பார்கள் குடும்பத்தில் சந்தோஷ நிலைமையை எதிர்பார்த்திருக்கவேண்டிவரும். புருஷன் அல்லது மனைவியின் தேகசுகம் கெட்டிருக்கும் யாராவது ஒரு உறவினர்பற்றி கேட்கத்தகாத செய்தியைச் செவியுறநேரும். வருமானத்தைவிடச் செலவினங்கள்தான் அதிகம். கடிதப் போக்குவரத்தால் அபிப்ராய பேதமோ அல்லது சச்சரவோ ஏற்படும் உறவினர்கள் அனாவசியமாகப் பழி சொல்வார்களேயன்றி. பொது வாழ்விலுள்ள கண்யமும், அந்தஸ்தும் கெடாமல் பிரகாசிக்கும். உத்தியோகத்தில் வேலை அதிகமாயிருக்கும் என்பதைத் தவிர வேறு மாறுதலிராது கெட்ட தசா. புக்தியிலிருப்பவர்களானால், பிடிக்காத இடத்துக்கு உத்தியோக மாற்றமோ அல்லது வேலையிலிருந்து நீக்கப்படுவதோ நிகழும். முதல் பகுதியைவிட இரண்டாம் பகுதி விசேஷம். ஹேஷ்யங்களை வியாபாரிகள் விலக்கி, விடுபட்டிருக்க வேண்டும். வியாபாரம் சுலபமாயிருக்காது சிறிது காலம் வியாபாரம் மந்தமாயிருக்கும் சிப்பந்திகள் செலவு கடுமை ரேஸிலும் அதிருஷ்டமிராது இரண்டாம் பகுதி இதில் சிறிது அனுகூலமிருக்கலாம்.

ஜனவரி 18, 20, 25, 31, பிப்ரவரி 1, 3, 6, 7, 12, 14 தேதிகள் இவர்களுக்கு உத்தமம்.

"என்ன ஸார் வீடு கிடைக்காம ரொம்ப நாளா அலைந்தின்...டிருந்திரே!... இப்போ எங்கே இருக்கேள்?"

"இப்போ நடுத்தெருவிலே இருக்கேன்!"

"அடப்பாவமே, கடைசியிலே நடுத்தெருவிலேயா நிற்கும்படி நேர்ந்துப் போச்சு?"

"அதில்லே ஸார்!...கிழக்கு மாடாதெருவுக்கு பக்கத்து தெருவு நடுத்தெருவு இருக்கே ஸார்!...அங்கே தான் குடியிருக்கேன்!"

மீன ராசி

(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

மீன் ராசிக்காரர்களுக்கு அநேகமாக எல்லாக் கிரகங்களும் இம்மாதம் அனுகூலம் தரத் தக்கவாறு அமைந்திருக்கின்றன அபிலாஷைகள் பூர்த்தியடையும். வெளியிடத்தவரின் ஆதரவு உண்டு பண விஷயத்தில் நிச்சயமாக அபிவிருத்தி உண்டு செலவைக் குறிக்கும் ஸ்தானத்தைச் சனி பார்ப்பதால் மீதம் பிடிப்பது சொற்பமாகவேயிருக்கும். பண சகாயத்தை எதிர்பார்ப்பதாயிருந்தாலும் அதற்கும் உரியகாலத்தில் சுலபமாக வகை ஏற்படும் நண்பர்கள் பலர் ஏற்படுவர் அவர்கள் ஆதரவும் உண்டு தக்க தருணத்தில் நண்பர்கள் உதவி செய்வார்கள் ஏகாதசக் கிரகங்களால் சகல விதங்களிலும் உல்லாசமேற்படும் புதிதாக எந்த முயற்சியையும் ஆரம்பிக்கலாம். கல்யாண முயற்சிகள் நடக்குமானால், விவாஹம் நிகழ இடமுண்டு 8–வது இடத்தில் செவ்வாய் இருப்பதால், மனைவியின் தேக சுகம் கெடும். சூழ்நிலைமை காரணமாக உணர்ச்சி வசப்பட்டு நிதானம் தவறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் உத்தியோகத்தில் நெறிதவற இம்மாதத்தில் இடமுண்டு இதனால் வெளியில் அவச் சொல்கள் ஏற்படாது உத்தியோகத்திற்கு மற்றப்படி இம்மாதம் சாதகமானதுதான் வேலை செய்யும் இலாகாவில் நற்பெயரும் ஆதரவும் இருந்து வரும் வேலை செய்வதற்குள்ள திறமை புகழப்படும். வேலைக்காரர்கள் பொறாமையினால் மறைமுகமாக விஷமங்களைச் செய்வர் எனவே உஷாராயிருக்கவேண்டும், உத்தியோகத்தில் நல்ல உயர்வுண்டு வியாபாரிகளுக்கு ரொம்ப லாபகரமான மாதம் நண்பர்கள், வாடிக்கைக்காரர்களின் ஆதரவு அமோகமாகவிருக்கும் கூட்டு வியாபாரம் உற்சாகம் தருவதாயிருக்கும் அபிவிருத்திகரமான நிபந்தனைகளின்பேரில் புதிய கூட்டு வியாபாரத்தை அமைக்கலாம் ரேஸ் பிரியர்களுக்கு அதிருஷ்டமான நிலைமைதான் இதற்குமுன் அடைந்த நஷ்டத்தை ஈடு செய்துகொள்ளலாம்.

ஜனவரி 18 20 25, 31 பிப்ரவரி 1, 2, 5, 6, 11 12, 14 தேதிகள் இவர்களுக்கு மேலானவை.

✶

பதிலுக்கு ஸ்டாம்போ, கார்டோ அனுப்ப வேண்டும்.

★

ஸ்ரீ பி. வி. ராவ்

நெ. 5, வாசுதேவபுரம்.
ஐஸ் ஹவுஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை, 5.

வாழ்க்கைச் சுழல்..

இந்து

5

நான் வண்டியை விட்டுக் கீழே இறங்கினேன்.

தெருத்திண்ணையில் 'சீட்டுக் கச்சேரி' நடந்து கொண்டிருந்தது அந்தக் கோஷ்டியிலிருந்த ஒருவர் 'ரகு!' என்று கூப்பிட்டார். உடனே உள்ளேயிருந்து என் கணவர் தெருப்பக்கம் வந்தார்.

'அசந்து போய்விட்டாயே! அதோ பார்' என்றார் என் கணவரைக் கூப்பிட்டவர்

உடனே என் கணவரின் பார்வை என்மீது விழுந்தது அந்தப் பார்வையை இப்பொழுது நினைத்துக்கொண்டால்கூடப் பயமாக இருக்கிறது அதில் அவ்வளவு கோபமும் ஆத்திரமும் பிரதிபலித்தது. இது நான் எதிர்பார்த்ததுதான் அவர் நாலு நாள் முன்னதாகவே வரும்படி எழுதியிருக்கிறாரே, கலியாணத்தன்று போய் நின்றால் ஏதாவது கோபித்துக்கொள்ளபோகிறாரே. 'அது ஏற்கனவே கோபித்துக்கொண்டிருக்கிறது இந்த அப்பா அம்மாவுக்கு இதெல்லாம் கொஞ்சம்கூடத் தெரியமாட்டேனென்கிறதே! நாமாக நேரில் சொல்வதென்றாலும் ஸங்கோஜமாக இருக்கிறதே' என்று நினைத்துக்கொண்டு போனேன். அதாவது அவர் எப்படியும் கோபித்துக்கொள்ளப் போகிறார் என்றுதான் எதிர்பார்த்தேன், நான் எதிர்பார்த்தது வீண்போகவில்லை.

தெருத்திண்ணையில் நிறைய மனுஷ்யாள் உட்கார்ந்து கொண்டிருந்தபடியால், அப்படி இப்படி திரும்பிப் பார்க்காமல் தலையைக் குனிந்துகொண்டே குடுகுடுவென்று உள்ளே சென்றுவிட்டேன்

'அதோ மன்னி வந்துவிட்டாள்' என்றாள் வஸந்தா.

'வாடியம்மா! வா! இன்னும் யார் வந்திருக்கிறதுகூட'

என்றார் மாமியார்

'அப்பா வந்திருக்கிறார்' என்றேன்

'அதென்னடி அது! ஒரு நாள் முன்னதாக வந்துவிட்டாயே! முஹூர்த்த வேளைக்கு வந்து முஹூர்த்த தாம்பூலம் வாங்கிக்கொண்டு அடுத்த வண்டிக்கேயல்லவோ போய்விடவேண்டும்! ஏன் அப்படி இன்று சாயங்காலமே வந்துவிட்டாய்? ஒருவேளை முஹூர்த்த தேதி தெரியாமல் வந்துவிட்டாயா?' என்றாள் பெரிய நாத்தனார்

இதைக் கேட்டுவிட்டு பக்கத்திலிருந்தவர்களில் இரண்டு மூன்று பேர்கள் 'கக்கபிக்கே' என்று சிரித்தார்கள். அவர்கள் யார என்று எனக்குத் தெரியவில்லை

"பின்னே என்னடி சகாயத்துக்கு மனுஷ்யாள் யாரும் இல்லையென்றால், சம்பந்தியம்மா மாதிரி ஒழுங்காக இன்றுவந்து நிற்கிறாளே! இதைச்சொன்னால் 'நாத்தனார் காரி பொல்லாதவள். பாவம் குழந்தை முதன் முதலாக புக்ககத்தில் போய் நுழைந்தால் இதைச் சொன்னாள், அதைச் சொன்னாள்' என்று என்னைப்பற்றி இல்லாத பொல்லாப்பு வார்த்தையெல்லாம் சொல்லப்போகிறார்கள். அவர்கள் செய்கிறது மாத்திரம் நியாயம். யாரும் வாயைத் திறக்கக்கூடாது' என்று தான் சொன்னது சரி என்று ஸ்தாபிப்பதற்காக அதற்கு ஒரு வியாக்யானத்தையும் பின்னோடு சொல்லிவிட்டாள் நாத்தனார்.

"போடி அது என்னத்தைக் கண்டது! அவர்கள் எப்பொழுது அழைத்துக்கொண்டு வருகிறார்களோ, அப்பொழுதானே அது வரமுடியும்! அதுவாகத் தனியாக வந்து விடமுடியுமா என்ன? அதற்குத்தான் நான் உங்கள் அப்பாவுடன் சொன்னேன் அந்தப் பெண்ணை ஒரு வாரம் முன்னதாகக் கொண்டுவிடுவதற்கு அவர்களுக்கு ஒழியுமோ ஒழியாதோ, ரகு வரும்போது அவனை அப்படியே வந்து அதையும் அழைத்துக்கொண்டு வந்துவிடும்படி எழுதுங்கள் என்று. அப்பொழுது பேசாமல் இருந்துவிட்டு, இப்பொழுது குற்றம் சொன்னால் அது என்னத்தைக்கண்டது?" என்றார் மாமியார

உலகத்திலே மாமியார்—நாட்டுப் பெண் தகராறுகளைப்பற்றித்தான் அதிகம் சொல்லுகிறார்கள் என்னைக் கேட்டால் ஒரு குடும்பத்தில் மாமியார்—நாட்டுப் பெண் தகராறுகளுக்கெல்லாம் மூலகாரணம் நாத்தனார்கள் என்றுதான் சொல்லுவேன். ஒரு குடும்பத்தில் ஒரு நாத்தனாருக்கு உள்ள அதிகாரமும் செல்வாக்கும் வேறு யாருக்காவது உண்டா என்று அவரவர்கள் சொந்த அனுபவத்திலிருந்து சொல்லட்டும் ஒரு நாட்டுப் பெண்ணைக் கொஞ்சமும் வாய் கூசாமல், எடுத்துப்போட்ட மாதிரி சொல்லும் துணிவு இந்த நாத்தனார்கள் தவிர, வேறு யாருக்காவது வருமா என்றுதான் சொல்லட்டுமே பார்க்கலாம்! இந்தமாதிரி திடீரென்று ஒருவரைத் தூக்கிவாரிப் போடுகிறமாதிரி வார்த்தைகள் சொல்லுவதற்கு அந்த மனது இரும்பு அல்லது பாறையினால்தான் செய்யப்பட்டிருக்கவேண்டும். சாதாரண மனிதர்களால் முடியவே முடியாது.

'சரி; வரும்பொழுதே வரவேற்பு நன்றாக இருக்கிறது! மீதி நாளும் எப்படி நல்லபடியாகக் காலத்தைப் போக்கப்போகிறோம்' என்று மனதில் ஒரே திகிலாய்ப் போய் விட்டது ஊரிலாவது மனதிலுள்ள குறைகளை அவ்வப்பொழுது சொல்லி ஆற்றிக்கொள்ளபட்டு இருக்கிறாள். இங்கே யாருடன் போய் சொல்லிக்கொள்வது! முன்பின் தெரியாத இடம் ஆகா! காட்டில் கண்ணைக் கட்டிவிட்ட மாதிரி முன்பின் தெரியாத இந்தப் புது இடத்துக்கு 'நாளைக்கே' நாம் எஜமானியாகப் போகிறோம் நாம் இட்டதுதான் சட்டமாக இருக்கப் போகிறது இங்கே! அப்பொழுது இந்த நாத்தனாரும் மாமியாரும் நம் தயவுக்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்கப் போகிறார்கள். வாழ்க்கை



யின் அதி விசித்திர மான ரகசியங்களில் ஒன்ருகிய இது, அந்த வேளைக்கு மனதில் தோன்றுகிறதா என்ன? நாம் இவர்கள் பேச்சுக்கும் ஏச்சுக்கும் அகப்பட்டுக்கொண்டு சாக வேண்டியதுதான் இந்த நரகத்தில் என்று தான் அப்பொழுது தோன்றியது எனக்கு

'அப்புறம் பேசிக்கொள்ளலாம்; காலை அலம்பிக்கொண்டு உள்ளே போய் காப்பி சாப்பிட்டுவிட்டு வா எப்பொழுது சாப்பிட்டதோ?' என்று மாமியார் நல்ல வேளையாக அந்த வார்த்தையை மேலே வளரவிடாமல் அதற்கு அதோடு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு 'போடி! அவளை உள்ளே அழைத்துக் கொண்டு போ' என்ருா.

உடனே ஒரு பெண் என்னை உள்ளே அழைத்துக்கொண்டு போனுள் காப்பி சாப்பிட்டேன். கூடத்துக்கு வந்தேன் பரபர வென்று ஏதாவது வேலை செய்து நல்ல பெயா எடுக்க வேண்டுமென்றுதான் ஆசை எனக்கு ஆனுல். என்ன வேலையைச்செய்வதென்றுதான் தெரியவில்லை அவா கள் சொல்லாமல் நாமாக எதையாவது செய்துவிட்டு, அதற்கு வேறு. எந்த மூலை முடுக்கிலிருந்தாவது சொல் லம்புகள் கிளம்பப் போகிறதே என்று பயந்துகொண்டு சிறிது நேரம் மௌனமாய் நின்று கொண்டிருந்தேன்

ஏன் கலியாணப் பெண்மாதிரி நின்றுகொண்டிருக்கிருய்? இந்தா, இந்தக் கலியாணப் பூசனிக்காயை உள்ளே கொண்டு கொடு' என்ருள் உக்கிராண அறையிலிருந்து நாத்தனுர்

உடனே அந்தக் கலியாணப் பூசனிக்காயை உள்ளே கொண்டு கொடுத்தேன்

'இது எதற்காக இங்கே? கத்தரிக்காய் பொரிச்சிக் குழம்புதான் செய்யச் சொன்னுர்கள், செய்தாகிவிட்டதே' என்ருர் சமையற்காரர்

'எனக்குத் தெரியாது நாத்தனுர்தான் கொண்டு வைக்கச் சொன்னுர். கொண்டு வந்தேன், என்று பதில் சொல்லி விட்டுப்பழையபடி பூசனிக்காயை உக்கிராண அறைக்கே எடுத்துக்கொண்டு போனேன்

'ஏன் எடுத்துக்கொண்டு வந்து விட்டாய்?' என்ருர் நாத்தனுா

சமையற்காரர் சொன்ன சமாசாரத்தைச் சொன்னேன்.

'யாா அவரைக் கத்தரிக் காயைப் பண்ணச் சொன்னது? நேற்றிலிருந்துநான்தான் கலியாணப் பூசனிக்காய் 'தான்' சேர்த்துக் குழம்பு பண்ண வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறேன். அவரிஷ்டமா என்ன? கொண்டு வா உள்ளே'

என்று சொல்லிக்கொண்டே, நாத்தனுர் சமையலறையை நோக்கிச் சென்ருர் நான் அவர் பின்னுலேயே பூசனிக்காயை எடுத்துச் சென்றேன்.

'என்னங்காணும் இது! பூசனிக்காய் 'தான்' சேர்த்துக் குழம்பு பண்ணச் சொல்லி பூசனிக்காயைக் கொடுத்தனுப்பினுல், 'கத்தரிக்காய் பொரிச்ச குழம்பு பண்ணியாய்விட்டது என்று சொல்கிறீராமே! உம்மை யார் கத்தரிக்காயைப் பண்ணச் சொன்னது? நேற்றிலிருந்து தான் பூசணிக்காய்'தான்' சேர்த்துக் குழம்பு பண்ண வேண்டுமென்று 'பாடி'க்கொண்டிருக்கிறதே எதற்காக யாரையும் கேட்காமல் நீராக இப்படி 'ஒரு காரியம் செய்து வைக்கிறீர்?' என்ருா நாத்தனுர் சமையற்காரரை நோக்கி.

'உங்கள் மாமாவா யார் அவர், கொஞ்சம் கறுப்பாய் ஒல்லியாய் இருக்கிருரே? அவர்தான் கத்தரிக்காய் பொரிச்ச குழம்பு பண்ணவேண்டுமென்று சொல்லி கத்தரிக்காயை எடுத்துக் கொடுத்துவிட்டுப் போனுர். அவா சொல்லவேதான் நாங்கள் செய்தோம் எங்களுக்கென்ன, கத்தரிக்காய் செய்தால் என்ன, பூசணிக்காய் செய்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான்' என்ருர் சமையற்காரர்.

'அதெப்படி கண்ட பேர்கள் சொல்வதையும் நீர் கேட்டுவிடுவது?' என்ருர் நாத்தனுர்.

'நாங்கள் என்னத்தைக் கண்டோம் அம்மா. யாராவது ஒருவா சமையல் பகுதியை ஏற்றுக்கொள்ளுங்கள். அவர்கள் சொல்லுகிறபடி நடக்கிருேம் அது இல்லாமல் தலைக்கொருவர் வந்து ஏதாவது சொல்லிக்கொண்டிருந்தால் நாங்கள் எதையென்று நம்பி செய்வது? இப்படித்தான் சாயங்காலம் முப்பது பேருக்குக் காப்பி என்று சொன்னுாகள். இதுவரையில் ஐம்பது பேருக்குமேல் சாப்பிட்டாகிவிட்டது இதெல்லாம் கலியாண வீடுகளில் கணக்கில் வராததுதான் இருந்தாலும் கொஞ்சத்துக் கொஞ்சம் சுமாரான ஒரு மதிப்பு இல்லாவிட்டால் உங்களுக்கும் கஷ்டம் எங்களுக்கும் கஷ்டம் பாருங்கள் அதற்காகத்தான் சொல்லுகிறேன் வேறென்றுமில்லை

இதோ பால் ஆகிவிட்டது இன்னும் யாரையாவது அழைத்துக் கொண்டு வந்து காப்பி கொடு என்ருல் எங்கிருந்து கொடுப்பது? இல்லையென்ருல் 'சமையற்காரன் சுத்த மோசம் ஸார்! ஒரு நிதானமா, மதிப்பா ஒன்றும் தெரியாமல் முதவில்' வந்தவர்களுக்கெல்லாம் அவன் 'மாட்டில்' மொண்டு மொண்டுக் கொடுத்துக்கொண்டிருந்தான். கடைசியில் வந்தவாகளுக்கெல்லாம் காப்பியே இல்லாமல் போய் விட்டது. என்று எங்கள்மீது சுலபமாகப் பழியைச் சுமத்திவிடப் போகிறீர்கள். உள்ளே இருக்கப்பட்ட ஊழல் யாருக்குத் தெரியப் போகிறது! இதுகூடப் பரவாயில்லை. சில வீடுகளில் இருக்கிருர்கள். 'அவ்வளவு பாலும்,

தாளும் கொடுத்தேன். அதற்குள்ளாகவா ஆகிவிட்டது? எங்காவது வீட்டுக்குக் கொடுத்தனுப்பிவிட்டாப்போலிருக்கிறது' என்று நிதானம் தெரியாமல் வாய் கூசாமல் சொல்லிவிடுவார்கள். எங்கள் பிழைப்பு அந்த மாதிரி இருக்கிறது. அதற்காகத்தான் சொன்னேன், என்ருா சமையற்காரர்.

'யாரது அந்த மாமாவைக் கூப்பிட்டுதான் கேட்போம். யாரையும் கலக்காமல் அவர் தான் எப்படிச் சொல்லிவிடுகிறது?' என்று மாமாவைக் கூப்பிட்டுக் கேட்டாா நாத்தனுர்.

'ஆமாம், நான்தான் சொன்னேன். என்ன சமையல் செய்வதென்று சமையற்காரர் கேட்டார் யாரையாவது கேட்போமென்ருல் இங்கே உங்கள் ஒருவரையும் காணேும். சரி கத்தரிக்காய் பொரிச்ச குழம்பு செய்யுங்கள் என்று சொல்லி கத்தரிக்காயை எடுத்துக்கொடுத்தேன். என்ருர் மாமா.

'இங்கே ஒருவர் கூட இல்லாமல் எல்லாரும் எங்கே ஒழிந்துவிட்டோமாம்? அப்படித்தான் வெளியே போயிருந்தாலும் திரும்பி வரவேமாட்டோமா?' என்ருர் நாத்தனுர்.

'அதுவரையில் அடுப்பு காத்துக்கொண்டிருக்கவேண்டுமாக்கும்? இல்லை. தெரியாமல் தான் கேட்கிறேன்' என்று சிரித்துக்கொண்டே சொன்னுர் மாமா.

198556

'இதெல்லாம் கூடப் பரவாயில்லை. தொலைந்து போகிறது நாளைக்கு சாப்பாட்டு விஷயத்தில் பக்கத்துத் தெருவில் நடந்த மாதிரி நடந்துவிடப்போகிறது. கொஞ்சம் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளுங்கள்' என்றுர் சமையற்காரர்.

'அதென்ன அது பக்கத்துத் தெரு ஸமாசாரம்?' என்றுர் மாமா.

'அங்கேயும் இதே மாதிரி ஒரு கலியாணம் தான் நாங்கள் தான் சமையல் செய்யப்போயிருந்தோம். நூற்று ஐம்பது பேர் சாப்பிட வருவார்கள் என்று சொல்லி அதற்குண்டான சாமான்கள் எவ்வளவு வேண்டும் என்று கேட்டார்கள் எதற்கும் இருபது முப்பது பேருக்கு அதிகமாகவே செய்துவைப்போம் என்று சொல்லி நூற்று எண்பது பேருக்கு ஆகும்படியான சாமான்களை வாங்கிச் சமையல் செய்து வைத்தோம். சாப்பிடுகிற சமயத்தில் பார்த்தால் நூற்று ஐம்பது பேருக்கு என்று சொன்னவர் இரு நூற்று ஐம்பது பேரைக்கொண்டு வந்து உட்கார வைத்துவிட்டார். இது தவிர உட்கார இடமில்லாமல் இரண்டாம் பந்திக்கு முப்பது நாற்பதுபேர் காத்துக்கொண்டிருக்கிறுர்கள் நாங்கள் என்ன செய்வது? ரசத்துக்கே பாதி பேருக்கு தான் சாதம் இருந்தது காய்கறிகளை எப்படியோ சரிக்கட்டிவிட்டோம். சாதத்துக்கு என்ன செய்வது? வந்த கும்பலைப் பாரத்தவுடனே நானே முன் ஜாக்கிரதையாக அரிசி களைந்துவிட்டேன். இருந்தாலும் அவவளவு சீக்கிரத்தில் ஆகிவிடுகிறதா? சாதம், சாதம் என்று கத்துகிறுர்கள் வீட்டுக்காரரா, ஆச்சா, ஆச்சா என்று கேட்டுக்கொண்டிருக்கிறுர் 'கூச்சலை' அடக்குவதற்காக இருந்த ஜாங்கிரியையெல்லாம் பரிமாறிஞேம் காய்கறிகளையெல்லாம் கொண்டு போட்டோம். ஊஹூம். அதையெல்லாம் இரண்டே நிமிஷத்தில் சாப்பிட்டுவிட்டு, மறுபடியும் சாதம், சாதம் என்று கூப்பாடு போட்டாரகள் அப்புறம் அவர்களுக்கே எப்படியோ விஷயம் தெரிந்துவிட்டது ஒரே பரிபவமாய்ப் போய்விட்டது வீட்டுக்காரருக்கா முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கிறது 'வந்திருப்பவர்களைப் பாரத்துக்கொண்டு அதற்குத் தகுந்த மாதிரி பரிமாறககூடாதோ?' என்றுர் வீட்டுக்காரர். 'சரிதான் மெதுவாகப் பழியை எங்கள் மீது சாட்டப்பார்க்கிறீர்களா? நூற்று ஐம்பதுபேர் என்று சொல்லிவிட்டு முன்னூறு பேரை அழைத்துக்கொண்டு வந்தால் நன்றுகத்தானிருக்கும்' என்றேன் அப்புறம் அவா ஒன்றும் பதிலே சொல்லவில்லை. இந்த மாதிரியெல்லாம் அசட்டுக்காரியம் செய்துவிட்டு எங்களைக் கோபித்துக்கொண்டால் நாங்கள் என்ன செய்வது? ஆகையால் அந்த மாதிரியெல்லாம் இங்கே நேராமல் முன்னதாகச் சொல்லி விடுங்கள். அதற்குத் தகுந்தமாதிரி நடந்துகொள்ளுகிறேும், என்றுர் சமையற்காரர்.

'அந்த மாதிரியான பயம் வேண்டாம் இங்கே. அதற்கெல்லாம் நான் தகுந்த ஏற்பாடு செய்கிறேன். என்று சொல்லிவிட்டு 'சரி. அந்த பூசணிக்காயைக் கொண்டு உக்கிராண அறையிலேயே வை. நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்' என்றுர் நாத்தனுர்.

ஒரு பழமொழி சொல்வதுண்டு தூதூ: இந்த அழுகற் பூசணிக்காய் எனக்கு வேண்டாம், என்று நல்ல பூசணிக்காயை வைத்துக்கொண்டே உக்கிராண அறைக்கும் சமையல் அறைக்குமாகப் போய் வந்துகொண்டிருப்பதைக் கண்டு எனக்கே சிரிப்பு வந்துவிட்டது பக் என்று சிரித்துவிடப் போனேன். நல்ல வேளையாக, வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டேன். சிரித்திருந்தேனேயாஞல் நாத்தனுருக்கு சமையற்காரர் மீதுள்ள கோபமெல்லாம் சேர்ந்து என்தலையில் வந்து வடிந்திருக்கும்.

உடனே நாத்தனுர் ஒவ்வொருவராகக் கூப்பிட்டு அவரவர்களிடம் ஒவ்வொரு வேலையை ஒப்படைத்தார். என்னைப் பார்த்து, 'நீ ஒன்றும் செய்யவேண்டாம். எங்கும்போய்விடாமல் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்டுக்கொண்டிருந்தால் போதும்,' என்றுா.

என்ன கருணையடியம்மா! இதைவிட ஜெயில் வேறென்ன வேண்டும் ஒருத்திக்கு! மீதிபேருக்கெல்லாம் ஊர் அழைப்பது, சம்பந்தி வீட்டுக்குப் போய்வருவது, வந்தவர்களை விசாரித்துத் தாம்பூலம் கொடுத்தனுப்புவது போன்ற வேலைகள் எனக்குமாத்திரம் கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று கேட்கும் வேலை அதுவும் என்ன வேலையாக இருக்கப்போகிறது உக்கிராண அறையிலிருந்து நல்ல பூசணிக்காயையும் கலியாண பூசணிக்காயையும் சமையல் அறைக்குக் கொண்டு வைக்க வேண்டியது.



சமையலறையில் சமையற்காரர் கேட்கும் சாமான்களை உக்கிராண அறைக்கு வந்து வாங்கிக்கொண்டு போய் அவரிடம் கொடுக்க வேண்டியது இது தவிர வருகிற பெண்டுகளை அழைத்துக்கொண்டுபோய் அவர்களுக்கு காப்பி இட்லி கொடுக்கச் செய்ய வேண்டியது. இந்த வேலைதான் இருக்கப்போகிறது நமக்கு.

'உரலில் தலையைக் கொடுத்துவிட்டு உலக்கைக்குப் பயந்தால் முடியுமா?, என்று சொல்லுவார்களே. அந்த மாதிரி அது. சரியோ தப்போ அவர்கள் இட்ட வேலையைச் செய்வது தவிர எதிர்த்துப் பேச நமக்கு என்ன அதிகாரம் இருக்கிறது! ஆகவே மறுவார்த்தை பேசாமல் 'ஆகா! அப்படியே செய்கிறேன்' என்றேன்.

உடனே நாத்தனுர் என் கணவரைக் கூப்பிட்டு, 'இதோபார். இப்பொழுதே சொல்லிவிட்டேன். அப்புறம் அவர்களை விசாரிக்கவில்லை. இவர்களை விசாரிக்கவில்லை என்று உன் கலியாணத்தின்போது சொன்ன மாதிரி சொல்லாதே உன் சிநேகிதர்கள், ஊர்மனுஷ்யாள் ஆகியவர்களை விசாரித்துக்கொள்வது உன் பொறுப்பு சம்பந்தி வீட்டுக்காரர்களை விசாரித்துக் கொள்ளும் பொறுப்பை கோபாலனிடம் (மாமாவின் பிள்ளை) ஒப்படைத்துவிட்டேன் என்னை விசாரிக்கவே இல்லை அவனை அங்கே உட்கார வைத்தார்கள் இவனை இங்கே உட்கார வைத்தாகள் இவனுக்குத் தாம்பூலம் கொடுக்கவில்லை அவருக்குச் சந்தனம் கொடுக்கவில்லை' என்ற புகார்கள் பின்னிட்டு வரக்கூடாது. இவ்வளவு செலவு பண்ணிக் கலியாணம் செய்வது தெரியாது. பின்னிட்டு வாரத்தைதான் நிற்கும்.' என்றுர்.

மாமாவின் பெண்ணைக் கூப்பிட்டு. 'கலியாணப் பெண்ணைக் கவனித்துக் கொள்வது உன்னுடைய வேலை, நலுங்கோ. ஊஞ்சலோ, ஔபாஸனத்துக்குப் பிள்ளை'யை அழைத்து வருவதற்குப் பெண்ணை அழைத்துக் கொண்டு போவதோ எல்லாம் உன்னுடைய வேலைதான்.' என்றுர்.

இந்த மாதிரி ஒவ்வொருவராகக் கூப்பிட்டு, அவரவர்களிடம் ஒவ்வொரு-வேலையை ஒப்படைத்தார்.

அப்பொழுதுதான் பார்த்தேன் ஒரு குடும்பத்தில் ஒரு நாத்தனுருக்கு உள்ள செல்வாக்கையும் அந்தஸ்தையும்.

என் மாமனுரோ, மாமியாரோ, கணவரோ, எதுவாவது வேண்டுமென்றுலோ யோசனை கேட்க வேண்டுமென்றுலோ கனகாவைத் (பெரிய நாத்தனுரின் பெயர்) தான் கூப்பிடுவாரகள். அவரைக் கலக்காமல் ஒன்றும் செய்யமாட்டார்கள்,

'நாளைக்கு சாப்பிடுவதற்கு ஊர் முழுவதும் அழைக்க வேண்டுமா? அல்லது முக்கியமாய்த் தெரிந்தவாகளோடு நிறுத்திக் கொண்டால் போதுமா? என்று மாமனுர் மாமியாரை வந்து கேட்பார்.

உடனே மாமியார், கனகாவைக் கூப்பிட்டு 'உன் அப்பா என்னமோ கேட்கிறுர் பார்' என்பார்.

அதற்கு நாத்தனுர், 'இதற்கு மேல் நாம் எந்தப் பெண்ணுக்குக் கலியாணம் செய்துகொண்டிருக்கப் போகிறேும் ரகுவுக்குப் பெண் பிறந்து அதற்குக் கலியாணம் செய்கிறபோது பார்த்துக் கொள்ளலாம் அதற்குள் ரகு நிறைய சம்பாதித்து நல்ல காலம்தான் வரட்டுமே நீங்கள் ஊர் முழுவதுமே அழைத்து விடுங்கள் அப்பா,' என்பார்.

அவருக்கென்ன வந்தது கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கிறமாதிரி பிறந்தகத்துப் பணம்தானே?

'சம்பந்திகளுக்குப் பிரதி சம்பாவனை இருபத்தைந்து ரூபாய் செய்தால் போதுமா?' அல்லது முப்பத்தைந்து ரூபாய் செய்ய வேண்டுமா?' என்பார்.

'முப்பத்தைந்து ரூபாயே செய்து விடுங்கள் ஒரு பத்து ரூபாயில் கௌரவத்தைக் குறைத்துக் கொள்வானேன்?' என்பார்.

இந்தமாதிரி ஒவ்வொரு விஷயமும் நாத்தனுரைக் கலக்காமல் நடைபெருது.

ஒரு குடும்பத்தில் ஒருத்திக்கு இவ்வளவு செல்வாக்கு இருப்பதும் அதை அவள் பொறுப்புடன் நிர்வகிப்பதும் பார்ப்பதற்குச் சந்தோஷமாய்த்தான் இருக்கிறது இருந்தாலும் அந்த செல்வாக்கை நாட்டுப் பெண்கள் விஷயத்தில் துர் விநியோகம் செய்யும்போதுதான் மனத்துக்குக் கவலையும் வருத்தமுமாக இருக்கிறது

இந்த மாதிரியான ஏற்பாடெல்லாம் ஒருவாறுகசெய்து முடிக்கப்பட்டது

'உம். ஜான வாஸத்துக்கு நேரமாகி விட்டது. சீக்கிரம் புறப்படுங்கள்' என்று ஒரு கூச்சல் போட்டார் மாமனுர்.

உடனே எல்லோரும் பரக்கப் பரக்க டிரெஸ் செய்து கொள்வதில் ஈடுபட்டார்கள் நானும் தோட்டத்தில் ஸ்நான அறையினுள் போய் புதுப் புடவை உடுத்துக் கொண்டிருந்தேன்

அப்பொழுது அந்த அறையின் கதவுமெதுவாகத் திறக்கப்பட்டது ஓசைப்படாமல் மெதுவாக யாரோ உள்ளே வந்தது தெரிந்தது விளக்கு இல்லை ஒரே இருட்டு.

'யாரங்கே?' என்றேன்.

'உஸ்!' என்று என் வாயில் யாரோ கையை வைத்து என்னைப் பேசவொட்டாமல் அழுத்திஞர்கள்.

(தொடரும்)

1

அன்னையே நான் உந்தனுக்கு ஆசைதீர
  ஆவின்பால் அருங்கனிகள் அமுதச்சாறு
பொன்னரிசிப் பொங்கலுடன் புதிதாய் வைத்துன்
  புகழினையே குரவையிட்டுப் போற்றிசெய்ய
எண்ணிவந்தேன் எந்தாயே என்செய்வேன் நான்
  ஏழை என்றறிலை இங்கு இடராய் நின்று
மண்ணிடையே வாழ்வதையே பாரமாக்கி
  வருத்தத்தைப் பொங்கலிட வளர்த்ததம்மா

2

பானையிலே அரிசியில்லை பல்லிதூங்கும்
  பாண்டமதாய் போயிற்று பண்டம் இல்லை
வானைநம்பி வாழும்வயல் வாடிநின்று
  வரட்டுப்புல் விளைத்தது நெல்கதிரொன்றில்லை
காலிடையே கரும்பில்லை வாழையெல்லாம்
  கருகிநின்று மலடுகள்போல் காட்சிதந்து
ஊனமுற்று உணர்வற்று உலர்ந்ததம்மா
  உலைஊதி என்செய்வேன் இன்றுனக்கே

3

பிழைப்புக்குப் போராடும் பேதைஎம்மை
  பெற்றுவிட்ட கடன்உணர்வாய் தாயே எங்கள்
உழைப்புக்கு அனல்மூட்டி உறுதியெனும்
  உலைவைத்து உயிரமுதப் பாலைஊற்றி
தழைக்கும் பேரன்புத்தேன் கரும்புவெல்லச்
  சாறிட்டு அருள்குழைத்துப் பொங்கலாக்கி
அழைத்துந்தன் அணிகரத்தால் அணைத்துஊட்டி
  அகமதிலே இன்பநிறை வளிப்பாய் தாயே

தந்தி விலாசம்: "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்ச : மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

மதராஸ் ஸோல் ஏஜெண்டுகள் :—
சுராஜ் ஏஜன்ஸீஸ்,
157, லாயிட்ஸ் ரோடு,
மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்க்கண்டுள்ள விலைக்குகிடைக்கும்:—

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை.

1	அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு	ரு	8 0 0
2	திருப்பாவை 30 பாட்டுக்கு	ரு	7 8 0
3	பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு	ரு	6 0 0
4	ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு	ரு	3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாஸய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை.

1.	ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு	ரு	3 12 0
2	ஸ்வாதித் திருநாள் 80-க்கு	ரு	20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபமாக இல்லை தனித்தனி தாளாக உள்ளன ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும் தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்,
சுதேசமித்திரன் புத்தகசாலை,
மவுண்ட் ரோடு, சென்னை.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்துக்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும் உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்களுபயோகிக்கும்கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில்
(ரிஜிஸ்டர்ட்.)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப்போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும். ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர் இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள். எல்லா ஸ்டோர்களிலும்விற்கப்படுவது. எப்பொழுதும் உபயோகியுங்கள்

ஆடோ டில்பஹார் (ரிஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனை நீடித்த நறுமணம். தபால்சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் பெறுங்கள்.

Sole Agent :—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jamma Musjid, P. O. Box 2085, Bombay 2.

[சென்றவாரத் தொடர்ச்சி]

ரதிகாந்தன். உள்ளத்தில் ஆனந்தமோ உற்சாகமோ கிஞ்சித்துமில்லை. பொன்னியின் புது வெள்ளத்தின் மீது கம்பீரத்துடன் அசைந்து சென்றது அப்படகு. அதன் ஒரு மூலையில் கையைக் கட்டிக்கொண்டு அமர்ந்திருந்த ரதிகாந்தன் தீவிரமாக ஏதோ சிந்தித்துக்கொண்டிருந்தான். அதுவரை கொஞ்சிக் கொஞ்சி உரையாடிய மோஹினியும் படகிலேறியது முதல் மௌனியாகி ஓர் புறம் உட்கார்ந்திருந்தாள். படகைத் தள்ளிய படகோட்டியும் இவர்களது மௌனத்திற் பங்கெடுத்துக்கொண்டு வாய் திறவாமல் தன் வேலையைக் கவனித்தான். அவனது கண்டத்தினின்றும் ஒரு பாட்டுக்கூடக் கிளம்பவில்லை.

இங்ஙனம் மௌனத்திலேயே எத்தனைநேரங் கழிந்திருந்ததோ, ரதிகாந்தன் அறியான். வெளித்தோற்றத்துக்காகக்கூடச் சந்தோஷத்தை வருவித்துக்கொள்ள அவனால் முடியவில்லை. தன்னருகில் காதல் மடந்தையிடத்தும் அவன் மனம் லயிக்கவில்லை. "ரதிகாந்தா! உன் காதல்வெறி நாளைக்குத் தீர்ந்துவிடும். ஆனால் கடமையைத் துறந்த உன்னை உன் மனச்சாக்ஷி பொசுக்காமல்விடாது" என்ற அவன் தந்தையின் வார்த்தைகள் இன்னும் ரதிகாந்தனின் செவிகளில் ஒலித்துக்கொண்டிருந்தன. அவற்றில்தான் எவ்வளவு உண்மை!

கீழ்வானில் விடிவெள்ளி தொங்கிக்கொண்டிருந்தது. சந்திரனின் ஒளி மங்கத் தொடங்கியது 'சலசல, பளபள' வென்ற ஓசை அவனது சிந்தனையைக் கலைத்தது. தூங்கிவிழிப்பவன் போலெழுந்து சுற்று முற்றும் நோக்கினான் அவன்

அவனது சிறு படகைப் பின்தொடர்ந்து பல பெரிய படகுகள் வந்துகொண்டிருந்தன. அவற்றின் துடுப்புகள் செய்த ஓசைதான் ரதிகாந்தன் செவியில் விழுந்தது.

பிரம்மாண்டமான படகுகள் அவை. ஒவ்வொன்றிலும் நிறைந்திருந்த வீரர்களின் ஆயுதங்கள் அம்மங்கிய நிலவொளியில் மின்னின. மற்றப்படி எவ்விதச் சந்தடியும் செய்யாது திருடர்களையொப்ப அவர்கள் வந்தனர். அவர்களில் ஒருவரேனும் ரதிகாந்தனின் மீது வைத்த பார்வையை எடுக்கவில்லை. வலிய வந்து தன்னிடம் அகப்பட்டுக்கொண்ட ஓரெலியை பூனை நோக்குவதுபோலிருந்தது அவரது பார்வை. இயல்பாகவே அவன்மனதில் பெரும் சந்தேகங்களும் பிரச்னைகளும் எழத் தொடங்கின. அதுவரை கவனமின்றியிருந்து விட்டதற்காகத் தன்னைத், தானே கடிந்துகொண்டான் அவன்

ஏதோ ஓராபத்து சூழ்கிறதென்று அவ்வீரனின் உள்ளுணர்வு கூறியது அருகில் கண்கள் அகலத்திறந்திருந்தும் உறங்குபவன் போலிருந்த மோஹினியின் தோள்களைப் பற்றிக் குலுக்கினான். அதற்குள் படகும் காவிரியின் தென்கரையைச் சமீபித்திருந்தது.

"மோஹினி! இதென்ன? நாம் பகைவர்களால் பின்தொடரப்படுகிறோம் போலிருக்கிறதே" என்று கேட்டான் ரதிகாந்தன். ஆனால் அவன் எதிர்பார்த்தபடி, அவளது முகபாவத்திலோ, நடத்தையிலோ எவ்விதமான பயமும் திகைப்பும் காணப்படவில்லை. உணர்ச்சியற்ற குரலில் அவள் பதிலளித்தாள். "ஆம் அவர்கள் உங்கள் பகைவர்கள்தாம்."

"என்ன? மோஹினி. உங்கள் பகைவர்களென்றா சொன்னாய்? கரிகால மன்னனின் விஸ்வாசமிகுந்த பிரஜையான உனக்குமட்டும் அவர்கள் எதிரிகளல்லரா?" என்றான் ரதிகாந்தன்.

"இல்லை ஸ்வாமி. இனி எனது உண்மை சொரூபத்தைக் காண்பிக்கலாமென எண்ணுகிறேன்."

'மோஹினி! நீ என்ன சொல்லுகிறாய்? எனக்கொன்றும் புரியவில்லையே'.

'ரதிகாந்தரே! நான் அதிகம் சொல்லத்தேவையில்லை. தாங்கள் ஓர் யுத்தக்கைதி. தங்களைக் காதல் காட்டி வஞ்சித்துவந்து பகைவரிடம் ஒப்படைப்பது நான். சேரநாட்டுப் பெண்யான். தங்களிடம் சொல்லிக்கொண்டதுபோல் சோழனின் பிரஜையல்ல சேரபாண்டியரின் சேனாபதி ஆதித்யரின் சூழ்ச்சியில் நான் பிரதானகருவி. எவ்வாறாயினும் தங்களை மயக்கிப் பிடித்துக்கொடுத்துவிட வேண்டுமென்பது அவர் ஆணை. எனவே ஒன்றுமறியாப் பெண்போல் நடித்துத் தங்களிடம் காதல் நாடகமாடி என் கருத்தில் வெற்றியுங் கண்டேன். தந்தையையும் மகனையும் பிரித்த பாபமும், கடமையிலிருந்து ஓர் வீரனைப் பிறழச்செய்த பொல்லாப்பும் என்னையேசேரும். ஆனால் என் அரசனின்பொருட்டு என்னாலானதை நான் செய்தேன், கடமையையாற்றினேன். அம்மட்டில் எனக்குத் திருப்தியுண்டு......'.

அவளது ஒவ்வொரு வார்த்தையும் ஒரு இடி விழுவதுபோல் விழுந்தது ரதிகாந்தனின் இதயத்தில் அவன் தன் கண்களையும் காதுகளையும் நம்பவில்லை. என்றாலும் மோஹினி சொல்வது உண்மை, பரிகாசமல்ல என்பதை அவளது முகத் தோற்றமே புலப்படுத்தியது. கடித்த பற்களுக்கிடையே, "பாதகி .....வஞ்சகி' என்று முணுமுணுத்தான் தன் உண்மை நிலையுணர்ந்தும் ஒழுங்காக நாலு வார்த்தைகள் பேசக்கூட அவனுக்குச் சக்தியில்லை.

மோஹினி! பெண்ணா அவள்? பெண்ணுருவெடுத்த பைசாசம் கண்ணை மயக்கும் தன் பூச்சுருக்கொண்டு அவன் சிந்தையைக்கலைத்து முடிவில் அவனது நன்மதிப்பையும்,

சுதந்திரத்தையும் நிலைகுலையச்செய்தவள். ரதிகாந்தன் அன்றிரவுசெய்த காதல் வர்ணனைக்கெல்லாம் பதிலாக அவள் நகைத்த நகைப்பின் உட்பொருள் அவனுக்குத் தெளிவாய்த் தெரியத் தொடங்கிற்று. தன் மதியீனத்தைநோவதா. அவளைநோவதா அல்லது தன் விதியை நோவதா என்று அறியாமல் சற்றுநேரம் திகைத்து நின்றான்.

படகுகரை தட்டியிருந்தது. படகோட்டி கரையில் குதித்து ஒரு கயிறால் கரையில்நின்ற ஓர் மரத்துடன் சேர்த்துக் கட்டினான். பின்னால் வந்துகொண்டிருந்த அப்படகுகளிலும் சற்றுக் கலகலப்பேற்பட்டது அதுவரை நிர்மானுஷ்யமாய்த் தோற்றமளித்த காவிரிக்கரையில், ஒரு க்ஷணநேரத்திற்குள் பலவீரர்கள்வந்து நிரம்பிவிட்டனர். புனலில் அவனைத் தொடர்ந்துவந்த விதி நிலத்திலும் அவனுக்காகக் காத்திருந்ததுபோலும்!

'அவனைப் பிடித்துக் கட்டுங்கள்' என்று எங்கிருந்தோ கர்ணகடூரமான குரலில் ஓர் ஆக்ஞை பிறந்தது. திகைத்து நின்ற ரதிகாந்தன் சுய உணர்வு பெற்றுத் தன் வாளையுருவு முன்பே அவனது படகில் பாய்ந்து சுற்றி வளைத்துக்கொண்டனர் அவ்வீரர்கள். அவன் கைகளில் விலங்குகள் பூட்டப்பெற்றன ரதிகாந்தனும் சிறந்த வீரன்தான். ஆனால் தனியாள். கணக்கற்ற வீரரை எதிர்த்து அவனொருவனால் என்ன செய்யமுடியும்.

கொழுத்துப் பருத்த ஓர் அதிகாரி கரையில் நின்றிருந்தான். தன்னைப் பிடித்துக் கட்டுமாறு உத்தரவிட்டவன் அவன்தானென்று ரதிகாந்தன் அறிந்துகொண்டான். அதுசேனாபதி ஆதித்யன் என்றும் அவனால் ஊகிக்க முடிந்தது.

இதழ்களில் வெற்றிப் புன்னகை தவழ நின்றாள் மோஹினி. அவர்களை ஓட்டிவந்த படகோட்டியின் முகத்திலும் பெருமையும் ஆனந்தமும் தோன்றின.

"ஓஹோ! இவன்தான் தளபதி ஜயமாலின்புத்திரனோ?...மோஹினி சரியான வேலை செய்தாய். ஹாஹாஹா......!" என்று சிரித்தான் ஆதித்யன். அவனது நகைப்பு வரவரப் பெருத்தது இடுப்பில் இரண்டு கைகளையும் ஊன்றியவண்ணம் 'கடகட' வென அவன் சிரித்த ஓசை நதிதீரமெங்கும் பரவி, மரங்களில் நிம்மதியாயுறங்கிய புள்ளினங்களையும் கலைத்தது.

வெறுப்பினாலும், அவமானத்தினாலும் மனங்குன்றி உடல்குன்றி நின்றான் ரதிகாந்தன். பகைவரால் உயிரோடு கைதியாகப் பிடிபடுவதைவிட ஓர் சுத்த வீரனுக்கு இழிவு தருவது வேறென்னவிருக்கிறது? அதிலும் ஓர் பெண்ணால் ஏமாற்றப்பட்டு........

ரதிகாந்தனது குன்றிய உடலில் உதிரம் கொதித்தது. அவனைப்பற்றி எங்கோ நடத்திச் சென்றுகொண்டிருந்தனர் அப்பகையாட்கள்.

• • •

பொழுது புலர்ந்தது. ஜயமாலின் பாசறையில் வீரர்கள் நித்திரைவிட்டெழுந்து சுறுசுறுப்புடன் தங்களலுவல்களைக் கவனிக்கத் துவங்கினர். காவிரியிலிறங்கி ஸ்நானம் செய்துகொண்டிருந்த பலர் தம்முள் ஏதோ குசுகுசுவென்று பேசிக்கொண்டிருந்ததிலிருந்து, சென்ற இரவு தளபதியின் கூடாரத்தில் நிகழ்ந்த விஷயங்கள் அவர்களிடையே பரவிவிட்டனவென்று தெரிந்தது.

வெள்ளைக்கொடி தாங்கிய படகொன்று எதிர்க்கரையினின்றும் அவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தது. எதிரியின் தூதன் வருகிறானென்று கண்ட வீரர்கள், அவன் கொண்டுவரும் செய்தி யாதாயிருக்குமென அறியும் ஆவல் அப்போதே அவர்கள் மனதில் குடிகொண்டது அது என்னவாயிருப்பினும் எதிரியின் போர்நிறுத்தக் கோரிக்கையாய் மட்டுமிருக்கக்கூடாதென்று பலர் வாய்விட்டுக் காவேரியன்னையை வேண்டிக்கொண்டனர். தாம் ஆவலுடன் எதிர்பார்த்த யுத்தம் வராமலே நின்றுவிட்டால் என்ன செய்வதென்ற பயம் அவர்களுக்கு படகும் கரையை நெருங்கி வந்தது தூய வெண்ணுடை தரித்த தூதனொருவன் அதனின்றும் இறங்கித் தளபதியிடம் அழைத்துச் செல்லப்பட விரும்பினான்.

ஜயமால் தன் கூடாரத்தில் தன்னந்தனியே அமர்ந்திருந்தான் மகனைப் பிரிந்ததுமுதல் அவன் மனதில் நிம்மதியற்றுவிட்டது இரவெல்லாம் உறங்காதுவிழித்திருந்த அவன் கண்கள் ரத்தம்போற் சிவந்திருந்தன பிரிவின் துயரத்தை அவன் இப்போதுதான் முதன்முறையாக அனுபவித்தான் அத்துடன் மகனின் கேவலமான நடத்தைபற்றிய ஏக்கம்வேறு. சற்றுதூரத்தில் அமைந்திருந்த ரதிகாந்தனின் கூடாரம் காலியாயிருந்தது தகப்பனின் இதயமும் 'வெறிச்' சென்றாகிவிட்டது உலகவாழ்வில் தனக்கிருந்த பற்றுக்கு ஆதாரமாயிருந்த ஒரே மகன் போனபின் அவனுக்கு வேறென்ன வேண்டியிருக்கிறது? இப்பெருஞ் சைன்யத்திற்குத் தலைமைப் பதவியேன், யுத்தங்கள் ஏன், வாழ்க்கையே எதற்காக?

ஜயமாலின் சிந்தனையே அவனை விழுங்கிக்கொண்டிருந்தது. வாயிற்காப்போன்வந்து 'பகைவனின் தூதன் வந்து தங்களைக்காண வேண்டுகிறான்' என்று அறிவித்த பின்தான், இடம் காலம் இவற்றின் தன்மையை உணர்ந்துகொண்டவன் போல் திடீரென எழுந்தான். தூதன் கொணர்ந்த ஓலையைக் கையில் வாங்கும்போதே, ஏதோ கெட்ட செய்தியை எதிர்ப்பார்ப்பவன்போல் ஜயமாலின் நெஞ்சு 'படக் படக்' கென்றடித்துக்கொண்டது எண்ணிறந்த யுத்தங்களை முன்னின்று நடத்திய அவ்வீரபுருஷன், பகைவனது ஓலை கண்டு முன்னெப்போதும் அவ்வித மனக்கலக்கமெய்தியதில்லை அதைப் பிரித்துப் படிக்கும்போதும் அவன் கரங்கள் நடுங்கின.

'மாக்ஷிமைதங்கிய கரிகாலமன்னரின் சேனாபதி ஜயமாலுக்கு,

தங்கள் குமாரன் ரதிகாந்தன் எங்களிடம் யுத்தக் கைதியாக உள்ளான். போர் என்ற சதுரங்கத்தில் அவனது உயிர் பணயமாக வைக்கப்பட்டிருக்கின்றது. மகனது உயிர்மேல் தங்களுக்கு ஆசையிருக்குமாகில், தங்கள் படையுடன் வந்தவழியே திரும்பிச் செல்லுங்கள். அன்றி, போரில் முனைந்துநிற்க விரும்புவீர்களாயின், தங்களது யுத்தப் படகுகளின் துடுப்புகள் காவிரியின் நீரை ஸ்பரிசிக்கத் தொடங்கும் அந்நிமிஷத்திலேயே இங்கு ரதிகாந்தன் சித்ரவதை செய்யப்படுவது திண்ணம்.

தங்கள் வாழ்வின் ஆனந்தம் தாங்கள் செய்யும் முடிவைப் பொறுத்ததே

ராணுவ தந்திரங்களில் தனிப்பட்ட மனிதர்களின் உணர்ச்சிகளைப் பொருட்படுத்தமுடியாமைக்கு வருந்துகிறோம்—

இங்ஙனம்,
சேரபாண்டிய ராஜர்களின் தளபதி,
ஆதித்யன்.

ஓலையை படித்த ஜயமாலினுள்ளம் எரிமலைபோற்குமுறியது. 'கோழைப் பதர்கள்—வஞ்சகர்கள்— இவ் வீனச் செயலை ராணுவதந்திரமென்றா அழைக்கிறார்கள்?" என்று உறுமினான் அவன்

நிருபத்தைக்கொடுத்த தூதன் முன்பேயே அங்கிருந்து அகன்றுவிட்டான். அவனுக்குப் பதிலொன்றும் தேவையாயில்லை. தெரிவிக்க வேண்டிய விஷயம்மட்டும் தெரிவிக்கப்பட்டாயிற்று இனி அவனுக்கு அங்கே என்ன வேலை?

ஜயமாலின் மனம் குழும்பிக் கிடந்தது நிருபத்தில் கண்ட விஷயம் வெறும் மிரட்டலல்ல என்பது தெரிந்தது அவன் நிலைமை இருதலைக் கொள்ளியெறும்பு போலாயிற்று ஓர்புறம் கடமை மறுபுறம் மகனின் பாசம்! இவ்விரு மாபெரும் சக்தி

களுக்கிடையே அகப்பட்டு, அலைகளால் மோதப்படும் மரக்கலம் போல் அவனுள்ளம் தத்தளித்தது எது நேரினும் கடமையில் தவருதவன்தான் என்ற தன்னம்பிக்கையுப் தேய்ந்துகொண்டே வந்தது மனிதனின் சக்திக்குச் சோதனை ஓர் அளவுகோல் என்பது எவ்வளவு உண்மை!

நெடுநேரம் சென்றது ஏதோ தீர்மானத்துக்கு வந்தவன் போல் ஜயமால் மேஜையடியில் உட்கார்ந்து ஓர் ஓலையில் ஏதேதோ கிறுக்கினான். மறுநிமிஷம் அவ்வோலையுடன் உறையூரை நோக்கி ஓர் குதிரைவீரன் பறந்துகொண்டிருந்தான். மன்னர்பிரானின் சமூகம் சேரவேண்டிய ஓலையது.

* * *

நேற்றிரவு இந்நேரம் சோகத்தின் சாயை படிந்து கிடந்த அதே கூடாரங்களில் இன்று ஒரே கூத்தும் கும்மாளமுமாயிருந்தன. ஆதித்யன் அனுப்பிய ஓலைக்கும் பின் சோழர் படை எங்கே தங்களைத் தாக்க வரப்போகிறது என்றெண்ணிவிட்டனர் அவன் வீரர்கள். இங்கே அவர்கள் செய்த ஆரவாரம் மறுகரையில் அவர்களது எதிரிகளுக்கும் கேட்டிருக்கவேண்டும் அப்பேரிரைச்சலின் நடுவில் துயரமும் பச்சாத்தாபமுமே உருவாய் ஒரு கூடாரச் சிறையிலிருந்தான் ரதிகாந்தன். கூடாரத்தின் வாயிலில் உருவிய கத்தியுடன் காவலாளிகள் நின்றனர். வெளியே தக்க பாதுகாப்பிருந்தமையால் அவன் கைகளில் விலங்கு பூட்டப்பட்டிருக்கவில்லை அவனுக்களிக்கப்பட்ட உணவையோ நீரையோ அவன் கையாலும் தொடவில்லை. ஒரு பழைய மரப்பெட்டியே அவனுக்கு ஆசனமாயமைந்திருந்தது

கட்டியக்காரர்களின் அலங்காரமான அடுக்குச்சொல் விருதுகளைத் தொடர்ந்து. அசைந்து நடந்த ஆதித்யன் வந்து ரதிகாந்தனின் கூடாரத்துட் புகுந்தான். அவ்விளைஞனின் சிறைவாசத்தை ஒன்றல்ல, பலவிதங்களில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்னும் நோக்கந்தான் ஆதித்யனை இங்கே இழுத்துவந்தது. வெகு ஸ்தூலமான தேகமும் மந்தமான போக்குமுடையவனுதலால், தனக்கெனக் கொணர்ந்து போடப்பட்ட மிருதுவான ஆஸனத்தில் 'பொத்'தென அமர்ந்தானவன். அவனது கண்கள் மட்டும் ரதிகாந்தனின் உச்சி முதல் உள்ளங்கால் வரை கணித்தன.

அவ்வஞ்சகனைக் கண்டதுமே ரதிகாந்தனின் கரங்கள் அவனை அப்படியே கிழித்துப்போட்டுவிடலாமா வென்று துடித்தன. ஆயினும் தான் நிராயுதபாணியாயிருப்பதையும் பகைவர்களால் சூழப்பட்டிருப்பதையும் எண்ணித் தன்னை அடக்கிக்கொண்டான் ஆதித்யன் அங்கு வந்தது தன்னை நயப்படுத்தி உளவறியத்தான் என்பதும் ரதிகாந்தனுக்குத் தெரியும் அவன் தன் தந்தைக்குப் போக்கியிருந்த ஓலை பற்றியும் வீரர்கள் பேசிக்கொள்வதை அவன் கேட்டிருந்தான். இக்கயவனின் கபடமெல்லாம் இன்னும் எவ்வளவு தூரந்தானென்று பார்த்துவிட அவனும் தயாரானன்.

"தம்பி! உனக்கு உயிர்மேல் ஆசையுண்டா?" என்று பூர்வ பீடிகை போட்டுக்கொண்டு ஆதித்யன் தொடங்கினான் சற்றும் வணங்காத குரலில், '"ஏன்" தாராளமாக உண்டு' என விடை பகர்ந்தான் ரதிகாந்தன். ஆதித்யன் போன்ற பூண்டுகளைப் பூமியினின்றும் அகற்றுவதற்காகவே உயிர் வாழலாம். தேவையானல் இன்னொரு ஜன்மமும் எடுக்கலாம் என்பது ரதிகாந்தனின் சித்தாந்தம்.

"சரி அப்படியானல், ஒளிவு மறைவின்றி நான் கேட்கும் விவரங்களைக் கூறு. நீ தளபதி ஜயமாலின் மைந்தன் என்பதோடல்லாமல் ஒரு சேனைத் தலைவனும் கூடத்தானென்று கேள்விப்படுகிறேன் எனவே உங்கள் சேனையின் பலாபலங்கள், தாக்குதல் திட்டங்களெல்லாம் உனக்குத் தெரிந்திருக்கவேண்டுமே"

"ஆம்." என்னும் பாவனையாய்த் தலையை யசைத்தான் ரதிகாந்தன். அவன் எண்ணியது சரியாய்விட்டது இவ்வஞ்சகனை வஞ்சனையாலேயே தீர்த்துவிடவேண்டுமென்னும் உறுதி அவனுள்ளத்திலேற்பட்டது அவனது மூளையும் வெகுதுரிதமாய் வேலை செய்தது

"தற்சமயம் அவ்விவரங்கள் எமக்குத் தேவையாயிருக்கின்றன. அவற்றை நீ வெளியிடுவதானல் உனக்கு விடுதலையளிப்போம்" என்று ஆசை வார்த்தை கூறினான் ஆதித்யன் ரதிகாந்தன் பொங்கியெழும் சினத்தை வெளிக்காட்டாமல் அடக்கிக்கொண்டான்.

"இல்லாவிட்டால்.........?"

"சித்ரவதைதான்."

ரதிகாந்தன் ஒரு கணம் யோசிப்பதுபோல் பாவனை செய்தான். அவனுடைய நடத்தை இணங்கிவருபவனைப்போலிருந்தது. "சரி சொல்லிவிடுகிறேன்." என்றானவன்.

"சொல்லு."

"முதலில் சிறிது தண்ணீர் கொடுங்கள் தாகம் நாவை வறட்டுகிறது"

பொறுமையற்ற ஆதித்யன் தண்ணீர் நிறைந்த கோப்பையையெடுத்து அவனிடம் நீட்டினான். அவர்களைத் தனியே விட்டுக் காவலாளர் வெளியே நின்றமையின் ஆதித்யனே அவ்வேலையைச் செய்தான்

"இது காவேரிமாதாவின் தண்ணீர் அதைப் பருகிவிட்டு என்னிடம் பொய்யுரைக்கத் துணியாதே." என்று ஆதித்யன் எச்சரித்தான். அவன் கூறி வாய் மூடுமுன் எதிர்பாராத சம்பவம் ஒன்று நிகழ்ந்துவிட்டது.

கோப்பையிலிருந்த தண்ணீரை அப்படியே ஆதித்யனின் முகத்தில் வாரியடித்துவிட்டான் ரதிகாந்தன். மூக்கு வாய் எல்லாம் தண்ணீர் புகுந்து அவனை திக்குமுக்காடச் செய்ததுமில்லாமல் அவன் கண்களையும் மறைத்துவிட்டது, கண்மூடிக் கண் திறப்பதற்குமுன் அவனது உறையிலிருந்தே வாளை உருவி ஆதித்யனின் தலையைச் சேதித்துவிட்டான் தண்ணீரின் மகிமையால் கூச்சலிடக்கூட முடியாமல் மௌனமாக மரணத்தைச் சந்தித்தான் அவ்வஞ்சகச் சேனாபதி. அவனது ரத்தத்தில் தோய்ந்த கத்தி ரதிகாந்தனின் கையில் சுடர்விட்டது.

நிசப்தத்தில் நடந்த இக்கொலை, வாயிலில் நின்ற காவல்காரரின் கவனத்தைக் கவரவில்லை எனினும் வாயிற்புறமாக வெளியேறுவது துர்லபமென முன்பே அவனறிவான். நின்ற இடத்திலிருந்தே கத்தியால் கூடாரத்தின் பின்புறத்துத் துணியைச் சேதித்தான் மிகப் பழைய அக்கித்தான் கத்தியின் கூர்மைக்கு ஈடுகொடுக்கமாட்டாது துண்டமாகியது எவ்விதப் பரபரப்புமின்றிப் பின்வாசலால் வெளியேறிய அவனை யாரும் கவனிக்கவில்லை கும்மாளம், கூச்சல் இவற்றின் நடுவில் மெல்ல நடந்துசென்று காவிரிக்கரையை அடைந்தவன் வெள்ளத்தில் குதித்து நீந்தத் தொடங்கினான் பேராபத்தினின்றும் மீளும் அவ்வீர வாலிபனுக்குக் காவிரியன்னை தன்னுதவியை அளித்தாள் தண்ணீரின் வேகத்தால் வெகு சீக்கிரமாக நெடுந்தூரம் இழுத்துச் செல்லப்பட்டு, எப்படியோ மீண்டும் வடகரை சேர்ந்தான்

ரதிகாந்தன் கரையேறிய இடம் உறையூருக்கும் கரிகாலனின் படைகளிறங்கியிருந்த பாசறைக்குமிடையிலிருந்தது. நனைந்த ஆடைகளுடன் குளிரில் விறைத்த அவனுக்கு மேலே என்ன செய்வதென்று தெரியவில்லை தந்தையிடம் திரும்பிப்போய் மன்னிப்பு வேண்டலாமா, அல்லது நேரே எங்காவது யாத்திரை போய் விடலாமாவென்று யோசனை செய்தான் அந்நிலையில் தான் கீழ்த்திசையினின்றும் வந்துகொண்டிருந்த பல தீவட்டிகளின் ஒளியும் அத்துடன் கேட்ட குதிரைகளின் குளம்படிச் சத்தங்களும் அவனது கவனத்தைக் கவர்ந்தன. சில நிமிஷப் பொழுதில் நெருங்கிவந்த ஜாஜ்வல்யமான ஓர் தேரையும் அதைச்சுற்றிக் காவலாக வந்துகொண்டிருந்த பல குதிரை வீரர்களையும் கண்ணுற்றான் தீவட்டிகளின் பிரகாசத்தில் மன்னர்பிரானது ரதத்தையும் அவரது மெய்க்காப்பாளரின் முகங்களையும் எளிதில் அடையாளங் கண்டுகொண்டான் ரதிகாந்தன் அவன் நின்ற இடத்துக்குச் சில கஜதூரங்களில் கோஷ்டி நின்றது

'நண்பனு, எதிரியா?' என்று கம்பீரமான த்வனியில் கேள்வி பிறந்தது. தலைமை மெய்க்காப்பாளனிடமிருந்து. இருளோடு இருளாய் நின்ற ரதிகாந்தனை, அந்த யுத்தகாலத்தில் அவன் சந்தேகித்ததும் இயற்கை தானே? நண்பன் என்று மறுமொழியளித்த ரதிகாந்தன் சற்றுமுன் சென்று 'வீரவர்மா, என்னை எனக்கு அடையாளம் தெரியவில்லையா?' எனக் கேட்டான். உடனே ஏககாலத்தில் எல்லோர் முகத்திலும் பிரமிப்புத் தோன்றியது.

ரதத்திலிருந்து கரிகாலமன்னர் தலையை வெளியே நீட்டினர். 'வீரவர்மா, அதுயார்? என்ன விசேஷம்?' என்று அவர் கேட்டார்.

'அரசே! மேன்மை தங்கிய தளபதி அவர்களின் குமாரர்............' என்று மெய்க்காப்பாளன் பதிலளித்தான்.

'யார் ரதிகாந்தனு.........? மகனே, இங்கே வா.' என்றழைத்தார் மன்னர் அவர் குரலிலும் ஆச்சர்யம் தொனித்தது படபடக்கும் நெஞ்சுடன் நெருங்கினான் அவ்விளைஞன்,



"ரதிகாந்தா! நீ இங்கே எப்படி வந்தாய்? உனது இந்தக் கோலத்திற்குக் காரணமென்ன?" என்று மன்னர் அடுத்தடுத்துக் கேள்வி போட்டார். ரதிகாந்தன் சற்றுத் தயங்கி நின்றான்.

'மகனே பயப்படாதே. ரதத்தில் ஏறிக்கொள். என்னிடம் நீ ஒன்றையும் ஒளியாமற்சொல்லலாம் ஏதோ கலவரம் நடந்திருக்கிறதென்று நான் முன்னமே ஊகித்தேன்..." என்று தைரியப்படுத்தினார் அரசர். ரதிகாந்தனும் தேருக்குள் ஏறித் தன் வேந்தனின் காலடியில் அமர்ந்துகொண்டான் குதிரைகள் பாய்ந்துகொண்டு கிளம்பின. தான் தந்தையிடமிருந்து பிரிந்து மோஹினியுடன் படகேறியது முதல் அன்று இரவு எதிரியின் கூடாரத்தில் ஆதித்யனைக் கொன்று விட்டுத் தப்பி வந்தது வரை சகல விருத்தாந்தங்களையும் ரதிகாந்தன் மன்னனுக்குரைத்து, தான் செய்த பெருந்தவறுக்காக மன்னிக்குமாறு இறைஞ்சினான். அவனது விழிகள் கண்ணீர மல்கின

அன்பும், பரிதாபமும் கருணாநிதியான அம்மன்னவன் முகத்தில் சுரந்தன பரிவுடன் அவனது முதுகைத் தடவிக்கொடுத்தார்.

"ரதிகாந்தா வருந்தாதே. உனது பருவத்தில் வாலிபர்கள் தவறு செய்வது இயற்கை ஆனால் நீ தவறு செய்ததோடல்லாமல் அதற்குச் சரியான பிராயச்சித்தமும் செய்துவிட்டாய் வஞ்சகன் ஆதித்யனது உயிரை அவன் வாளைக்கொண்டே போக்கிவிட்ட உன் திறமையைப் பாராட்டுகிறேன். உன் தந்தை என்னை உடனே போர்க்களத்துக்கு வரும்படி ஓலையனுப்பியதன் ரகசியம் இப்போது தெரிகிறது."

ரதிகாந்தன் ஒன்றும் பேசவில்லை கரிகால மன்னரும் ஏதோ சிந்தனையில் ஈடுபட்டார் ரதம் பாசறையை நெருங்கிவிட்டது அரசரின் வரவை எதிர்பார்த்துக்காத்திருந்த வீரர்கள் பெருங்குதூகலத்துடன் ஆர்ப்பரித்து அவரை வரவேற்றனர். நேரே ஜயமாலின் கூடாரத்தினெதிரில் போய் நின்றது ரதம். முதலில் அரசர் இறங்கினார். இறங்குமுன், "ரதிகாந்தா! நீ இங்கேயே இரு. நான் கூப்பிடும்போது வந்தால் போதும்" என்று மெல்லிய குரலில் கூறிவிட்டுப்போனார்

எந்த நிமிஷமும் தந்தையின் முன்பு சென்று நிற்க நேரலாமென அறிந்த அவன் மனதில் வெட்கமும் சிறிது பயமும் குடிகொண்டிருந்தன.

* * * *

"மஹாராஜ்! என் மகனால் எனக்குப் பெரும் இக்கட்டான நிலைமையேற்பட்டு விட்டது. கடமைக்கும் புத்திரவாஞ்சைக்குமிடையில் என் மனம் ஊசலாடுகின்றது. கடமை பெரிது தான். எனினும் ஆதித்யனின் மிரட்டலையும் மீறி நான் படையெடுத்துச் சென்று அதனால் ரதிகாந்தன் வதையுண்டால் என் மைந்தனைக் கொல்வித்த பழி நான் சாகும்வரை என் மனதில் பாறாங்கல் போலழுத்திக்கொண்டிருக்குமல்லவா? அதைத் தவிர்க்க விரும்பித்தான் தங்களையே இம்முறை படைக்குத் தலைமை தாங்கும் பொருட்டு மன்றாடுகின்றேன் எனது நம்பிக்கைத் துரோகத்திற்காகத் தாங்கள் என்னை எப்படி வேண்டுமாயினும் தண்டியுங்கள்" என்றான் ஜயமால்.

"ஜயமால்! நீ எத்தனையோ பெரும் போர்களை நடத்தி வைத்து எனக்கு வெற்றியைத் தேடித் தந்திருக்கிறாய் இன்று நான் ஓர் சக்ரவாத்தியாய் விளங்குவதற்கு நீயே மூலகாரணம் என்றாலும் மிகையாகாது. என்றாலும் இம்முறை கடமைதவறிவிட்டாய் நீ உன் கையிலிருந்து படைப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நான் உனக்கு விதிக்கும் தண்டனையை நீ முகங்கோணாமல் ஏற்றுக்கொள்வாயா" என்று மன்னர் வினவினார்.

"மன்னபிரானே! என் தலையையே வேண்டுமாயினும் கொடுக்கிறேன் என்னருமை மகனிறந்தானென்னும் வார்த்தையை நான் காதால் கேட்குமுன் என்னை எமனுலகுக்கனுப்பிவிடுங்கள்" என்று அரசர் முன் ஜயமால் மண்டியிட்டான்

"இல்லையில்லை நான் உனக்கு மரணதண்டனை விதிக்கப்போவதில்லை அதனிலும் கொடிய சிக்ஷையொன்று விதிக்கப்போகிறேன் எங்கே சற்று கண்ணை மூடிக்கொள்."

ஜயமால் கண்ணை இறுக மூடிக்கொண்டான் தண்டனையின் தன்மையை அவன் அறியாவிடினும்தான் மீண்டும் கணணைத் திறக்கப்போவது பரலோகத்தில் தானென அவன் எண்ணினான் ஆனால் சற்றும் மனம் கலங்கினானில்லை

"கண்ணைத் திற" என்று மன்னரின் உத்தரவு பிறந்தது. ஸ்வப்பனத்திலிருந்து விழிப்பவன்போல் கண்ணைத் திறந்த ஜயமாலுக்கு மீண்டும் ஸ்வப்பனம்தான் காண்கிறோமோ என்ற ஐயம் தோன்றியது. மரணத்தின் வாயில் வீழ்ந்துவிட்டானென அவன் கருதியிருந்த மைந்தன் ரதிகாந்தன் எதிரே நின்றான் ஜயமால் கண்களை கசக்கிக்கொண்டு பார்த்தான்.

"கனவல்ல ஜயமால் அவன் ரதிகாந்தன்தான் அவ்விளைஞனை மன்னித்து அங்கீகரித்துக்கொள் பகைவரிடையில் புகுந்து அவர்கள் தளபதியையொழித்து நம் வேலையை மிகச் சுலபமாகச் செய்துவிட்டான்" ரதிகாந்தனது தவறு எல்லோருக்கும் ஒரு படிப்பினை ஆனால் அவன் காட்டிய திரமும் நுண்ணறிவும் எல்லோருக்கும் ஓருதாரணமாய் விளங்க வேண்டியது உண்மையில் அவனால் நான் பெருமையடைகிறேன்" என்று மன்னர் புன்னகை புரிந்தார்.

ஜயமால் புளகாங்கிதமடைந்தான்

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய்"

—என்ற வள்ளுவர் வாய்மொழி வேதவாக்கனையதன்றோ?

தலைவனையிழந்து, தடுமாறிய பகைவர்சேனை சோழ நாட்டாருக்குத் தொல்லையே வைக்காமல் சிதறியோடியது. உண்மை வீரமும் நேர்மையும் வென்ற வஞ்சனையும் கோழைத்தனமான கொடுமையும் புறமுதுகிட்டோடின. கரிகாலப் பெருவளத்தான் கீர்த்தி தமிழ் நாட்டில் ஓங்கியது. அவன் ஆட்சியில் வாணிபமும் கலையும் வளர்ந்தன.

சக்தி ஆரூடம்!
*
(பிரபல ஆரூடசாலை)
பல மேன்மையான நற்சாட்சிகள் பெற்றது
1 வருஷ பலன் ரூ. 5.
ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1.
சக்தி கவசம் ரூ. 7-8-0
ஜாதகம் கணிக்க ரூ. 2.
வி பி பி தனி
ஜாதகம் OR கடிதம் எழுதும் நேரம் தேவை.
சக்தி ஹோம்,
விருத்தாசலம் P. O. (S. I.)

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ஊதுவத்தி
நெ. 1506

விஷப்பரீட்சை

குருநாத்

"நிறுத்தப்பா! நிறுத்து! இந்த வீடுதான் போலிருக்கிறது. நிறுத்து!" என்று அந்த மூதாட்டி கூவினாள். ராஜநடை போட்டுக்கொண்டிருந்த கோச்சு வண்டியிலிருந்து.

"தட் தட்," என்று கம்பீரமான வெள்ளைக்குதிரை குளம்படி போட்டு நின்றது அவள் கீழே இறங்கினாள்; பின் யாரையோ இறக்கிவிட கையை நீட்டினாள், ஒரு காலை வண்டியின் படிகட்டில் ஊன்றியபடி

முனகும் சப்தத்துடன், ஒரு கையால் மார்பை அமுக்கிப் பிடித்துக்கொண்டு, சோனியான ஒரு வாலிபன் கீழே இறங்கலானான். இதற்குள் வண்டியோட்டி, பயபக்தியுடன் வாலிபன் கீழே விழாதபடிப் பார்த்துக்கொள்ள ஓடிவந்தான்

இருவரும் அவனை உள்ளே பிடித்துச் சென்றனர்.

அவள் தன் கண்களை ஒரு முறை மாட்டியிருந்த 'போர்டி'ன்மேல் செலுத்தினாள். இந்த வீடுதானே தேடிவந்தது, என்ற சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள.

வெயிலால் உலர்ந்து, வெடித்து. மழையில் மக்கி, மங்கி, பனியால் பாசிபிடித்து, பளபளப்பிழந்து. கால வேகத்தால் கட்டுக்கள் உடைந்து காணப்பட்ட கரும்பலகையில் "வைத்தியர் ஜம்புலிங்கம், ஆயுர்வேத முறைப்படி மருந்து தரப்படும்" என்ற எழுத்துக்கள் அரைகுறையாகத் தெரிந்தன ஜன்னல் புறம் எட்டிப்பார்த்த ஜம்புலிங்கத்தின் முகம், சட்டென வாயிற்புறம் தோன்றி உள்ளே நுழைபவர்களை வரவேற்கத் தொடங்கியது

"நீங்கள்தானே.........!" என்று வந்தவள் இழுத்தாள்

"ஆமாம், நான்தான்...ஹிஹிஹி... இந்த ஊர் மட்டுமல்ல, சுற்றிலும் நாலு ஊர் வைத்தியம் எனது தான்......" என்று கூறினார், வைத்தியர் ஜம்புலிங்கம். நோயாளி உட்கார்ந்தான். அவளும் அமர்ந்தாள். வேலைக்காரன் தூர நின்றான் வைத்தியரின் முகத்தைப் பார்த்தாள் அவள் மறு முறை அவர் முகம் வெளியில் தொங்கிய பலகையைக் கவனப் படுத்தியது நட்டபட்ட பலகையில் காணப்பட்ட ஆழமும். தெளிவும் இல்லாத கீறல்கள் வைத்தியர் முகத்திலும் தெளிந்தன, ஆம், அவை குறுக்கெழுத்தால் எழுதப்பட்ட அனுபவக் கீறல்கள்

ஜம்புலிங்கமும் வந்தவர்களின் நிலையை எடை போட்டுக்கொண்டிருந்தார்.

அவள் எல்லா நகைகளையும் அணிந்திருந்தாள். எல்லாம் வைரமும், தங்கமும் இழைத்தவை புடவை பகட்டாக இல்லாவிட்டாலும் விலை உயர்ந்தது ஆனால்...ஆனால்...அவள் முகத்திலே அவள் கழுத்திலே மங்கலக் குறிகள் காணப்படவில்லை. அவள் விதவை

வைத்தியரின் கண்கள் நோயாளி மேல் தாவின.

"ஐயா, வைத்தியரே! தம்பிக்கு மார்வலி. அஞ்சு வருஷமா இந்த வலி. பார்த்திங்களா இந்த மாபுக் கூட்டை. தம்பி, காட்டப்பா, அவருக்கு..."

வாலிபன் போட்டிருந்த பட்டுத் துணியை விலக்கி பிளானல் சட்டையின் பித்தானைக் கழற்றினான்

வைத்தியர் தம்மை அறியாமல் கறை ஏறி, காவி நிறம்கொண்ட தம் காரிக வேஷ்டியை இரக்கமுடன் பார்த்துவிட்டு, வாலிபன் மார்பைக் கவனித்தார். விரலை வைத்துத் தட்டிப் பார்த்தார்

பள்ளிக்கூட மாணவன் ஒரு பரிசோதனைப் பொருளைப் பார்த்துக்கொண்டே வர வாத்தியார் விளக்கிக்கொண்டு வருவதேபோல், அவள் பேசிக்கொண்டே வந்தாள். பேச்சில் ஏக்கமும், கனிவும், சொட்டின கொஞ்சம் அலக்ஷ்யமும் கூட.

"ஐயா, வைத்தியரே, நன்றாகப் பாருங்க சின்ன வயசிலிருந்தே இவன் மாபுக் கூடு இப்படி முன்பக்கம் குவிஞ்சிப்போச்சு. பார்த்திர்களா, அந்த மூணு எலும்புகளும் எப்படி முன்னுக்கு வந்து நீட்டிகிட்டு இருக்கோ......அங்கே நல்லா தட்டிப் பாருங்க...குழந்தை கொஞ்ச தூரம் போய் வந்திச்சின்னு மார்வலி என்குதுங்க...இப்படியே தள்ளிப்போயிடிச்சி இந்த அஞ்சு வருஷம் மருந்து வாங்கிக்கோன்னு கேக்கறதில்லே... பாருங்க......நமக்கென்ன சோத்துக்குக் குறைவா? ஆண்டவன் ஏதோ கொடுத்திருக்கறது. ரெண்டு தலை முறைக்கு காணும் பத்தாவதோடே நிறுத்திக்கோடாண்ணேன். படிப்பை கேக்கல்லே. எம் ஏ. படிக்கணும்னு சொல்லிச்சி...மேசையண்டை குனிஞ்சு படிச்சி கிட்டே இருக்கிறது. அறுபது நாழியும்... பின் ஏன் வராது மார்வலி. வைத்தியரே, சொல்லுங்க!" அவள் பேசிக் கொண்டே போனாள்.

"கையைக் காட்டுங்க!" என்றார் வைத்தியர் அவர் வாலிபனின் விரல்களில் பளிச்சிட்ட மோதிர ஒளியில் சொக்கிவிட்டாரா, அல்லது நாடியைத்தான் உண்மையாகப் பார்த்தாரா?

மறுபடியும் இயந்திரம் பேச ஆரம்பித்தது.

"பாருங்க; படிப்புதான் போவுது; கூட்டத்திலே போய்ப் போய்ப் பேசறது ஒரு மணி இரண்டு மணி கத்துகிறது தினம் இதேவேலை!"

வாலிபனுக்கு எரிச்சலாக இருந்தது.

"போறும்மா, போறும்! வந்த காரியத்தைச் சொல்லு!' என்றான் பெருமூச்சு விட்டுக்கொண்டு அவன் தொண்டை கரகரத்திருந்தது நன்றாகச் சளி பிடித்திருந்தது. மேலும் மார்புவலித்திருக்கவேண்டும். பாவம், கஷ்டப்பட்டுத்தான் பேசினான்

மறுபடியும் அவள் பேசினாள்.

"நேற்று ஏதோ பெரிய ஊாவலமாமுங்க. அதுலே கலந்துகிட்டது குழந்தை வழியிலே பலத்த மழையாம் மழையிலே நனைஞ்சிருக்கு. வழியிலே சறுக்கி கீழே விழுந்திட்டவே மார்பில் எங்கோ எலும்பு பிடிச்சுக்கொண்டுவிட்டது மூச்சு விட முடியல்லே......அவதிப்படுது. இப்ப காலேஜு லீவுதானே ஊருலே வந்திருந்து ஓய்வு எடுத்துக்கொள்ள வந்தவன், ஊர்வலம், கூட்டம்னு போய் இப்படி மாாவலியைச் சம்பாதிச்சிண்டு யாா வரச்சொன்னா? என் பேச்சு அவனுக்கு லக்ஷ்யமே இல்லே.. ஐயா......ஒரே பிள்ளை நீங்கதான் அந்த மார்வலியை அடியோடே ஒழிச்சுக்கூட்டி என் வயித்திலே பாலை வார்க்கணும். செலவு ஆவதைப்பற்றி கவலை இல்லேங்க......குடும்பத்துக்கு ஒரே விளக்கு, ஐயா...!"

அவள் குரலில் பாசமும் உணர்ச்சியும் அடைத்துக்கொண்டு மேலும் பேசமுடியாமல் தடுத்தன.

ஜம்புலிங்கம் பார்த்தார் தாயின் கண்களுக்கு அணுவளவு நோய் மலை போலத் தெரிந்தது ஆனால் நாள்பட்ட வியாதிகளெல்லாம் ஜம்புலிங்க வைத்தியரிடம் வாரக் கணக்கிலேயே அடியோடு மறைந்திருக்கின்றன. 'பூ,

ஜலதோஷத்திற்கு ஒரு சூரணம்; மார்வலியில் வெளியில் பூச ஒரு தைலம்; உள்ளுக்கு ஒரு வார லேகியம். வாய்வு, குளிர்ச்சி பதார்த்தங்கள் கூடாது அவ்வளவே பத்து நாளில் அவனைப் பிடித்த எல்லா வியாதிகளும் பறந்துவிடுமே!" அவர் முகத்தில் லேசாகப் புன்னகை அரும்பியது.

"ஒன்றும் பயப்படவேண்டாமம்மா!" என்று சொல்லிக்கொண்டே வைத்தியர் மருந்து தயாரிப்பதில் முனைந்தார்.

மறுபடியும் அவள் எல்லாவற்றையும் விளக்கிக் கூறிக்கொண்ட வந்தாள் மருந்து வாங்கிக்கொண்டு வந்தவர்கள் அகன்றார்கள்.

உள்ளே வாட்ட சாட்டமான ஒருவர் நுழைந்தார். அவர் பெரிய வாயாடி பெயர் சின்னைய ஊர்சுற்றி. அவர் அவ்வூரின் செய்தி ஸ்தாபனம். சின்னையாவுக்கு எங்கே போனாலும் 'ஓசி' சிற்றுண்டி; 'அமிஞ்சி' ஆகாரம். ஆனால் சுவாரஸ்யமாகப் பேசுவார் அவர் சாப்பிட்ட அளவுக்கு பத்து மடங்கு விஷயங்களை யார் யாருக்கு எவை எவை உபயோகப்படுமோ அவ்விஷயங்களைக் கக்கிவிடுவார். எனவே அவர் ஊராருக்கு அரட்டையடிக்கச் சரியான துணை.

"என்ன வைத்தியர்வாள், பெரிய பெரிய ஆசாமிகளெல்லாம் உங்கள் வீட்டிறி வருகிறார்கள் அடிக்கிறதே யோகம்! என்றுசொல்லிக்கொண்டே நாற்காலியை வலித்துப்போட்டுக்கொண்டு உட்கார்ந்தார

வந்தவர்கள் கொடுத்துவிட்டுப் போன ஐந்துரூபாய் நோட்டை ஜம்புலிங்கம் உள்ளங்கையில் வைத்துக்கொண்டு மற்றொரு கைவிரலால் சுருட்டிக்கொண்டிருந்தார்.

"என்ன பிள்ளைவாள்! நானும் ஏறக்குறைய இருபது வருஷங்களாக வைத்தியம் பார்க்கிறேன் எவ்வளவு வந்தாலும் விடியமாட்டேங்கறதே தினம் வரும்படி பத்து ரூபாய்க்குக் குறையறதில்லே. இந்தக் கிராமத்திலே ஆனா இந்த ராட்சஸ குடும்பத்துக்கு எவ்வளவு வந்தாலும் பத்தலே—இந்தக் கஷ்டம் ஒழிய ஒரு வழியும் இல்லையா?' என்று விரக்தியுடன் பேசினார் ஜம்புலிங்கம்

பாவம் அவருக்குப் பெரிய குடும்பம் நான்கு பெண்கள். இரண்டு பிள்ளைகள், வீட்டில் அவர் தாயார், மாமியார், தமக்கை, அவள் குழந்தைகள் வேறு எல்லோரையும் அவர்தான் காப்பாற்றவேண்டும் ஊரில் காய்கறிகள், பால், தயிர், புளி, பருப்பு தினுசுகள் இவற்றிற்குப் பஞ்சமில்லை. ஆனால் மேல் செலவுக்கு? பட்டணத்தில்இந்தியவைத்தியக் கல்லூரியில் படிக்கும் தன்மூத்த பிள்ளைக்கும், மற்ற பிள்ளை, பெண்களுக்கும் சம்பளம் மட்டும் மாதம் இருநூறு ரூபாய்க்கு மேல் ஆகிவிடுகின்றதே இவ்வளவு பணத்தை இந்தக் கிராமத்திலே இருந்துகொண்டு...? தம் வைத்தியத் திறமைக்கு மதிப்பு இல்லாவிட்டால்...? இந்த விஷயங்கள் எல்லாம் சின்னையா அறிந்திருந்தார் எனவேவைத்தியரின் பேச்சில் விரவி இருந்த விரக்தியை சின்னையா புரிந்துகொண்டார்.

"என்ன ஜம்பு! நீயா இப்படிப் பேசுவது? இத்தனை வருஷம் நீ எப்படியோ காலட்சேபம் நடத்தினே. மேலே ஒருத்தன் இல்லை? அவன் அதேபோல் எல்லாவற்றையும் நடத்திவருகிறான்" என்றார். பிள்ளை, தமக்கே உரிய தைரிய மூட்டும் பேச்சு நடையில் ஜம்புலிங்கம் சொன்னார 'இல்லை, பிள்ளைவாள் முன் மாதிரி இல்லை காலம் விலைவாசிங்க பொறுக்க முடியல்லே லேகியத்துக்கு சுக்கு, மிளகு, திப்பிலி வாங்க எவ்வளவு பணம்ஆவுது! கேடுகெட்ட சீரகம், மிளகு என்ன விலை விக்குதுங்கறேன்!

'என்ன ஆனால் என்ன ஜம்பு! 'உன்னிடம் மருந்து வாங்கிப்போக சுற்றிலும் நாலு ஊர்கள் காத்திருக்கின்றன இப்போ வந்து போனாங்களே அவர்கள் கிராக்கி ஒண்ணே உனக்கு நூறு நூறாகக் கொடுக்குமே, விட்டுத் தள்ளு கவலையை.

வைத்தியர் நோட்டைச் சுருட்டுவதை நிறுத்தினார்.

"பிள்ளைவாள், யாருப்பா வந்தவங்க! புதுசா இருக்கே ஆட்கள்!"

நோட்டு உள்ளங்கையில் இருந்தது சுருட்டப்படாமல் சின்னையாசொன்னார் சுவாரஸ்யத்துடன்

"அப்படிக்கேளு மிட்டாபுரம் மாஜி ஜமீந்தார் மீனாட்சி உடையார் தெரியாது!"

"ஓ! அவர் தம்பி காமாட்சிஉடையாருக்கு தங்க பஸ்பம் செய்துகொடுத்து சொளையா ஐந்நூறு வாங்கினது மறந்து போகுமா என்ன?"

"ஆ! தெரியுமில்லே அவர்களை? அந்தச் சகோதரர்களுக்கு மூத்தவ விசாலாட்சி அம்மாள்னு இருந்தாங்க பன்னிரண்டு வயசிலேஅந்தம்மாவுக்குக் கலியாணம் நடந்து புருஷன் விஸ்வநாத உடையாரோடே வசிக்க ஆரம்பிச்சாங்க அந்தக் கல்யாண வைபவங்கூட எனக்கு நேத்து நடந்தது மாதிரி தெரியுது அந்தக் கதை எதுக்கு இப்போ அந்தம்மா விதவையாய் வந்திருக்காங்க உடையார் சண்டையிலே கர்னலாய் போய் நல்ல பேர் வாங்கி வீர சொர்க்கம் அடைஞ்சாரு!"

"ஹூம், அப்புறம்! ஜம்புலிங்கம் நோட்டை விரைவாகச் சுருட்ட ஆரம்பித்தார். அவர் கண்கள் பளிச்சிட்டன.

சின்னையா தொடர்ந்தார். "பாரு, ஜம்பு...அப்பேர்பட்ட வீரனுக்குச் சோனிபிள்ளை பிறந்திருக்கு. புலிக்குப் பிறந்தது பூனையாட்டமா இருக்கு இந்த விசித்திர உலகத்திலே எதுதான் நடக்காது? ஆனா பிள்ளைக்குப் படிப்பு மேலே மோகம் படிச்சி படிச்சி உஷ்ணம் ஏறி பிள்ளை உருகிப் போச்சி. மார்பு வேறே கூண்டு கட்டிப் போச்சு இதுலே தேசபக்தி வேறே கூட்டத்திலே பிரமாதமாகப் பேசுவான் அந்த சோனி உடம்புக்கு ஒரு இடிக்குரல்...."

சின்னையா பிள்ளை தம் பரந்து விரிந்த அனுபவத்திலிருந்து அளந்து கொண்டே போனார்...

வைத்தியரின் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்தது. பிள்ளைவாள் பேச்சை எப்படியோ வளைத்துத் தமக்கு உண்டான அஜீரணத்தைக் காரணத்துடன் விளக்கி, இலவச பேதி மருந்திற்கு உத்தரவு போட்டு, வாங்கிக்கொண்டு வாய் நிறைந்த வெற்றிலையுடன், மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் அவசரமாகமற்றொரு இடத்திற்குப் புதிய செய்தியைத் தம் வாய் ரேடியோவில் ஒலிபரப்ப விரைந்தார்.

வைத்தியர் ஒரு முடிவுக்கு வந்து ரூபாய் நோட்டை மேஜைமேல் உற்சாகத்துடன் வீசி எறிந்தார். இரண்டு சிட்டிகை பொடி சுருதி சுத்தமாக அவர் நாசித் துவாரங்களில் ஏறியது

• • •

ஒரு வாரமாயிற்று.

பணக்கார வீட்டுப் பிள்ளைக்கு நோய் நிற்கவில்லை. வைத்தியர் ஜம்புலிங்கம்தான் மருந்து கொடுத்துக்கொண்டிருந்தார். அவர் வீட்டிற்கு கோச்சு வண்டிவரும். வைத்தியா மருந்து கொடுத்துவிட்டு வருவார். வாரம் முடிந்ததும் அவர் முப்பது ரூபாயுடன் திரும்புவார்.

மறுவாரம். பிள்ளைக்கு மார்வலி குறைந்திருந்தது ஆனால் புதிதாக இருமல் கண்டிருந்தது

அடுத்தவாரம் மார்புவலி மறைந்து விட்டது இருமல் அதிகமாயிற்று

முதல் மாதம். இளைஞன் இளைத்துப்போய் இருந்தான் இருமல் நின்றபாடில்லை இரண்டுமாதங்கள் ஆயின வாலிபனின் படிப்பிற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. அவன் படுத்த படுக்கையானான் முன்பு அவனது மூன்று எலும்புகள்மட்டும் முன்புறம்தெரிந்தன இப்பொழுதோ எல்லா எலும்புகளையும் எண்ணிவிடலாம், பார்த்த மாத்திரத்தில் ஒவ்வொரு வாரமும், வைத்தியருக்கு கொடுக்கும் பணம் அதிகமாகிக் கொண்டு வந்தது ஆனால் தாயின் உள்ளத்தில் வேதனை அதிகமாயிற்று. 'இதென்ன வியாதி! வைத்தியர்ஐயா' என்று ஒரு நாள் கேட்டுவிட்டாள் அவள் சந்தேகம் உண்மையாகிவிட்டது. "அவனுக்குக் காசநோய் தொடங்கி இருக்கிறது". என்று வைத்தியர்கூறினார் தாய் அலறினாள்

"இது என்ன புதுமை? ஜம்புலிங்க வைத்தியரின் திறமை என்ன வாயிற்று? அவர் தீராத வியாதிகளையெல்லாம் தீர்த்துவைத்தவர் என்று சொல்லிக் கொள்கிறார்களே! என் பிள்ளைக்கு வைத்தியம்செய்யச்செய்ய அவனுக்கு நோய் முற்றுகிறது மார்வலி மறைந்தது. ஜலதோஷம் முற்றி இருமலாக உருவெடுத்து காசமாக அல்லவா பயங்கரத்துடன் காட்சி அளிக்கிறது. நிச்சயமாக இது என் துரதிர்ஷ்டம். இல்லாவிட்டால் இப்படி முடியுமா? பாவம் குழந்தை படிக்கவேண்டுமென்று எண்ணினான். பி.ஏ யில் முதல்வகுப்பில் தேறினான். தேறியும் என்ன பிரயோஜனம். எலும்புருக்கி நோய்......ஐயோ...!"

பல பயங்கர எண்ணங்கள் அவள் முன் தோன்றி மறைந்தன. எலும்புருக்கி நோயால் மெலிந்து வெறும் எலும்புக் கூடாகத் தன் பிள்ளை நிற்பதுபோல் அவள் கண்களுக்குத் தோன்றியது. அதோ எலும்புருவங்கள் பல அவளைச் சுற்றிக் குதித்தன. ...ஐயோ! என்ன பயங்கரம்!

• • •

ஜம்புலிங்கம் உட்கார்ந்திருந்தார் கையிலே கடிதம். முகத்திலே கவலையின் தேக்கம்

சின்னையா பிள்ளை வழக்கம்போல் புன்சிரிப்புடன் உள்ளே நுழைந்தார்.

"வாருங்கள்" என்று வைத்தியர் வரவேற்றார்.

"என்னையா, கவலை?"

"ஹூம். வைத்தியக் கல்லூரியிலே படிக்கிறானே பெரியவன்...... அவனுக்குப் பரீட்சை தவறிப் 'போச்சி!"

"அட போம் ஐயா! 'யானைக்கும் அடிசறுக்கும்' இந்த வருஷம் இல்லாவிட்டால் அடுத்த வருஷம் பார்க்கிறது!"

"இல்லை...!"

"என்ன இல்லை......பணம் செலவாச்சேன்னு யோசிக்கிறீரா? பணம் என்னையா? இன்றைக்கு வரும்; நாளைக்குப் போகும். துன்பங்களைத் துன்பங்களாக எண்ணினால்தானே ஐயா, மனக்கஷ்டம்......!

வைத்தியர் நாற்காலியை இழுத்துப்போட்டுக்கொண்டார் 'அதில்லே பிள்ளைவாள்; நான் செய்யும் தீவினை தான் என் பிள்ளையைத் தாக்குகிறது...பாருங்கள் —'

வைத்தியர் பேசவந்த வார்த்தைகள் தடைப்பட்டன காரணம், வாசலில் கோச்வண்டி வந்து நின்றது. அதைக் கண்டவுடன் வைத்தியர் முகம் பின்னும் பரிதாபமாக மாறியது.

வண்டியிலிருந்து நோயாளியின் தாய் விசாலாட்சி அம்மாள் இறங்கி வந்தாள். தினமும் வைத்தியர்தான் போய் வருவார. இன்றோ அந்த அம்மாள் ஏன் வரவேண்டும்? ஒருக்கால் பிள்ளையின் நிலை ஆபத்தாய் இருக்கிறதா......?

அவள் ஓர் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டாள் அவள் முகம் மிகவும் வாடி இருந்தது சின்னையா பிள்ளையும் முகமன் கூறி வந்ததன் காரணத்தைக் கேட்டார் வைத்தியர் நின்று கொண்டே இருந்தார அவரிடம் படபடப்பு காணப்பட்டது. அவள் கம்மிய தொண்டையுடன் கூறலானாள்.

"வைத்தியரே...பிள்ளையின் நிலையை நினைக்க நினைக்க எனக்கு என்னவோ செய்கிறது. ஐயா, நான் மலடிதான்; என் வயிறு அவனைச் சுமந்து பெற்றதில்லை என் இருதயம் தாயின் அன்பு ஊற்று பொங்கி வழியும் பாக்கியத்தைச்செய்ததில்லை. ஆனால் அவன்மேல் எனக்கு ஏதோ ஒரு பாசம். அந்தப் பாசம்தான் தாய் அன்பாக இருக்குமோ என்று நினைக்கிறேன். நிச்சயமாகச் சொல்கிறேன். எனக்கு அவன்தான் கண்கள், ஐயா...அவன்தான் என் ஆஸ்தி அவன் என் உயிர்......"

அவள் பெருமூச்சுவிட்டாள்.

"என்னவோ வைத்தியரே நீங்கள்தான் என் தெய்வம்! இந்தாருங்கள் இதை வைத்துக்கொள்ளுங்கள். என் வயிற்றில் பாலை வாருங்கள்: நீங்கள் வேண்டிய பணம் வாங்கிக்கொள்ளலாம். இதைச் சொல்லத்தான் வந்தேன்!" என்று சொல்லியவாறு ஒரு நூறு ரூபாய் நோட்டை நீட்டினாள்.

வைத்தியர் கைகள் நடுங்க அதை வாங்கிக்கொண்டார் அவர் கண்களில் நீர் வடிந்து நோட்டைக் கறையாக்கியது

அவள் புறப்பட்டுப் போய்விட்டாள்

ஜம்புலிங்கம் வாசற்புறத்தையே வெறித்து நோக்கிக்கொண்டு நின்றார் அவர் கண்களை மூடித் திறந்தார். நீர்த்துளிகள் படபடவென்று உதிர்ந்தன

பிள்ளை தொண்டையைக் கனைத்துக்கொண்டார்

"என்ன வைத்தியர்வாள், மனுஷனுக்குப் பச்சாத்தாபம், அன்பு எல்லாம் இருக்கவேண்டியதுதான். நீங்கள் தினமும் இது மாதிரிப் பல பேரின் பிரலாபங்களைக் கேட்கிறீர்கள் இப்படியே ஒவ்வொருவரின் குறையைக்கேட்டுக் கண்ணீர் வடித்

தால் நீங்கள் எப்படித் தொழில் செய்யமுடியும்?..."

இக்கேள்விக்குப் பதில் சொல்லலாமா, வேண்டாமா என்று வைத்தியர் ஒரு கணம் தயங்கினார், அவர் மனசாட்சி 'சொல்' 'சொல்' என்று தூண்டியது.

வைத்தியர் சொல்லலானார்.

"பிள்ளைவாள்! என் கண்களில் வடிந்த நீர் உங்களை ஆச்சரியப்படுத்தியது அல்லவா? உண்மைக் காரணத்தைச் சொன்னால் என்னை வெறுப்பீர்கள். இவ்வளவு கேவலமானவனா!" என்று துச்சமாக நினைப்பீர்கள்; காறியும் உமிழ்வீர்கள்!" "என்ன ஐயா! என்ன வெல்லாமோ பேசுகிறீர்! உங்கள் மூளை சரியாக இல்லை. நான் அப்புறம் வருகிறேன்." எழுந்திருக்காதீர்கள்; என் மூளை சரியான நிலையில்தான் இருக்கிறது; அப்புறம் என் மனம் மாறிவிடும்; இப்பொழுதே நான் செய்த மோசத்தைச் சொல்லிவிடுகிறேன், தடை சொல்லாமல் கேளுங்கள்!

'என் கண்ணீர் உங்களை மயக்கிவிட்டது அந்த அம்மாள் நூறு ரூபாய் நோட்டு கொடுத்ததற்காக நன்றி அறிதலால் துளிர்த்த கண்ணீர்த் துளிகள் அல்ல அவை; அவள் பாசத்தால், பதைப்பதைக் கண்டு கொட்டிய கண்ணீர் இல்லை இது; ஆனால் நான் செய்த படுமோசத்தை எண்ணி, நான் செய்த மிருகச்செயலை எண்ணி, நான் செய்யும் விஷபரீட்சையை எண்ணி, நடுநடுங்கியதால் வெளிப்பட்ட கண்ணீர்த் துளிகள் அவை!

"பிள்ளைவாள்......! நான் பாவி! பணத்தாசை என்னைப் பிடித்து ஆட்டியது. பணமுடை காரணமாக ஒரு பாதகம் செய்தேன். இந்த அம்மாள் ஜமீந்தாரிணி என்று சொன்னீர்களா? பிள்ளைக்குக் கண்டிருந்தது சாதாரண மார்வலிதான் ஒருவாரத்தில் குணமாய்விடும் அவன் நோய் அவனுக்கு வேண்டி இருந்தது வெறும் ஓய்வுதான் ஒரு வாரத்திற்கு மிஞ்சி மிஞ்சி எவ்வளவுதான் மருந்து கொடுத்தாலும் இருபது முப்பது ரூபாய்க்குமேல் கிடைக்காது. பசையுள்ளவர்களை இலேசில் விட்டுவிட மனம் வரவில்லை விஷப்பரீக்ஷை செய்ய எண்ணினேன். அந்த பயங்கர எண்ணம், இயந்திர வேகத்தில்வேலை செய்ய, எனக்கேற்பட்ட முடையும், என் வைத்தியத் திறமையும் எண்ணெயும் கரியும்போல் உதவின.

இதுதான் நான் செய்த முடிவு.

பிள்ளையின் மார்புவலியைத்தீர்த்துவிடுவது. அதற்காக இரண்டுவாரம் பணம் வாங்கலாம் பின் அவனுக்குப் பிடித்திருந்த ஜலதோஷத்தை முற்றச் செய்வது. ஒரு மாதம்வரை அவனைச் சளியாலும் இருமலாலும் கஷ்டப்படுத்துவது; பின் ஒரு மாதத்தில் அவன் நோயைக் குணப்படுத்துவது இதுவே பணம் கறக்க நான் போட்ட படுபாதக பயங்கரத் திட்டம்!

"பணக்காரன்தானே? கொடுக்கட்டும் பணம்!" என்று எண்ணினேன்.

"ஆனால் பிள்ளைவாள்! நடந்ததென்ன?

கடவுள் என்னைத் தண்டித்துவிட்டார் என்று நான் நாணயத்தைக் கைவிட்டேனோ, வைத்தியத்திறமையும் என்னை கைவிட்டதோ என்னமோ? இல்லாவிட்டால் அவனுக்கு அதிகரிக்கச்செய்த ஜலதோஷமும் இருமலும் எலும்புருக்கி நோயாக கோர உருவமெடுக்குமோ? கூட்டத்தில் பேசிப்பேசிச்சளைத்த அவன் மார்புக் கூட்டிலே எளிதாக் க்ஷயம் பற்றிக்கொண்டுவிட்டது ஐயோ! அவன் இறந்துவிட்டால்?...நினைக்கவும் பயமாக இருக்கிறதே! அந்த மூதாட்டி எப்படி அழுதுவிட்டுப் போனாள்; நூறு நூறாகப் பணத்தைப் பறக்க விடுகிறாள்; நிச்சயமாக அவள் தாய்க்கெல்லாம் தாய் அவள் வயிறு பதைக்கும்படி ஆய்விட்டால் அதற்காக யார் பொறுப்பாளி, பிள்ளைவாள்? நான் கொலையாளி அல்லவா? நான் கொலையாளி அல்லவா?"

ஜம்புலிங்கம் அலறிவிட்டார்.

சின்னையா பிள்ளையின் முகம் அருவருப்பால் தொங்கிக்கிடந்தது அவர் ஒன்றும் பேசவில்லை அவர் தலை குனிந்துகொண்டே இருந்தார்

"நான் வாங்கிய பணம் தான் என்னாயிற்று; பிள்ளைவாள்? நூறு நூறாகக் கட்டிப் படிக்கவைத்த பிள்ளைக்கு பரீக்ஷை தவறிவிட்டது. பாவ வழியில் சம்பாதித்த பணம் என்னவாயிற்று பார்த்தீர்களா? பிள்ளைவாள்! என்ன பேசாமல் இருக்கிறீர்கள்? நான் செய்த செயல் உங்களுக்கே அவமானமாக இருக்கிறதில்லையா? நீங்கள் நன்றாக என்னைத் திட்டுங்கள்; அவதூறாகப், பேசுங்கள். அப்பொழுதான் எனக்குப் புத்திவரும் திட்டுங்கள்; ஊம்!"... என்று வைத்தியா சின்னையாவைப் பிடித்து உலுக்கினார்.

பிள்ளை தம் தலையை நிமிர்த்தி ஜம்புலிங்கத்தின் படபடக்கும் பரிதாபமான முகத்தைப் பார்த்தார. வறுமை எவ்வளவு நல்ல மனிதரையும் எத்தகைய நச்சுப்பரீக்ஷைகளில் இறக்கிவிடுகிறது!' என்று நினைத்துக்கொண்டார் ஜம்புலிங்கம் செய்த இழிசெயல் பிள்ளையின் உள்ளத்தைச் சுட்டது. அதற்காக அவா புத்தி சொல்ல விரும்பினார். ஆனால் வைத்தியரே தன் தவறை உணர்ந்துவிட்டார். கனியும் பழத்தைத் தடியால் அடிப்பது ஏன்? அடித்தால் அது பாழாகிவிடும் எனவே பிள்ளை வெறுப்பை அடக்கிக்கொண்டு சாந்தமாகப் பேசினார்.

"வைத்தியரே! உமது வைத்தியத் திறமையில் உமக்கு நம்பிக்கை இருக்கிறதில்லையா?"

"நான் செய்த பாவத்தை நான் உணர்கிறேன். எனக்கு நம்பிக்கை இருக்கிறது!"

"நீர், எத்தனையோ க்ஷயரோகிகளைக் குணப்படுத்தியது உண்டா இல்லையா?

"உண்டு!"

"வேண்டிய உயர்ந்த மருந்துகள் தயார் செய்ய உம்மிடம் பணம் இருக்கிறதா இல்லையா? இல்லாவிட்டால் சொல்லும்; நான் அந்த அம்மாளிடம் சொல்லி வாங்கித் தருகிறேன்!"

"பிள்ளைவாள், இன்னும் என்னைப் பணப்பேய் பிடித்தாட்டுகிறது என்று எண்ணுகிறீர்களா? இப்பொழுதுகூட மகராசி நூறு ரூபாய் கொடுத்துவிட்டுப் போனாகளே! இனி அப்பிள்ளையைக் குணப்படுத்தாது வேறு வேலையைக் கவனிப்பதில்லை ஒரு சல்லிக்காசு அவர்களிடம் வாங்க மாட்டேன்! என் நிலத்தை விற்றுவது அவனுக்கு மருந்து கொடுத்து குணப்படுத்தி நான் பண்ணிய பாவத்திற்குப் பிராயச்சித்தம் செய்துகொள்வேன்! என் பணப் பேய்க்கு பலியிடவிருக்கும் இளங்காளையையும், அதனால் மனம் ஒடிந்து இறக்கப்போகும். அவன் தாயையும் காப்பாற்றுவேன்!"

"சபாஷ்!" என்று கூவினார் சின்னையாபிள்ளை. வைத்தியா நடுங்கிக் கொண்டிருந்தார். அவன்தொண்டை நரம்புகள் உணர்ச்சியால் விம்மின. என்றும் காணாத அபூர்வ நம்பிக்கை ஒளி அவர் கண்களில் வீசியது.

குடும்பவைத்தியம்

5

தலைசுற்றல் மயக்கம்

★

மறுநாள் யதாப்ரகாரம் வந்த நண்பர் முரளி புன்சிரிப்புடன், முகமனியம்பினார் எனது வணக்கங்களையுந் தெரிவித்துக்கொண்டேன்.

நண்:— ஸார், காலையில் நமது நண்பர் ஸ்ரீமான் கார்வண்ணனைக் காண நேர்ந்தது அவருடன் நீங்கள் இதுவரையில் இந்த தலைசுற்றலைப் பற்றிச் சொன்ன விஷயங்களைப் பற்றிச் சொல்லவேண்டுமென்று யோசித்தேன் ஆனால் அவர் ரொம்ப "பிஸி"யாயிருந்தார், இன்னொரு சமயம் சொல்லலாமென்றிருந்து விட்டேன் விஷயங்களை அவர் ரொம்பவும் ரஸிப்பார்.

நான்: ஆமாம்...அப்படியா?.... என்று கவலைதோய்ந்த த்வனியில் சொன்னேன்.

ஸ்ரீமான் கார்வண்ணன் என்ற நண்பரை ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன் இதோ அறிமுகப் படுத்திவிடுகிறேன்.

மனுஷ்யன் ஆஜானுபாகு 'மானிற'மென்பார்களே — அதற்குச் சற்று குறைவு ஆனால் கருப்பல்ல நீண்ட முகம் ஆனால் ஒட்டிய தவடை கள் அல்ல பறந்த நெற்றியின்மேல் படிய வாரி விடப்பட்ட "க்ராப்" சற்றேனுங் கலைந்திருத்தலைப் பார்த்தவரே கிடையாது இங்கொன்று அங்கொன்று என உள்ள நரைமயிர் அடர்த்தியான கருத்த கேசங்களிடையேயேதோ அலங்காரத்திற்காகச் சூட்டப்பட்ட ஊசிமல்லியின் மொட்டுகள்போலிருக்கும் நீண்ட மூக்கும்— திடமான சித்தத்தைக்காட்டும் முகவாய்க்கட்டையும்— தன்னம்பிக்கை மிகுந்த மனதைத் தெரிவிக்கும் இட்டமான உதடுகளும்—ஆழ்ந்த யோசனையிலிருப்பதாகத் தெரிவிக்கும் கண்களும், முகப்பருவினாலேற்பட்டவையா? அன்றி நெடுநாட்களுக்கு முன்னேற்பட்ட அம்மைப் பாவுகளா என்று சொல்ல முடியாத ஒன்றிரண்டு தழும்புகளும், அப்போதுதான் ஸ்நானம் முடிந்து வருபவர்போன்ற முகத்துலக்கமும்— நூறு பேர் நடுவிலிருப்பினுமிவரைக்கண்டவுடன் "இவர்தான் கார்வண்ணன்" என்று தெரிவித்துவிடும் அகத்திலெழும் ஸந்தோஷம், துக்கம் விருப்பு வெறுப்பு, ஆச்சரியம், கலவரம் முதலிய உணர்ச்சிகளை ஒரு பொழுதும் இவர் முகத்தில் காண முடியாது இது இவருக்குப் பிறவியில் சித்தித்தா அன்றித் தனது சுயமுயற்சியால் இவர் பயின்றதா என்று சொல்ல முடியாது. பேச்சில் சுருக்கமானவர் வளவளவென்று பேசுவோரையும் ரஸிக்கமாட்டார். இலக்கணம், இலக்கியம், கட்டுரை, சிறுகதை, தொடர் கதை பிரசங்கம் வியாசம், விஞ்ஞானம் ஓவியம், ஸங்கீதம், நாட்டியம் முதலிய எல்லாக்கலைகளிலும் தேர்ச்சிபெற்றவர் இக்கலைகளின் வல்லவரின் மேதை எத்தன்மையது என்று நிர்ணயிக்கவல்ல 'உரைகல்லும், திராசும்" என்று சொல்லக்கூடிய திறம் பெற்றவர் ஸங்கீதத்தில் விசேஷ ஞானமும், ஸங்கீத வித்வான்களிடம் ஒரு பகுமானமும் உள்ளவர் என்று இவரோடு கொஞ்சம் பழகினாலுமே தெரிந்துவிடும். எப்பொழுதும் தன் ஜோலியே கருத்தாகவுள்ளவர் பிறருடைய விருப்பு வெறுப்புக்களைச் சற்றும் பொருட்படுத்தாது. தன் மனதில் பட்ட உண்மையைக் கொஞ்சமாவது கூச்சமின்றி. வெட்டொன்று துண்டிரண்டு என்ற முறையில் சொல்லக்கூடிய மனோதிடம் பெற்ற வெகு சிலருள் முதன்மை ஸ்தானம் பெறத் தக்கவர் இவரிடம் நமது "தலை சுற்றலைப்"பற்றித் தெரிவித்தால்........." என்று மனதில் ஒரு கலக்கமேற்பட்டது வெகு நேரமிக் கலக்கத்தில் தயங்கி நிற்கவொட்டாமல் நண்பர் முரளி நேற்று விட்ட இடத்திலிருந்து பாரதத்தைத் தொடங்கும்படி தூண்டினார்.

நான்:— [அசடு சொட்டும் முகத்துடன்] ஆமாம்; இல்லை...இதோ... வந்து...அதான் ஸார்...வந்து

நண்:—என்ன? வேறு எங்கோ ஞாபகம்போலிருக்கிறதே?

நான்:— இல்லை இல்லை நேற்று சொன்னேனே, அவ்விதம் தாதுப் பொருள்கள் உபரியாகி, அவை ரத்தக் குழாய்களில் வந்து தங்கவொட்டாமல் தடுப்பது அவசியம். அதாவது சரீரத்தில் தாதுப் பொருள்களை அதிகப்படுத்தக்கூடிய ஆகாரங்களைத் தடுப்பது அவசியம் இலேசில் ஜீரணிக்கக் கூடியதும் விபரீதமாக ஊட்டத்தைத் தடுப்பதுமான சாதாரண உணவுகளைத்தான் அதிகமாக உபயோகிக்கவேண்டும் பச்சைக்கறிகளும் முக்கியமாக கீரைகள் மற்றும் கமலா, சாத்துக்கொடி, பச்சை திராக்ஷைப் பழம் போன்ற நீரின் அம்சம் அதிகமுள்ளவைகளை உபயோகிப்பது நல்லது பருப்புகளில் பயத்தம் பருப்பு நல்லது. மலபந்தம், சந்தேஹத்திற்குஇடமில்லாமல் குடலைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுதல் அவசியம். இரவில் படுக்கப்போகும் நேரத்தில் பாதங்களில் மட்டும் (புறங்காலிலல்ல) ஆமணக்கின் எண்ணெயை அமர்த்தித் தேய்த்துக் கொண்டு படுத்தல் நல்லது அடிக்கடியும், முடியுமானால் தினமேயும் அப்யங்கம் செய்வது பரம உத்தமம். தினந்தோறும் அப்யங்கம் செய்வதால், வார்த்தக்யத்தின் வியவங்கள் விலகுமாம் தலைக்கு முன் சொன்ன தைலங்களை உபயோகிக்கலாம் நெல்லிக் கனியின் புளிப்பு—எலுமிச்சை இவற்றைக் கூட்டிக் கொள்ளலாம். இரவில் போஜனத்தை நிறுத்தி ஏதாவது பலகாரம், பழம் பால் இவற்றுடனிருப்பது நல்லது, பட்டினி போட வேண்டுமென்றல்ல. கொஞ்சங்கூடப் பசியானால் இளைப்பு

ஏற்படவிடக் கூடாது. ஆயினும் ஊட்டம்பெறும் வண்ணம் உண்டி வேண்டாம் அடிக்கடியும் பேதிக்குச் சாப்பிடும் பழக்கமுள்ளவருக்கு எச்சரிக்கை மலபந்தம்கூடாதுதான். ஆயினும் மலமே இல்லாமல் குடலை வைத்திருப்பதால் ஏற்படக்கூடிய தீமைகள். கொஞ்சம் மலம்தங்கி பந்தித்து நிற்பதால் விளையக்கூடிய கெடுதலைவிட மிகவும் அதிகமானதென்று வற்புறுத்திச் சொல்லவேண்டிய விஷயமாகும்.

ரத்தம் ஓடும் குழாய்களைச் சரிவர தமது விருத்தியிலிருத்தி நடப்பிக்கச் சில நரம்புகள் உண்டு. இவைகளை வாஸோமோடார் நரம்புகள் என்பர். ரத்த ஓட்டத்தின் வேகத்தைத் தாங்கக்கூடியவளவிற்கு ரத்தக்குழாய்கள் தமது விகாஸ ஆகுஞ்சனங்களைத் தாமே செய்துகொள்ளுமாறு பணித்தல் இந்நரம்புகளே. பல்வேறு காரணங்களாலும் இந்நரம்புகளில் அழற்சியும் உத்வேகமும் ஏற்பட, அதனால் ரத்தக் குழாய்கள் போதுமானவளவு விகாஸமாகவொட்டாமல் தடுக்கப்படலாம். அப்போது ரத்தஓட்டத்தின் வேகம் அதிகரித்துத் தோனவும் அதனால் தலை சுற்றல் மயக்கமூர்ச்சை ஏற்படவும்கூடும். மதுபானத்தினாலும் லாகிரி வஸ்துக்களின் ஸேவையாலும் இந்நிலைமை ஏற்படலாம். கொடுமையான பசியைச் சகிப்பதாலும், மனதில் எழும் வெறுப்பு கோபம்போன்ற உணர்ச்சிகளை அடக்கிக் கொள்வதாலும்; எல் மூக்கைத் துளைக்கும் வாஸனைத் திரவியங்களை முகர்வதாலும்கூட இந்நிலைமை ஏற்படலாம்.

சில ஸமயங்களில் இவ்விதமேற்படும் தலை சுற்றலும் மயக்கம் தாத்காலிகமாக விருந்து பிறகு தானே குறைந்துவிடலாம். தலைசுற்றல் தணிந்தாலும் சில சந்தர்ப்பங்களில் ரத்தஓட்டத்தின் வேகம் மட்டும் குறையாமலேயே இருக்கலாம். ஆகவே ஏதாவதொரு அற்பக் காரணத்தைமுன்னிட்டு இந்தவேகம் திடீரென்று அதிகரித்து மேலேசொன்ன விதமாக மூர்ச்சைமுதல் பாரிசவாய்வுவரையில் எந்த வியாதியையும் உண்டாக்கலாம்.

நிலப்பூசினி. நிலப்பனை அமுக்கிராங்கிழங்கு இவற்றில் ஒன்றையோ இரண்டையோ, மூன்றையுமேயோ சூரணஞ் செய்துவைத்துக்கொண்டு இவற்றுடன் கொஞ்சம் சீனைக் கல்கண்டின் பொடியுங் கூட்டிக்கொண்டு. தினம் இரண்டுவேளை கொஞ்சம் பாலுடன் சாப்பிட்டு வருவதாலும்,

சிற்றாமுட்டியின்வேர் கஷாயத்தில் சித்தாமுட்டியின் வேரையே கல்க்கமாக்கி எண்ணெயும் பசுவின் பாலுங் கூட்டிக் காய்ச்சிய தைலத்தைத் தினந்தோறும் தலைக்கும் உடம்பு முழுவதுமேயும் தாராளமாய்த் தேய்த்து ஸ்நாநம் செய்வதாலும். [6 11 49-மித்திரன் வாரப்பதிப்பில் க்ஷீரபலா என்ற தைலத்தின் விவரத்தைக் காண்க அதுவே தானிது] பாதாம் எண்ணெயைப் பாலில் ஒன்றிரண்டு ஸ்பூனளவில் இரவில் ஸேவித்துவருவதாலும் இந்நிலைமையை தடுக்கலாம். நரம்புகளின் அழற்சியும் உத்வேகமும் குறையும் என்று மட்டுமல்லாது, மனதும் எளிதில் தனது அமைதியை இழக்குந் தன்மையிலிருந்துவிடுபடும். மேலே சொன்ன சித்தாமுட்டி எண்ணெயை மடக்கி மடக்கிக் காய்ச்சி எடுத்ததை...

நண்:—புரியவில்லையே...ஸார்.

நான்:—ஐயா! 5 பலம் நல்லெண்ணெய் எடுத்துக் கொள்ளுங்கள் 5 பலம் சித்தாமுட்டி வேரை இடித்து 2 படி ஜலத்தில் ¼ படியாகச் சுண்டும் வரையில் காய்ச்சிக் கஷாயத்தை எடுத்துக்கொள்ளுங்கள் இரண்டையும் ஒன்றாய்க் கூட்டிக்கொள்ளுங்கள். இத்துடன் 1 பலம் சித்தாமுட்டி வேரையே வெண்ணெய்போல் அரைத்து, கல்கமாய்க் கூட்டிக் கொள்ளுங்கள் மற்றும் ½ படி பசுவின் பாலும் கூட்டிக் காய்ச்சி, அரக்கு பாகத்தில் வடிகட்டிக் கொள்ளுங்கள். எண்ணெய் பாகத்திற்கு வரும்போது ரொம்பவும் பொங்கி வரும் கல்க்கம் அடியில் பிடியாதபடி கிளறவும் முடியாது கிளறுமலிருக்கவும் முடியாது வெகு பெதுவாகத் தீயைக் கொடுத்துக் கொண்டும், கிளறிக் கொண்டும் பொங்கும்போது ஆற்றிக்கொண்டுமாகத்தான் காய்ச்சியாகவேண்டும் இப்படிக் காய்ச்சி எடுத்த தைலத்தை மறுபடியும் இதேபோல் கஷாயம் கல்கம்பால் இவற்றுடன் கூட்டி மறுபடியும் காய்ச்சவேண்டும். இப்படிப் பன்முறை செய்வதையே மடக்கு தைலம் என்பர். இவ்விதம் இதை 101 தரம் மடக்கிக் காய்ச்சி எடுத்ததை துளிக் கணக்கில் உள்ளுக்குக் கொடுப்பது மிகவும் நல்லது, பாரிசவாயுவிலும் இதை உள்ளுக்குக் கொடுப்பது பயன் பயக்கவல்லது. ஆனால் இப்படி மடக்கி மடக்கிக் காய்ச்சிக்கொண்டே போகும்போது எண்ணெயுடன் பாலின் வகையாய் வந்து கூடும் நெய்யும், சேருமாதலால் எண்ணெயின் அளவு கூடிக் கொண்டே வரும் இதைக் கண்டு மேற்சொன்ன விகிதமாகக் கஷாயத்தையும் கல்கத்தையும் பாலையுங்கூட அதிகப்படுத்திக்கொண்டே போகவேண்டும் கடைசியில் நெய்போலவேயுள்ள மருந்துதான் நிர்மாணமாகிக் கிடைக்கும் இதை உருக்கித்தான் துளிக் கணக்கில் உள்ளுக்குக் கொடுக்க வேண்டி வரும்.

நண்:—இதைத்தான் க்ஷீரபலா—101 தரம் மெடிகேடட் என்பது இதுதானா?

நான்:— ஆமாம் இதுவேதான். இந்த ஆவர்த்தித க்ஷீரபாலா (மடக்கு சிற்றாமுட்டித்தைலம்) அனேக விதங்களில் உதவுகிறது அவ்வப்போது ஸந்தர்ப்பத்தை யொட்டி இதன் உபயோக விவரங்களைச் சொல்கிறேன்.

நண்:—தான்வந்தர தைலம் என்பதை இச்சந்தர்ப்பங்களில் உபயோகிக்கக்கூடாதா?

நான்:— ஓஹோ! பேஷாய் உபயோகிக்கலாம். இதிலும் சிற்றாமுட்டியின் வேர்தான் முக்கியமான மருந்து அடுத்தபடி சொல்லக்கூடியது பசுவின்பால் மற்றும் கஷாயம் கல்கருமல்லாமும் உண்டு. இது தயார் செய்வது கொஞ்சம் கஷ்டம் இதற்குக் குறைந்ததல்ல க்ஷீரபலா தைலம் செய்வதும் ஸுலபம். ஆகவே அதைச் சொன்னேன்.

நண்:—நியாயந்தான் நாமே தயாரித்துக்கொள்ள முடியாததும்— அல்லது கிரமமானதுமான மருந்தைச் சொல்லித்தான் என்ன லாபம் அப்படி வேண்டிவந்தால் எங்கிருந்தாவது விலைக்கு வாங்கிக்கொண்டாலும் போதுமே.

நான்:—அவ்வளவுதான் சில ஸந்தர்ப்பங்களில் அதிக ரத்தம் உண்டாகி ரத்தக் குழாய்களில் அடங்க முடியாதவளவு உபரியாவதாலும். மேலே சொன்ன உபத்திரவங்கள் ஏற்படலாம் இதில் விசேஷமாக சரீரத்தில் ஒரு கனம் தோன்றுவதன்னியில் ஒரு வித சோம்பேரித்தனமும் உத்ஸாஹக் குறைவும் ஏற்படும். சரீரத்தில் ஓச்சலும் பலஹீனமுமுள்ள போது ஒரு வேலையும் செய்யமுடியாமைக்கும். ரத்தம் அதிகமான போது வந்துகூடும் சோம்பேறித்தனத்திற்கும் வித்யாஸமுண்டு. ஒன்றில் வேலை செய்யவேணுமென்ற சிரத்தையும் முயற்சியுமிருக்கும். ஆனால் செய்யமுடியாது மற்றொன்றில் வேலை செய்யவேண்டுமென்ற மனமும். ஊக்கமும் முயற்சியுமே இராது. மற்றும் ரத்தம் அதிகமாவதால் அக்கிபோன்ற சரும நோய்களும், ரத்தக் கட்டிகளும், ஈரல் வீக்கமும், வாத ரத்தம் என்ற வியாதியும், குஷ்டமுங்கூட உண்டாகலாம் என்று சாஸ்திரஞ் சொல்லும். மற்றும், ரத்தக்குழாய்கள் ரத்த ஓட்டத்தின் வேகத்தைத் தாங்க முடியாதவைகளாய் ஆங்காங்கு உடைபட்டு, ரத்தம் பெருக்கெடுத்து மூக்கு, வாய், கண், காதுகளின் வழியாகவும், மல மூத்ர த்வாரங்களின் வழியாகவும் மயிர்க்கால்கள் தோறுமாய்ச் சரீரம் முழுவதிலுமாக ஊறும் இதை ரத்த பித்தமென்பர் இதனால் ரத்தம் குறையலாம். ரத்த ஓட்டத்தின்

வேகமும் குறையலாம் ஆனால் அளவுக்கு மீறி இரத்த நஷ்டமேற்படாதபடியும், இதனால் வேறு உபத்ரவங்கள் ஏற்படாதபடியும் காப்பாற்றிக் கொள்வது ஒரு பெரிய காரியமாய்த் தீரும். எருமைப் பால் போன்ற கொழுப்பதிகமுள்ள பதார்த்தங்களை அதிகம் சேவிப்பவருக்கே ரத்தம் அதிகமாக விருத்தியாவது ஆகாராதிகளில் கட்டுப்பாடு வேண்டும். அடிக்கடியும், தலைசுற்றல் மயக்கம் (2) என்ற கட்டுரையில் சொன்ன விதத்தில் குடலைக் கழுவிக் கொள்ளல் அவசியம். இனிப்பு துவர்ப்பு, கசப்பு என்ற சுவையுள்ள பதார்த்தங்களையே அதிகமாக உபயோகிக்க வேண்டும்,

கோரைக் கிழங்கு சந்தனம் குருவேர் (இதைத் தென் நாட்டில் வெட்டி வேர் என்பர்) பற்பாடகம், விலாமிச்சன் வேர் (இதைச் சென்னையில் வெட்டி வேர் என்பர்) இவற்றின் கஷாயத்தைக் குளிர்ந்த பிறகு கல்கண்டுங் கூட்டிக் கொடுப்பது மேற்சொன்ன ரத்த பித்தத்திற்கு நல்லது.

அல்லது இக்கஷாயத்தில் கல்கண்டு கூட்டி ஒரு பானகம் காய்ச்சி வைத்துக் கொண்டு தினந்தோறும் உபயோகித்து வரலாம்.

ஆடாதோடையின் ரஸத்தில் கொஞ்சமாகத் தேனுங்கூட்டி அவ்வப்போது கொடுத்து வருவதால் ஒழுகும் ரத்தம் நிற்கும்.

வாத ரத்தமென்ற நோயிலும் முன் சொன்னது போலவே வயிற்றைக் கழித்தலும் அவசியம். பின் சீந்தில் கொடி இந்த ரோகத்தில் ஒற்றை மருந்தாய் உபயோகிப்பதால் மிகவும் பயன் தரத்தக்கதென்று பேர்பெற்றிருக்கிறது இந்த வாத ரத்தத்தில் சில ஸமயம் அட்டைகளைக் கடிப்பித்து ரத்தத்தை எடுக்க வேண்டியும் வரும் சரிவர சிகிச்சிக்காததாலும், வியாதி சிகிச்சைக்கு வசப்படாததாலும், ரத்த வாதத்தில் வரும் வீக்கம்பழுத்து கட்டிபோலாகி உடையும். பிறகு இது ஆறுவது சிரமம் மேற்சொன்ன இரண்டு வியாதிகளின் சிகிச்சாக்ரமங்களையும் வேறொரு ஸந்தர்ப்பத்தில் விஸ்தாரமாகச் சொல்கிறேன்.

நண்:—இந்த மற்றொரு சமயமும் விஸ்தாரமாகச் சொல்லுவதும், அனுமான் வால் போல் நீண்டுகொண்டே இருக்கிறதே

நான்:—ஆமாம் ஸ்வாமீ! விஷயங்களை விஸ்தாரமாகவும், விளக்கமாகவும் உங்களிடம் வளர்த்தி வளர்த்திச் சொல்லுவதில் எனக்கொரு ஆத்ம திருப்தி. சிரத்தையோடு கேட்டுப் பயன்படுத்திக் கொள்பவரல்லவா! மற்றும்—பிரங்கம் முதலான. ரோகங்களால் ரத்தத்தின் சீர்கெட்டும் ரத்தக் குழாய்களேயன்றி சரீரத்தில் பல்வேறு தாதுக்களும் ஆசயங்களுங்கூட பாதிக்கப்படுவதால் இந்தக் கோளாறு ஏற்படலாம்.

நண்:—பிரங்கமென்பது என்ன! இதுவும் வேறொரு ஸமயத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லவேண்டிய ரோகமோ?

நான்:—கோபிக்காதீர்கள். இப்பொழுதே ஸாமான்ய மனிதருக்குத் தெரியவேண்டிய வரையில் இந்த ரோகத்தைப்பற்றி ஒரே வார்த்தையில் சொல்லிவிடுகிறேன் இது அப்பிரஹ்மசர்யத்தில் நியமக்கேட்டினால் ஏற்படும் ஒரு கொடிய தொத்து வியாதி, ஒழுக்கம் தவறுபவருக்கல்லாது மற்றையோருக்கு இந்த வியாதியைப்பற்றிய பயம் வேண்டியதில்லை சீலம், ஒழுக்கம், கற்பு என்று எந்தப் பெயரால் அழைப்பினுஞ்சரி-மனுஷ்யன் ஒரு வரம்பிற்குட்படவில்லையானால்-அவன் மிருகத்தினுங் கேவலமாகி விடுவதன்னியில் இஹத்தில் கொடிய நோய்களுக்குள்ளாவதும், பலர் இகழ்ச்சிக்குப் பாத்திரமாவதுமன்றி பரத்தில் (நரகமுள்ள பக்ஷர்) என்னவாகுமோ வென்று சொல்லமுடியாத அனுபவங்களுக்கும் ஆளாகிறான். இதைத் தப்புவதற்கு வழியில்லையா—குணப்படுத்த வழியில்லையா என்றுகேட்காதீர்கள் தப்புவதற்கு வழி தன் சீலத்தை உயிரினும் பெரிதாய்க் காப்பாற்றிக் கொள்வதொன்றுதான் அப்படி யாராவது ஒரு நபர்—புலன்களின் சதிக்குத் தன்னைப் பலியாக்கிக் கொள்வனேல் அவன் தனக்காகவும் (தன் வாயிலாய் இந்நோய் வேறொருவருக்குத் தொத்தக்கூடாதென்ற தர்மசிந்தனை இருக்குமானால்) பிறருக்காகவுஞ்செய்யக்கூடியதுஒன்றுதான் அதாவது. உடனே தக்க வைத்தியரிடஞ் சென்று (ஒளியாமல்) தன் நோயை தெரிவித்துத் தக்க சிகிச்சையைப் பெறக்கடவன் ஸங்கோசத்தினாலோ, அபிமானத்தினாலோ—திறமையற்ற சிகிச்சைகள் பெறுவதால்—பாமரர் கண்ணுக்கு வியாதி குணமானதுபோல் தோன்றினாலும், வாஸ்தவத்தில் அப்படியின்றிக்கே, வியாதியானது சரீரத்தில் பலமாக வேரூன்றிக் காலக்கிரமத்தில் விபத்துக்களைச் செய்யும் அப்போது அதைக் குணப்படுத்துவது அவ்வளவு ஸுலபமாகாது இத்தலைப்பின்கீழ்—இதிலதிகம் நான் சொல்லப்போவதில்லை.

நண்:—ஆமாம் ஸார் நீங்கள் இவ்வளவு சொன்ன பிறகு தோன்றுகிறது பிரங்கம் என்றதாலே வெளிநாட்டிலிருந்து நம்மூரில் புகுத்தப்பட்ட கேடுகளில் இதுவும் ஒன்று—என்று விளங்குகிறது. ஒரு விஷயம், இந்நோய் நெடுநாள் நமது சரீரத்தில் ஊறிப் போவதால், மூளையைக் கெடுத்து காக்கைவலி. குதிரைவலி என்றெல்லாஞ் சொல்கிறார்களே, அவற்றையுங்கூட உண்டுபண்ணக் கூடுமோ?

நான்:—எதைச்செய்யும் எதைச் செய்யாது என்றில்லாமல்,எதையுஞ் செய்யும் என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிட்டேனே. இன்னும் இரண்டு மூன்று முக்கியமான விஷயங்களையுஞ் சொல்லவேண்டியிருக்கிறது, இன்று என்னவோ ரொம்ப களைப்பாய் இருக்கிறது. தயவுசெய்து மன்னிப்பீர்களானால், நாளையதினம் சொல்லுகிறேன். அதோடு இந்தத் தலை சுற்றலும் தீரும்

நண்:—ரொம்ப நல்லது—பாவம் ரெஸ்டு எடுத்துக்கொள்ளுங்கள். மேலும், பாடஞ்சொல்ல' உங்கள் வாத்தியாரும் வரும் வேளையாயிற்று. பாவம், அவருக்குத்தான் உங்களிடம் என்ன அன்பு ஸார்! ஒரு நாள்போல தானே இங்கு வந்து உங்களுக்குப் பாடஞ்சொல்லிக்கொடுத்து. ஆஹா!

நான்:—பழைய வழிகளில் நம்பகமுள்ளவர்களெல்லோருமே இப்படித்தான் ஸார். இச்சீரிய குணத்தைப் போற்றுவார் யாருமில்லை என்றே சொல்லலாம் இவரிடத்தில் புகழ வேண்டிய குணம் இதல்ல வெறுங் களிமண்ணாகிய என்னிடம் வெறுப்பு தோன்றாது எனக்கும் பாடஞ் சொல்லி வரும் பொறுமை இருக்கிறதே! அதைச் சொல்லுங்கள்

நண்: ஊஹூம் நான் அதை ஒப்புக்கொள்ளமாட்டேன். அவர் மாத்திரமென்ன, வெறும் விழலுக்கா தண்ணீர் பாய்ச்சுவார்? அடடா! நாளை நான் வர சற்று தாமதிக்கும், அதனால் மறுநாள் வரட்டுமா?

நான்:—வேண்டாமய்யா. நாளை ப்ரதோஷம். பாடமும் இல்லை நீங்கள் எப்பொழுது வந்தாலும் பாதகமில்லை, நாளையோடாவது இவ்விஷயம் முடியட்டும்.

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924.

பிரபல ஜோதிஷர்

★



மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசுபெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ 5. ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ 2 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

★

பண்டித காழியூர்
ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோ நிதி"
தியாகராய நகர், மதராஸ் 17.
தபால் பெட்டி 1417.



கொடி காட்டி அடையாளம் தெரிவிக்கும் பயிற்சி

விசாகை-கடற்படைப் பயிற்சி ஸ்தாபனம்

★

விசாகப்பட்டணத்தில் அமைக்கப்பட்டுள்ள ராயல் இந்தியக் கடற்படை சிறுவர்கள் பயிற்சி நிலையம் தனிச் சிறப்பு வாய்ந்ததொரு ஸ்தாபனமாகும் இந்தியாவின் வருங்கால மாலுமிகளை இந்த ஸ்தாபனம் உருவாக்கிவருகிறது. இந்தியக் கடற்படைக்குத் திரட்டப்படும் சிறுவர்கள் படைக்கு ஆள்திரட்டும் காரியாலயத்திலிருந்து நேராக இந்த இடத்துக்கு வந்து சேருகின்றனர். விசாகையிலுள்ள பிரதான பயிற்சிஸ்தலத்திலிருந்து இரண்டு மைல் தூரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் புதிய நுழைவு முகாமில் இவர்கள் முதலில் வரவேற்கப்படுகின்றனர். இந்த முகாமில் வைத்தியப் பரிசோதனை நடத்தப்பட்டு உத்தியோக நம்பர்கள் கொடுக்கப்படுகின்றன. ராணுவ உடைகள், படுக்கைகள், அன்றாட உபயோகத்துக்கு வேண்டிய சில பாத்திரங்கள் ஆகியவையும் இங்கு இவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. அதன் பிறகு, பயிற்சிப் பிரிவுகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர்கள் இந்த முகாமில் தங்கியிருக்கும் சுமார் 12 வார காலத்துக்கும் இந்த அதிகாரியே இச்சிறுவர்களின் "வழிகாட்டியாகவும், நண்பராகவும் ஆசிரியராகவும்" இருந்து வருவார்.

இந்தப் பயிற்சிஸ்தலத்தில் மொத்தம் நான்கு பயிற்சிப் பிரிவுகள் உள்ளன. இவற்றிற்கு முறையே அங்ரே, அர்ஜுன், அக்பர், அசோக் எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. இந்நான்கு பெயர்களும் "அ" கரத்தையே முதலெழுத்தாகக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ராணுவ பழக்க வழக்கங்களையும், கப்பல்கள்பற்றிய அடிப்படையான விஷயங்களையும் முதலில் கற்றுக் கொடுப்பதே இந்தமுகாமின் முக்கிய நோக்கமாகும். இவற்றுடன், கணிதம், சரித்திரம், பூகோளம் போன்ற பள்ளிக்கூடப் பாடங்கள் சிலவும்

இங்கு இவர்களுக்குப் போதிக்கப்படுகின்றன உடற்பயிற்சியும் வெளிவேலைப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. முகாமைச் சேர்ந்த வைத்திய அதிகாரி, உடல் நலம், சுகாதாரம் முதலிய விஷயங்கள் பற்றிப் பிரசங்கங்களும் நிகழ்த்துவார். இந்த பயிற்சி முடிந்ததும் சிறுவர்கள் பத்துப்பேர்கள்கொண்ட கோஷ்டிகளாகப் பார்த்துப் பரீட்சிக்கப்படுகின்றனர். அந்தப் பரீட்சை முடிவுகளை ஆதாரமாகக்கொண்டு ஸ்டோக்கர்கள், செய்திப் போக்குவரத்து சிப்பந்திகள். குமாஸ்தாக்கள் பேரன்ற கடற்படைகள் பல்வேறு பிரிவுகளுக்கும் இவர்கள் பிரித்தாளப்படுகின்றனர் இவ்விதமாக இவர்கள் இந்த முகாமிலிருந்து வெளியேறும்போது. கடற்படை சூழ்நிலையில் ஊறிப்போய், பிரதான பயிற்சி ஸ்தலத்தில் முறையான பயிற்சி பெறுவதற்குத் தகுதியுள்ளவர்களாக ஆகிவிடுகின்றனர்.

பிரதான பயிற்சி ஸ்தலத்திலும் இவர்களுடைய வாழ்க்கை, நுழைவு முகாமில் இருந்த மாதிரியேதான் இருக்கும். ஆனால், இங்கு போதிக்கப்படும் பாடங்களும் அளிக்கப்படும் பயிற்சியும் சற்றுக் கடுமையாக இருக்கும். எல்லாச் சிறுவர்களுக்கும் பள்ளிக்கூடப் பாடங்கள், துப்பாக்கிப் பயிற்சி, மாலுமிப் பயிற்சி, தேகாப்பியாசம் ஆகியவை கட்டாய பாடங்களாகப் போதிக்கப்படுகின்றன. வாரத்தில் பாதி நாள் இந்தப் பயிற்சிகளில் கழிந்துவிடும். பாக்கியுள்ள நாட்களில், செய்திப் போக்குவரத்து மாலுமிப் பயிற்சி முதலிய துறைகளில் விசேஷப் பயிற்சியளிக்கப்படும். மொத்தம் 60 வார காலம் இப்பயிற்சிகள் அளிக்கப்படும்.

எட்டாவது வாரத்தில் ஒரு பரீட்சை நடத்தப்படுகிறது இந்தப் பரீட்சையின் முடிவுகளை ஆதாரமாகக் கொண்டு பையன்கள் அவரவர் திறமைக்கேற்ப பல்வேறு பிரிவுகளுக்கும் மாற்றப்படுகின்றனர். இது இறுதியான பரீட்சையல்ல. பையன்கள் அவரவருக்குத் தகுதியான துறைகளில் பயிற்சியளிக்கப்படுகின்றனரா என்பதை மீண்டுமொரு முறை சரிபார்த்து. தவறுகள் நேர்ந்திருந்தால் அவற்றை ஒழுங்குபடுத்தும் பொருட்டே இப்பரீட்சை நடத்தப்படுகிறது. ஒரு சிறுவன் தகுதியற்றவனென்றோ, விரும்பத்தகாதவன் என்றோ கருதப்பட்டால் பயிற்சியின் எந்த கட்டத்திலும் அவனை வீட்டுக்கனுப்பி விடலாம் ஆனால், இறுதித் தேர்வு. 28-வது வாரத்திலோ அல்லது முடிவிலோ நடத்தப்படுவதுதான் வழக்கமாக இருந்துவருகிறது. பையன்கள் ஆரம்பத்தில் தெரிந்தெடுக்கப்படும்போதே அதிக கவனம் செலுத்தப்படுவதால், இறுதியாக வீட்டுக்குத் திருப்பி அனுப்பப்படும் அல்லது கீழ் வகுப்புக்குத் திருப்பி அனுப்பப்படும் பையன்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே இருக்கும்.

ஒரு மாலுமியைத் தயார் செய்வதில் தரைப்பயிற்சி மிக அவசியமென்றாலும், மொத்தப் பயிற்சியில் அது ஒரு அம்சமேயாகும். ஏனெனில் மாலுமியின் உண்மையான வேலை கடலில்தான் இருக்கிறது ஆனதால், பயிற்சிக்காக அங்கு வைக்கப்பட்டிருக்கும் எச். எம் ஐ எஸ் ராஜபுதனம் என்ற கப்பலில் இவர்களுக்குக் கடற்பயிற்சியளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி முடிந்ததும் எச். எம் ஐ. எஸ். டிர் என்ற கப்பலில் 15-வார காலம் சுயானுபவப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் சிலர் ஸ்க்வாட்ரனுக்கும் அனுப்பப்படுவார்கள்.

விசாகை பயிற்சி ஸ்தலத்தில் துப்பாக்கிப் பயிற்சி, மின்சார வேலை, எஞ்சின் வேலை, செய்திப் போக்குவரத்து ஆகிய துறைகளில் விசேஷப் பயிற்சியளிக்கப்படுகிறது ஒவ்வொரு பிரிவும் ஒரு அதிகாரியின் மேற்பார்வையில் இருந்துவருகிறது எல்லாப் பிரிவுகளும் பயிற்சி ஸ்தலத்தின் கடற்படைத் தலைமை அதிகாரியின் அதிகாரத்துக்குட்பட்டு வேலைசெய்து வரும். இந்தப் பயிற்சி ஸ்தலத்துக்கு எச் எம். ஐ. எஸ். ஸர்க்கார் என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. விசாகையிலுள்ள பயிற்சி சிப்பந்திகள் தவிர, கடற்படை தள சிப்பந்திகள் சிலரும் இங்கு இருக்கின்றனர். தள வைத்திய அதிகாரியொருவரும் சப்ளை அதிகாரியொருவரும் இருக்கின்றனர். க்ஷேமாபிவிருத்தி அதிகாரியும், கேளிக்கை அதிகாரியொருவரும் இருக்கின்றனர்.

இவ்வாறாக, விசாகையில் ஒரு முதல்தரமான பொதுஜனப் பள்ளிக்கூடமே நடத்தப்பட்டு வருகிறது. கல்விமான்களைத் தயாரிப்பது இதன் நோக்கமல்ல. ஆனால், நாட்டிற்கு கல்விமான்கள் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமாயிருக்கும் மாலுமிகளைத் தயார் செய்வதையே இந்த ஸ்தாபனம் தனது லட்சியமாகக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் சிறுவர்கள் இந்த ஸ்தலத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். படிப்போ, கைவேலைத் திறமையோ சிறிதும் இல்லாத சிறுவர்களை, தேக வலிமையும், கட்டுப்பாடான வாழ்க்கையும், உன்னதமான சேவையில் உறுதியான நம்பிக்கையும் கொண்ட உற்சாகமுள்ள மாலுமிகளாகவும் வீரர்களாகவும் இந்த ஸ்தாபனம் உருவாக்கிவருகிறது. இது ஒரு மகத்தான சாதனையேயாகும்; ஆனால், இதைப்பற்றிப் படித்தால் மாத்திரம் போதாது. நேரில் வந்து பார்க்கவும் வேண்டும். மாலுமிகளுக்கான பள்ளிக்கூடத்தை நேரில் பார்க்க விரும்புபவர்கள் பயிற்சி ஸ்தல தலைமை அதிகாரிக்குத் தெரியப்படுத்தினால் அவர்களை வரவேற்று உபசரிக்க அந்த அதிகாரி எப்பொழுதும் சித்தமாக இருக்கிறார்.

இம்மாதம் 1-ந் தேதி கவர்னர் ஜெனரல் ராஜாஜி டில்லியிலுள்ள ரோஷனாரா நந்தவனத்துக்கு விஜயம் செய்தார். அங்கு அவர் குழந்தைகளின் "மேளா" விற்குத் தலைமை வகித்தார். இது அ. இ. பால்கன்-ஜி-பாரீ சங்க ஆதரவில் நடந்த வைபவம். அப்போது எடுத்த படமிது.

அட்டைப்படம்

மாலை நந்நேரத்தில் மலை உச்சியில் தன்னந் தனியாக நின்று மாதவனை வணங்குகிறார் ஒரு பக்தர். நீருண்ட மேகங்கள் வான வீதியில் ஸஞ்சரிக்கின்ற அற்புதமான ஒரு காட்சி.

ஆஸ்த்மா அபாயத்தை

அனுபவ ஸம்மதமான மருந்தினுல்தான் தடுக்கலாம்

தாற்காலிகமான குணத்தை சீக்கிரத்தில் கொடுக்கும் மருந்துகள் கடைசியில் வியாதியை முற்றவைக்கின்றன. பலவருஷ அனுபவத்தைக் கொண்டு தயாரித்த "புரோஹித் ஸ்வாஸஹாரி" தான் சாஸ்திரீக முறையில் கைகண்ட ஔஷதமாக அனுமானிக்கப்பட்டிருக்கிறது.

புரோஹித் ஸ்வாஸஹாரி ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தை க்கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரையீரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6, ரூ 10. பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்" விலாசத்திற் கெழுதி பெற்றுக் கொள்ளலாம்.

மதருஸ் ஸ்டாகிஸ்டுகள்: (1) அப்பா & கோ, சைனு பஜார் (2) ஜெ. பல்பாய் & கோ, 260, சைனு பஜார் ரோட் (3) தாதா & கோ, நைநியப் நாயக் கன் தெரு.

மதுரை ஸ்டாகிஸ்டு: என். ஆர். ஸவாமி கோ.மிஸ்ட்.

புரோஹித ஸ்வாஸஹாரி

ஆருடம். ஜாதக பலன்

ஜனனகால விவரம் அல்லது முழுப் பெயர் சுமார் வயது செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் தேவை. 1 முதல் 5 எதிர்கால கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ 2. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூ. 6. முக்ய யோகாம்சங்களும் சுருக்கமான பலனுடன் ஒரு ஜாதக குறிப்புக்கு ரூ. 5. ஒரு தசைக்கு புக்திவாரி பலன் எழுத ரூ. 10 கிரஹசார தோஷம் நீங்கி சகல நன்மைகளும் உண்டாவதற்கு "விஜய ரக்ஷனி" கவசம் 1-க்கு ரூ. 7-8-0. பிரத்யேக ரக்ஷை ரூ. 72/8. வி. பி. செலவு தனி

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist,
Triplicane : Madras 5



1.

எங்கும் வளமை மிகுத்திட வே
ஏற்றம் யாவும் இயைந்திட வே
தங்கும் உண்மை தழைத்திட வே
தாயகம் என்றும் சிறந்திட வே
திங்கள் வதனச் சேயிழையார்
தங்கள் கற்பில் உயர்ந்திடவே
பொங்கல் திருநாள் பூத்ததெனப்
பொலிவாய்க் கூறிப் புகழ்ந்திடுவோம்!

2.

புகழ்வோர் நந்தம் நாட்டினிலே
புனிதச் செயல்கள் புரிந்திட்டப்
பெரியோர் போலப் பலசேய்கள்
பிறந்திடும் என்றே இன்பாக,
இகழ்வே யற்று நம்மக்கள்
எழிலாய் வாழப் பொங்கலெனத்
திகழ் இந் நாளில் இறைபாதம்
துதிசெய் வோமே நாமெல்லாம்!

3.

எல்லாம் இந்த நாள்முதலாய்
இன்பாய் இலக வேண்டுமென
வெல்லம், பருப்பு நெய், ஏலம்
விளைந்த புதிய நெல் அரிசி
எல்லாம் சேர்த்து இன்பாகப்
பொங்கல் செய்து படைத்தன்பாய்
பொல்லாங் கின்றிப் பணிகின்றோம்
புரிவாய் இறைவா பேரருளே!

'சிம்ம கர்ஜனை' பள்ளிக்கூடத்தின் இரண்டாம் வகுப்பில் குரங்கு வாத்தியார் செய்யுள் பாடத்தை ஆரம்பித்தது.

"'அறம் செய விரும்பு,' இதற்கு அர்த்தம் என்ன, தெரியுமாடா குட்டிகளே?" என்று கேட்டது வாத்தியார்.

"தெரியும் சார். அறம் - மரத்தை அறுக்கும் அறத்தை, செய்ய - உபயோகிக்க, விரும்பு - நீ ஆசைப்படு" என்றது நரிக்குட்டி.

எல்லா மிருகக் குட்டிகளும் சிரித்தன. வாத்தியாருக்கு கோபம் வந்துவிட்டது.

"சட் வாயை மூடு. அறம் - தர்மத்தை, செய - நீ செய்ய விரும்பு - நீ ஆசைப்படு. எழுதிக் கொள்ளுங்கள்"

ஆனால் ஒன்றுவது எழுதிக் கொண்டால்தானே. குரங்காருக்கு கோபம் கோபமாக வந்தது. இதை எல்லாம் வெளியே நின்று கவனித்துக்கொண்டிருந்த ஹெட்மாஸ்டர் சிங்கம் உள்ளே வந்து குரங்கின் காதில் ஏதோ சொல்லிற்று. உடனே குரங்கின் முகம் பிரகாசமடைந்தது.

"குட்டிகளே, நான் இப்பொழுது ஒரு கதை சொல்லப்போகிறேன். கேளுங்கள்" என்று ஆரம்பித்தது குரங்கார். உடனே வகுப்பில் நிசப்தம் நிலவியது.

குரங்கார் கதைசொல்ல ஆரம்பித்தது.

I

அறம் செய விரும்பு

★

ஒரு காட்டில் இரண்டு சிங்கக் குட்டிகள் வசித்து வந்தன. ஒன்றின் பெயர் மிருக பூபதி, மற்றொன்றின் பெயர் சிம்ம பூபதி. மிருக பூபதி பெரிய பணக்கார வீட்டு குட்டி. சிம்ம பூபதியோ ஏழை வீட்டு குட்டி. மிருக பூபதியின் தந்தை பெரிய பணக்காரனாதலால் அது மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டது. வீட்டில் அது வைத்ததுதான் சட்டம். அதோடுகூட நல்ல சகவாஸம் இல்லாததால் அதற்கு கெட்ட குணங்களே படிந்தன. சிம்ம பூபதி ஏழை வீட்டு குட்டியாதலால் அதன் பெற்றோர்கள் அதன் இஷ்டானுபோகமாக அதை வளர்க்க முடியவில்லை. அதோடு மட்டுமல்லாமல் அதற்கு நல்லுரைகளும் போதித்து வந்தனர். அதனால் அது நல்ல குட்டியாகவே வளர்ந்து வந்தது பிறருடைய துன்பத்தையும் அது தனதாகப் பாவித்து வந்தது. ஏழையானதால் ஏழையுடைய கஷ்டத்தை நன்கு அறிந்து தன்னால் முடிந்த உபகாரத்தையும் செய்து வந்தது. மிருக பூபதியோ இவ்வளவு பணக்காரனாக இருந்தும், தர்மம் என்பதையே செய்யாமலிருந்தது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், துர்நடத்தையே பூஷணமாகக் கொண்ட மிருக பூபதி சிம்ம பூபதியோடு கூடவும் சிநேகமாக இருந்ததே. ஆனால் நல்ல புத்திமதிகளை மட்டும் காதில் போட்டுக்கொள்ளாது.

ஒரு நாள் மிருக பூபதியும் சிம்மபூபதியும் காட்டில் திரிந்து கொண்டிருந்தன. அப்பொழுது ஒரு அணில் மரத்தின் மீது இங்கும் அங்கும் திரிந்துகொண்டிருந்தது. அதைக் கண்ட மிருக பூபதி அதை எவ்விதமாகவாவது பிடித்து நசுக்கிவிடவேண்டுமென்று அதைப்பிடிக்க பலவிதத்திலும் முயன்றது. சிம்ம பூபதியோ அணில் ஒன்றும் அறியாத சிறிய ஜந்துவென்றும், அதைப்பிடிக்க வேண்டாமென்றும், எவ்வளவோ புத்திமதி சொல்லியும் அது கேட்கவில்லை.

இச்சமயத்தில் தள்ளாடி தள்ளாடிக்கொண்டு கிழிந்த உடைகளை தரித்த ஒரு ஏழை நரிக்குட்டி அங்கு வந்து சேர்ந்தது. "அப்பா சிங்கக் குட்டிகளே. நான் ரொம்ப ஏழை. சாப்பிட்டு நாலு நாட்களாகி

றது. உங்களிடம் ஏதாவது காசிருந்தால் கொடுங்களேன்" என்றது.

அணிலைப் பிடிக்கும் மும்முரத்தில் இருந்த மிருக பூபதிக்கு கோபம் வந்தது.

"சட், தூர போ. நான் அணில் பிடிப்பது தெரியவில்லை உனக்கு? பிச்சை கேட்க வந்துட்டான் பிச்சை."

"ஒரு சின்ன தருமம் பண்ணும், சாமி" என்று நரி மறுபடி கேட்டது.

"இங்கு தருமமுமில்லை, கருமமில்லை. பணம் இருந்தாலும் தருமம் செயய முடியாது போ" என்றது மிருக பூபதி.

அருகில் நின்றுகொண்டிருந்த சிம்ம பூபதிக்கு அந்த நரியிடம் பச்சாதாபம் உண்டாயிற்று. உடனே அது தன் ஷர்ட் பையை தடவியது. அதில் அதனுடைய தந்தை பொங்கலுக்காக கொடுத்த ஒரு ரூபாய் இருந்தது. உடனே பொங்கலுக்கு என்ன செய்வது என்று கூட யோசியாமல் அந்த பணத்தை நரியிடம் கொடுத்துவிட்டது. நரிக்கு ஒரு ரூபாயைக் கண்டதும் ஆச்சரியமாகப் போய்விட்டது.

"என் ஒரு வேளை சாப்பாட்டிற்கு 4 அணா போதுமே. பாக்கியை நீயே வைத்துக்கொள்" என்று நன்றி ததும்ப கூறிற்று.

"பாதகமில்லை. உன்னைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. நீயே வைத்து கொள்" என்றது சிம்ம பூபதி.

நரி சந்தோஷத்துடன் சென்றது. சிம்ம பூபதியின் செய்கையைக் கண்டு மிருக பூபதி அதை பரிகசித்தது ஆனால் சிம்ம பூபதி வேறு பதில் ஒன்றும் சொல்லாமல் 'தருமம் தலை காக்கும்' என்று மட்டும் சொல்லிற்று.

இவ்விதமாக சில நாட்கள் கழிந்தன. மிருக பூபதியின் தந்தை திடீரென காலமாகியது. மிருக பூபதிக்கு இன்னும் முற்றின வயதாகவில்லையாதலால், அதனால் அது தந்தை சேர்த்து வைத்த பணத்தை சரிவர கவனித்துக்கொள்ள முடியவில்லை. மேலும் அதற்கு கெட்ட தோஷங்கள் உண்டாதலால் அதன் பணமெல்லாம கரைந்து விட்டது. தெருவில் பிச்சை எடுக்கும் நிலைமைக்கு அது வந்து விட்டது. அது மிகுந்த வருத்தமடைந்து தன்னுடைய சிநேகிதன் சிம்ம பூபதியின் வீட்டை அடைந்து என்னை நீ தான் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லிற்று. சிம்ம பூபதி அதன் நிலையைக் கண்டு மனமிரங்கி அதை தன் வீட்டில் வைத்துக் கொண்டது. ஆனால் ஏழையான அதனால் அதை எவ்வளவு நாட்கள் தான் வைத்துக்காப்பாற்ற முடியும். இருந்தாலும் வாய் திறவாமல், தான் உண்ணும் ஆகாரத்தில் அதற்கும் கொஞ்சம் கொடுத்து வந்தது.

இவ்விதம் இரண்டும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் பொழுது ஒரு நாள் வாசலில் ஒரு வண்டி வந்து நின்றது அதிலிருந்து ஒரு நரி ஆடம்பர அலங்காரத்துடன் தட்டுகள் நிறைய ஆடைகள், பழம், வெற்றிலை, புஷ்பம் சகிதம் கீழே இறங்கி வந்து சிம்ம பூபதியின் காலில் வந்துவிழுந்தது. சிம்ம பூபதிக்கு ஒன்றும் புரியவில்லை.

"நீ யார்?" என்று கேட்டது.

"நான் யார் என்று தெரியவில்லையா? நீ ஒரு நாள் காட்டில் இருக்கும்பொழுது ஒரு ஏழை நரிக்கு ஒரு ரூபாய் தானம் செய்தது நினைவில்லையா? அந்த ஏழை நரிதான் நான். நீ கொடுத்த ஒரு ரூபாயில் அன்றைய சாப்பாடு போக மிச்சத்தில் சில பண்டங்கள் வாங்கி விற்றேன். அதில் லாபம் வந்தது. அந்த லாபத்தைக் கொண்டு மறுநாளும் சாமான் வாங்கி விற்றேன். இம்மாதிரி லாபத்தைக்கொண்டே வியாபாரம் நடத்தி பெருத்த வியாபாரியானேன். நீ தர்மம் கொடுத்த வேளை இவ்விதம் நான் நல்ல நிலைமைக்கு வந்துவிட்டேன். எல்லாம் சின்னப் பையனான உன் தருமம்தான் காரணம். நீ சின்னப் பையனாக இருந்தாலும் தருமம் செயவதால் உலகத்தில் உன்னை பெரியவனாகக் கருதி உன் காலில் விழுந்தேன். இனி

நீ என் வீட்டிலேயே இருந்து உன் வாழ்நாளை சுகமாக கழிக்க வேண்டும். என் வியாபாரத்தின் முதலாளி நீதான்'' என்று நரி கூறி முடித்தது.

மிருக பூபதிக்கு எல்லாம் ஆச்சரியமாக இருநதது. எங்கே தன்னை தனியாக விட்டு விட்டு சிம்ம பூபதி போய்விடுமோ என்றும் அதற்கு பயம் வந்தது. ஆனால் சிம்ம பூபதி சொல்லிற்று. ''எல்லாம் கேட்க ரொம்பவும் சந்தோஷம். நானும் உங்களுடன் வரத்தயங்கவில்லை ஆனால் என்னை நம்பி வந்திருக்கும் சிநேகிதனை விட்டு வர எனக்கு மனதில்லை. அவனையும் அழைத்து வரலாமென்றால் வருகிறேன்'' என்றது.

உடனே நரி ''அதற்கென்ன? உன் உசிதம்போல் செய்'' என்றது.

சிம்ம பூபதி மிருக பூபதியிடம் ''பார்த்தாயா, தருமம் செய்யும் வேலையை. எப்பொழுதும் தருமத்தை செய்ய ஆசைப்பட வேண்டும்'' என்றது.

அன்றைய தினத்திலிருந்து மிருக பூபதியும் சிம்ம பூபதியும் நரியின் வீட்டில் வசித்தன. மிருக பூபதியோ இப்பொழுது 'கொடை வள்ளல்' என்ற பட்டம் கிடைக்கும்படியான தர்மத்தைச் செய்கிறது.

குட்டிகளே, ஆகையால் நீங்களும் சிம்ம பூபதியைப்போல் தருமம்செய்ய விரும்பவேண்டும். இப்பொழுது எழுதிக்கொள்ளுங்கள் ''அறம்-தர்மத்தை, செய—(நீ)செய்ய,விரும்பு ஆசைப்படு,'' என்று குரங்குவாத்தியார் கூறி முடித்தது.

கதை சுவாரஸ்யத்தில் இருந்த குட்டிகள வாத்தியார் சொல்வதை வாய்திறவாமல் எழுதிக் கொண்டன.

''சரி, அடுத்தவாரம் 'ஆறுவது சினம்'' சொல்லித்தருகிறேன்'' என்று குரங்கார் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே மணி அடித்தது.

17856

சேலம்
மூன்று தாமரை
பீடிகளை உபயோகித்து
சந்தோஷமடையுங்கள்
Estd: 1920
S.A.H.
Rgd.No.2221.
Prop: S அஹமத் உசேன்,
கோட்டை, சேலம் S.I.R.

''எலிக்ஸிர் அஸ்வகந்தா''
மஹரிஷிகள் ஆயுர்வேத உதவியால் ஆயுள் பலம், தேக புஷ்டி, ஆரோக்யம், யௌவனம் இவை அனுபவித்து உதவி அருளிய சிறரத்த விருத்தி லேகியம் இது. தொடர்ந்து உட்கொள்ள மலபந்தம் நீங்கி, வயிறு, முதுகு, இடுப்புவலிகள் ஒழிந்து, நல்ல பசியையும் நித்திரையையும் உண்டுபண்ணும். இல்லற வாழ்க்கையில் இணையில்லா இன்பமளிக்கும். தவிர, இரத்த மூலம், குடல் வாய்வு, குடல் இறக்கம் இவைகளைக் குணப்படுத்தும். வயோதிகரை வாலிபர் என எண்ணச் செய்யும் ஔஷதம் எமது ''எலிக்ஸிர் அஸ்வகந்தா''வே
40 தோலா கொண்ட டின் ரூ. 10
தபால் செலவு பிரத்யேகம்.
ஆயுர்வேத பண்டிட்
T. V. ஜெயராம சாஸ்திரிகள்,
வீரராகவ வைத்தியசாலா,
ஸ்ரீரங்கம் P. O S. I.

இந்த அற்புதமான
PEPS
பெப்ஸ், இருமல், சளி, குளிர்ச்சி, இன்புளூயன்ஸாவை
நிறுத்தும்
பெப்ஸ் வில்லைகளை மென்றவுடன் மருந்து சத்துக்கள் சுவாசத்துடன், தொண்டைக்கும் சுவாசப்பைக்கும் சென்று அபாயகரமான கிருமிகளை உடனே கொன்று, ரணத்தையும் எரிச்சலையும் நீக்கும், இருமல் நின்று சுவாசம் சுலபமாகும் சாப்பிட ருசியானது.
PEPS
கிருமி நாச தொண்டை & மார்பு வில்லைகள்
மார்பு & சுவாச நோய்களுக்கு அற்புத நிவாரணி
ஏஜண்டுகள்: தாதா & கோ, பி. டி. மதராஸ்.

அதிகமாக அரிசி உற்பத்தி செய்வதற்காக சாகுபடியைத் தீவிரமாக்கினேர்கள். படத்தில் பாருங்கள் அறுபத்த காலத்தில் கஷ்டப்பட்டவர்கள் நிவாரணத்துக்காகவும், வெள்ளக் கஷ்டத்தால் அவதிப்படுபவர்களுக்கும் உதவி செய்யப்பட்டது. இந்தியாவிலும் இவ்வாறு செய்வதற்கு இப்போது பலவிதங்களில் அவசியமுண்டல்லவா?



...ப்பு போதுமென்று கருதுகிற...

. No. 2514.

Chakrapani Iyengar at t
Road, Madras. Edito